www.padippakam.com

# புதிய ஜனநாயகம்

பிப்ரவரி 2009
ரூ. 7.00



## ஈழம்:
## கொலைகாரக் கூட்டணியின் தமிழின அழிப்புப் போர்!

# தமிழகமே, விழித்தெழு! போராடு!!

படிப்பகம்

www.padippakam.com

முதலாளித்துவம் கொல்லும்! கம்யூனிசமே வெல்லும்!

## முதலாளித்துவ பயங்கரவாத எதிர்ப்பு மாநாடு:

# நொறுங்கி விழுகிறது முதலாளித்துவப் பொருளாதாரம்! உயர்ந்து எழுகிறது செங்கொடி!

உலக முதலாளித்துவம் நெருக்கடிக்குள் சிக்கி விழுந்து நொறுங்கிக் கொண்டிருக்கிறது. இந்த நெருக்கடியிலிருந்து மீண்டுவர, வேலை பறிப்பு, சம்பளவெட்டு, வேலை நேரம் அதிகரிப்பு - கூடுதல் பணிச் சுமை எனத் தொழிலாளிகளை ஒட்டச் சுரண்டி வெறியாட்டம் போடுகிறது முதலாளித்துவம். இந்த முதலாளித்துவ இலாபவெறியை எதிர்த்து முறியடிக்கத் தொழிலாளிகள் வர்க்கமாக அணிதிரள வேண்டும் என்ற அடிப்படையில் புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணியின் சார்பில், சென்னை- அம்பத்தூரில், ஒரகடம் அருகே எஸ்.வி.நகர் டாக்டர் அம்பேத்கர் கால்பந்து மைதானத்தில், ஜனவரி 25 அன்று **முதலாளித்துவ பயங்கரவாத எதிர்ப்பு மாநாடு** நடத்தப்பட்டது.

இந்த மாநாட்டிற்காக சுமார் இரண்டு மாத காலம் வீடு வீடாக, பேருந்துகளில், இரயில்களில், கடைவீதிகளில் எனப் பலதரப்பட்ட வடிவங்களில் பிரச்சாரம் மேற்கொள்ளப் பட்டது. இலட்சக்கணக்கில் பிரசுரங்கள், பல்லாயிரக் கணக்கில் சுவரொட்டிகளுடன் திருவள்ளூர், காஞ்சிபுரம், சென்னை ஆகிய மூன்று மாவட்டங்களின் தொழிற்சாலைப் பகுதிகளில் இந்தப் பிரச்சாரம் வீச்சாகச் செய்யப்பட்டது. குறிப்பாக, ஜனவரி-9 அன்று பு.ஜ.தொ.மு.வின் இணைப்புச் சங்க தோழர்கள் சுமார் 70 பேர் வேலைக்கு விடுப்பு எடுத்து, சென்னை மாநகராட்சி மற்றும் அதன் புறநகர் பகுதிகளின், பேருந்து நிறுத்தங்களிலும், ரயில் நிலையங்களிலும், கடை வீதிகளிலும் பிரச்சாரம் செய்தனர்.

முதலாளித்துவ நெருக்கடி கோரத்தாண்டவமாடும் சூழலில், அந்த நெருக்கடிக்குக் காரணமான இலாபவெறியை அம்பலப்படுத்திச் செய்யப்பட்ட இந்தபிரச்சாரம், மக்களை வெகுவாகக் கவர்ந்திருந்தது. குறிப்பாக பெண்களும், மாணவர்களும் தாமாகவே முன்வந்து நிதியுதவி அளித்தனர். பு.ஜ.தொ.மு.வின் இணைப்புச் சங்கத்தைச் சேர்ந்த நூற்றுக் கணக்கான தொழிலாளிகள் இந்த பிரச்சாரங்களில் பங்கேற்று, மக்களின் உரிமைப் போராட்டத்திற்குத் தலைமை தாங்கும் வல்லமை உடையது தொழிலாளி வர்க்கம்தான் என உணர்த்தினர்.

பு.ஜ.தொ.மு.வின் மாநிலத் தலைவர் தோழர் அ.முகுந்தன் தலைமையில் ஜனவரி 25 அன்று காலை, செங்கொடி ஏற்றி, வர்க்கப் போராட்டத்தில் உயிர்நீத்த தியாகிகளுக்கு வீரவணக்கம் செலுத்திய பின் மாநாடு தொடங்கியது. கருத்தரங்க அரங்கிற்கு தஞ்சையில் கள்ளச் சாராயக் கும்பலை எதிர்த்துப் போராடி உயிர்நீத்த தியாகத் தோழர் பீட்டர் அந்தோணியின் பெயர் சூட்டப்பட்டது. வறுமை, பட்டினி என்ற பேரழிவு ஏற்படுத்தும் ஆயுதங்களைக் கொண்டு முதலாளித்துவம் தொழிலாளிகளையும், பிற உழைக்கும் மக்களையும் அடிபணிய வைக்கும் பயங்கரவாதத்தை எதிர்த்து முறியடிக்க, தொழிலாளிகள் அனைவரும் வர்க்கமாய் அணிதிரள வேண்டும் என்று உரையாற்றினார், மாநாட்டுத் தலைவர், தோழர் முகுந்தன்.

கருத்தரங்கச் சிறப்புரையில், முதலில் ம.க.இ.க. தோழர் துரை.சண்முகம் உரையாற்றினார். முதலாளித்துவ வர்க்கம் அதன் இயல்பிலேயே இழிவானது என்பதைக் கேலியுடன் சுட்டிக் காட்டினார். அதேவேளையில், தொழிலாளி வர்க்கம் தன் வரலாற்று மதிப்பை உணராமல், தன் இதயத்திற்கும் மேலான வர்க்க உணர்வை இழந்திருக்கிறது என்பதை இடித்துரைத்து, தொழிலாளிகள் வர்க்க உணர்வுடன் ஒன்றிணைய வேண்டும் என்று வலியுறுத்திப் பேசினார்.

அடுத்ததாக, கர்நாடகா உயர்நீதி மன்ற வழக்குரைஞர் தோழர் சி.பாலன் தன்னுடைய சிறப்புரையில் அமைப்பு சாரா தொழிலாளிகளின் நிலை பற்றியும், அவர்களின் சட்ட உரிமைகள் எப்படி பறிக்கப்படுகின்றன என்பதையும் விளக்கினார். ஒப்பந்த முதலாளி என்றாலே கிரிமினல்தான் என்று இடித்துரைத்தார். ஒப்பந்தத் தொழிலாளிகள் அணிதிரண்டு

தொடர்ச்சி 35-ஆம் பக்கம்

மாநாடு (இடது) மற்றும் பொதுக்கூட்டத்தில் ஆர்வத்துடன் கலந்து கொண்ட மக்கள் திரளின் ஒரு பகுதி.







படிப்பகம்

www.padippakam.com


# புதிய ஜனநாயகம்

*மார்க்சிய-லெனினிய அரசியல் ஏடு*

தொகுதி: 24

**இதழ் 4**

பிப்ரவரி 2009

உள்நாடு
தனிஇதழ்: ரூ. 7.00
ஆண்டுசந்தா: ரூ. 90.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 20



படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத் தொடர்புக்கும்

புதிய ஜனநாயகம்,
110, இரண்டாம் தளம்,
63, என்.எஸ்.கே. சாலை,
(அ.பெ.எண்: 2355)
கோடம்பாக்கம்,
சென்னை - 600 024.
தொலைபேசி : 94446 32561


### இந்திய - சிங்கள அரசுகளின் ஈழத் தமிழின அழிப்புப் போர்!

# தமிழகமே, விழித்தெழு! போராடு!!

இறுதித் தாக்குதலுக்கான மூர்க்கத்துடன் கடந்த நான்கு மாத காலமாக சிங்கள இனவெறி இராணுவம், ஈழத்தமிழ் மக்களுக்கு எதிரான கொடிய போரைத் தீவிர மாக நடத்தி வருகிறது. பயங்கரவாதப் புலிகளுக்கு எதிரான போர் என்ற பெயரில், கிளிநொச்சி நகரைத் தரைமட்டமாக்கியும் முல்லைத் தீவைச் சுற்றி வளைத்துத் தொடர்ந்து தாக்குதல் நடத்தியும், ஒட்டு மொத்த தமிழினத்தையும் வேரோடு அழிக் கும் கொடூர போரை நடத்தி ஈழத்தைச் சுடுகாடாக்கி வருகிறது.

தப்பியோடும் போது கைப்பிடித்து வந்த உறவுகளை குண்டுத் தாக்குதலில் பறி கொடுத்து, பிணமாக வீதியோரங்களில் விட்டுச் செல்லும் அவலம்; தென்திசைக் காற் றில் கந்தக நெடியுடன் வீசும் பிணவாடை; உணவில்லை; மருந்தில்லை; குடியிருக்கக் குடிசையுமில்லை; எல்லாவற்றுக்கும் மேலாக அடுத்த கணம் உயிரோடு இருப்பதற் கான உத்தரவாதமே இல்லை. வன்னி நிலப்பரப்பெங்கும் பரந்து விரிந்து வாழ்ந்த நான்கு இலட்சம் ஈழத் தமிழர்கள், இன்று முல்லைத் தீவின் காட்டுப்பகுதிகளில் விரட்டி முடக்கப்பட்டுள்ளனர். தமிழன் வாழ்விடங்களை அழித்து, தமிழன் உயிர்க ளைக் குடித்து கிளிநொச்சி, ஆனையிறவு, பரந்தன், நெடுங்கேணி, ஒட்டுசுட்டான் என விரிந்து ஆக்கிரமித்துள்ள சிங்கள இராணுவம், முல்லைத் தீவு முழுவதையும் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்துவிட்டதாகக் கொக்கரிக்கிறது.

முல்லைத் தீவு பகுதியில் சிங்கள இராணுவத்தின் குண்டு வீச்சுத் தாக்குதலில் ஒரே நாளில் 300-க்கும் மேற்பட்ட ஈழத் தமிழ் மக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள். முல்லைத் தீவின் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில், இடைத்தங்கல் முகாம் - சிவிலியன்களுக்கான பாதுகாப்பு வளையம் என்று இலங்கை அரசு அறிவித்துள்ள பகுதிகளில் மக்களுக்கு உணவோ, மருந்துப் பொருட்களோ இல்லை. அதுமட்டு மல்ல; முட்கம்பிகளால் சூழப்பட்ட அப்பாதுகாப்புப் பகுதியில் தஞ்சம் புகுந்துள்ள மக்களின் மீதே ஏவுகணைத் தாக்குதல் நடத்தி வருகிறது, சிங்கள இராணுவம். இப்ப குதியின் மருத்துவமனை மீது நடத்தப்பட்டுள்ள குண்டு வீச்சுத் தாக்குதலில் சர்வ தேச செஞ்சிலுவைச் சங்கப் பணியாளர்களே காயமடைந்துள்ளனர். புலிகள், மக்க ளைக் கேடயமாகப் பயன்படுத்துவதால்தான் இத்தகைய உயிரிழப்புகள் ஏற்படு வதாகக் கூறி, தனது கிரிமினல் குற்றங்களை மறைத்துக் கொள்கிறது, சிங்கள அரசு. எனினும் இந்தியா, பாகிஸ்தான், சீனா முதல் அமெரிக்கா வரையிலான நாடுகளின் முழு ஆதரவோடு இந்தப் போரை சிங்கள அரசு நடத்தி வருவதால், இந்தப் படு கொலைக்கு எதிராக சம்பிரதாயமான ஒரு கண்டனம் கூட யாரிடமிருந்தும் வெளி வரவில்லை.

குறிப்பாக, இந்தப் போரில் சிங்கள அரசு ஈட்டிவரும் வெற்றிகள் குறித்து தமிழ கத்தின் பாசிச ஜெயா, ''துக்ளக்'' சோ, ''இந்து'' ராம், சுப்ரமணிய சாமி முதலான பார்ப்பன கும்பலும் பார்ப்பன ஊடகங்களும் மனம் கொள்ளாத மகிழ்ச்சியில் திளைக்கின்றன. அந்த மகிழ்ச்சியை வெளிக்காட்டிக் கொள்ளாமல், 'அப்பாவித் தமி ழர்கள்' போரினால் பாதிக்கப்படுவது குறித்து பெரிதும் கவலைப்படுவதுபோல் நடிக்கின்றன.

இந்தியா, இலங்கைக்குப் பீரங்கிகள் அனுப்பியிருக்கிறது என்பதும், அதுவும் தமிழகம் வழியாகவே அனுப்பப்பட்டிருக்கிறது என்பதும் இப்போது அம்பலமாகி யிருக்கிறது. பரந்தன் - முல்லைத்தீவு நெடுஞ்சாலை (ஏ-35) அருகேயுள்ள விசுவ மடு அணைக்கட்டைத் தகர்த்து, சிங்கள இராணுவம் முன்னேற முடியாதபடி புலிகள் எதிர்த்தாக்குதல் நடத்தியதில் கொல்லப்பட்ட ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிங்களசிப் பாய்களோடு, சிங்கள இராணுவச் சீருடையணிந்த இந்திய சிப்பாய்கள் 200 பேர் வரை கொல்லப்பட்டுள்ளார்கள் என்ற செய்தியும் மெதுவாகக் கசியத் தொடங்கி யுள்ளது. எனினும், ''தமிழ்நாட்டிலிருந்து எவ்வித அரசியல் அழுத்தம் எழுந்தாலும், ராஜபக்சே நடத்தும் இந்தப் போரை எக்காரணம் கொண்டும் தடுப்பதில்லை என்ற முடிவில் இந்தியா உறுதியாக உள்ளது'' என்று கூறுகிறது, அனைத்துலகச் செய்தி நிறுவ மான ராய்டர்.

''வெளியுறவுத் துறை செயலர் சிவசங்கர் மேனன் இலங்கை சென்றால் போதாது; வெளியுறவுத் துறை அமைச்சர் பிரணாப் முகர்ஜி கொழும்பு செல்ல வேண்டும்'' என்ற கோரிக்கையை ஏதோ மைய அரசை நிர்ப்பந்திக்கும் மிகப் பயங்கரமான தொரு கோரிக்கை போல வைத்தது, தி.மு.க. அரசு. ''பிரணாப் முகர்ஜி இலங்கை

படிப்பகம்

www.padippakam.com

செல்கிறார்'' என்ற செய்தியை அமைச்சர் அன்பழகன் தமிழக சட்டமன்றத்தில் தெரிவித்தவுடன், உறுப்பினர்கள் மேசையைத் தட்டி ஆரவாரம் செய்தனர்.



ஆனால் பத்திரிக்கை செய்திகளோ இந்தக் கேலிக்கூத்தை அம்பலமாக்கியிருக்கிறது. ''புலிகளுக்கு எதிரான போரை நிறுத்த வேண்டும் என்று தமிழகத்தில் உள்ள சில கட்சிகள் வைத்து வரும் கோரிக்கைக்கும் பிரணாப் முகர்ஜியின் கொழும்பு விஜயத்துக்கும் எந்தவிதமான தொடர்பும் இல்லை என்பதை கொழும்புவில் உள்ள இந்தியத் தூதரக அதிகாரிகள் பெரிதும் வலியுறுத்திக் கூறினர்'' என்கிறது ''இந்து'' நாளேடு. ''எங்களுடைய அழைப்பின் பேரில் தான் பிரணாப் முகர்ஜி இலங்கை வந்துள்ளார்'' என்று தெளிவுபடுத்தியிருக்கிறார்கள் இலங்கை அரசின் வெளியுறவுத்துறை அதிகாரிகள். ''புலிகள் மீது இந்திய அரசுக்கு எவ்வித அனுதாபமும் கிடையாது. இந்த மோதலில் அப்பாவி மக்கள் பலியாகக் கூடாது என்பது மட்டுமே எமது கவலை'' என்று கூறியிருக்கிறார் பிரணாப் முகர்ஜி.



தன்னை தீயிட்டுக் கொண்டு தமிழனின் சொரணையற்றத் தன்மையை சுட்டுப் பொசுக்கிய தியாகம்; ஈழப் போரை தடுத்து நிறுத்தக் கோரி தீக்குளித்து மாண்ட முத்துக்குமார்.

இப்படியாக, பிரணாப் முகர்ஜியின் கொழும்பு விஜயம் என்பது தி.மு.க. மற்றும் அதன் கூட்டணிக் கட்சிகளை ஆறுதல் படுத்துவதற்கான கண்துடைப்பு நடவடிக்கை கூட அல்ல என்று அப்பட்டமாக அம்பலமாகி விட்டது. இருப்பினும், பிரணாப் முகர்ஜியின் கூற்றுக்கு புதிய பொழிப்புரை எழுதி விளக்கமளித்துக் கொண்டிருக்கிறார், அமைச்சர் அன்பழகன். ஈழத் தமிழர் பிரச்சினையை, அரசியலற்ற மனிதாபிமானப் பிரச்சினையாகவும், இந்திய அரசின் கருணையை எதிர்பார்த்துக் காத்திருக்கும் பிரச்சினையாகவும் தமிழகத்தின் ஓட்டுக் கட்சிகள் மாற்றின. இதனை இந்திய ஆளும் வர்க்கங்களும் சிங்கள அரசும் தமக்குச் சாதகமாக மாற்றிக் கொண்டு விட்டன. ''போர் நிறுத்தம் கிடையாது; ஈழத் தமிழருக்கு சுயநிர்ணய உரிமையும் கிடையாது. இராணுவத்துக்கும், புலிகளுக்குமிடையே நடக்கும் போரில் அப்பாவி மக்கள் கொல்லப்படுவதுதான் பிரச்சினை'' என்பதாக பிரச்சினை சுருக்கப்பட்டு விட்டது. ''அவ்வாறு கொல்லப்படுவதற்குக் காரணம், சிங்கள இராணுவத்தின் தாக்குதல் அல்ல; மக்களைக் கேடயமாகப் பயன்படுத்தும் புலிகள்தான். எனவே ஜனவரி 29-ஆம் தேதி இரவு 12 மணி முதல் 48 மணி நேரம் அவகாசம் தந்து போரை நிறுத்துகிறோம். அதற்குள் மக்கள் பாதுகாப்பாக வெளியேற புலிகள் அனுமதிக்க வேண்டும்'' என்று கெடு விதிக்கிறார், சிங்கள இனவெறி அதிபர். இந்தப் 'போர்நிறுத்தத்தை' இந்திய அரசும் வரவேற்றுள்ளது.

தமிழக ஓட்டுக் கட்சிகளின் வேடதாரி அரசியலுக்கு நடுவே, போர் நிறுத்தம் கோரி தமிழகத்தில் மாணவர்கள் உள்ளிட்ட பல பிரிவினரின் தன்னெழுச்சியான போராட்டங்கள் தொடர்கின்றன. சென்னை-கொளத்தூரை சேர்ந்த முத்துக்குமார் என்ற இளைஞர், தமிழரைக் கொன்று குவிக்கும் சிங்கள இனவெறி அரசின் போரைத் தடுக்குமாறு முழக்கமிட்டுக் கொண்டே, மத்திய அமைச்சக அலுவலகங்கள் உள்ள சென்னை சாஸ்திரிபவன் வளாகத்தில் தீக்குளித்து மாண்டு போயுள்ளார். உணர்ச்சி வேகத்தில் அவர் செய்த செயல் தவறானதாக விமர்சிக்கப்பட்ட போதிலும், தமிழகம் இன்னமும் சொரணையற்றுக் கிடப்பதைக் கண்ட அவரது குமுறலின் வெளிப்பாடுதான் இது என்பதை மறுக்க முடியாது. ஈழத் தமிழர் பிரச்சினையை அரசியலற்ற மனிதாபிமான பிரச்சினையாக தமிழக ஓட்டுக் கட்சிகள் மாற்றிவிட்டதால், அநீதியான இப்போரை நிறுத்த வேண்டுமென்ற மக்களின் உணர்வு ஒரு அரசியல் எழுச்சியாக இன்னமும் உருவெடுக்கவில்லை. இதனால், தமிழீழ ஆதரவாளர்கள் உள்ளிட்டு போர் நிறுத்தம் கோருவோர் அனைவரது போராட்டங்களும் தவிர்க்கவியலாமல் ஒரு முட்டுச் சந்தில் சிக்கியுள்ளன.

பற்றிப் பரவும் மாணவர் போராட்டம்.



காசுமீரிலும், வடகிழக்கு மாநிலங்களிலும் உள்ள மக்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை துப்பாக்கி முனையில் ஒடுக்கிவரும் இந்திய அரசு, ஈழ மக்களின் சுயநிர்ணய உரிமைக்காகக் குரல் கொடுக்கும் என்று நம்புவது பகற்கனவு மட்டுமல்ல; இந்திய பிராந்திய மேலாதிக்க அரசின் கொலைவெறி முகத்தை மறைக்கும் மக்கள் விரோதச் செயலுமாகும். தமிழகம் இனியும் சொரணையின்றி கிடப்பதில் பொருளில்லை. சிங்கள பாசிச இனவெறி அரசுக்கும், அதன் கொலைகாரக் கூட்டாளியான இந்திய பிராந்திய மேலாதிக்க அரசுக்கும் எதிராக தமிழகம் பொங்கியெழ வேண்டிய தருணமிது! முடங்க வேண்டிய நிர்பந்தம் சந்தர்ப்பவாதிகளுக்கும் ஓட்டுக் கட்சி பிழைப்புவாதிகளுக்கும்தான் இருக்கிறது.

கிளிநொச்சி வீழ்ந்தாலென்ன, முல்லைத்தீவு வீழ்ந்தாலென்ன; வென்றதில்லை இனவெறி ஆதிக்கம்! ஓயப் போவதுமில்லை தமிழீழ மக்களின் சுயநிர்ணய உரிமைப் போர்! அப்போருக்கு ஆதரவாகத் தமிழகமே, விழித்தெழு! போராடு!! ●


படிப்பகம்

www.padippakam.com

# சாராய அதிபரின் ஏவல்நாயாக போலீசு - நீதித்துறை!

புதுக்கோட்டை மாவட்டம், கந்தர்வக்கோட்டை நகருக்கு அருகிலுள்ள கல்லாக்கோட்டையில் அமைந்துவரும் ''கால்ஸ்'' சாராய ஆலையை எதிர்த்து அப்பகுதி விவசாயிகளும், பொதுமக்களும் நடத்தி வரும் போராட்டத்திற்கு ம.க.இ.க., பு.மா.இ.மு., வி.வி.மு. ஆகிய புரட்சிகர அமைப்புகள் ஆதரவு கொடுத்து வருவதையும்; அதே சமயம், பொது மக்களின் ஊழியர்கள் எனச் சொல்லிக் கொண்டு திரியும் நீதி மன்றமும் போலீசும் கால்ஸ் ஆலையை எப்பாடுபட்டாவது இயங்கச் செய்துவிட வேண்டும் என்பதற்காகப் பல சதி வேலைகளைச் சட்டப்படியே செய்து வருவதையும் நமது வாசகர்கள் நன்கு அறிந்திருக்கக்கூடும். (பார்க்க: புதிய ஜன நாயகம் டிசம்பர் 2008 மற்றும் ஜனவரி 2009).

அப்பகுதி மக்கள் இச்சீமைச் சாராய ஆலையை எதிர்த்துச் சமரசமின்றியும் விடாப்பிடியாகவும் பல்வேறு வழிகளில் போராடி வரும் நிலையில் கடந்த 27.12.2008 அன்று போலீசு பாதுகாப்புடன் சாராய ஆலைக்குக் கட்டுமானப் பொருட்களை ஏற்றி வந்த லாரிகளைப் பொதுமக்கள் மறித்தனர். உடனடியாகவே எவ்வித எச்சரிக்கையும் செய்யாமல், முபாரக் ஜான் என்ற துணை ஆய்வாளர் பொதுமக்கள் மீது தாக்குதல் நடத்த உத்தரவிட்டார். இத்தாக்குதலில் இருந்து தப்பிக்கச் சிதறிய ஓடிய பொதுமக்களை போலீசு விரட்டிவிரட்டித் தாக்கியது. குறிப்பாக, பெண்கள் குறி வைத்துத் தாக்கப்பட்டனர். போலீசு தப்பியோடிய பொதுமக்களின் மீது மரக் கட்டைகளை எடுத்து வீசித் தாக்கியதில் ரவி என்ற இளைஞரின் மண்டை உடைந்து போனது. மேலும், கலவரத்தைத் தூண்டிவிட வேண்டும் என்ற நோக்கத்தில் லாரிகளில் பதுக்கி வைக்கப்பட்டிருந்த ஜல்லிக் கற்களை எடுத்து வீசியும் போலீசு தாக்குதல் தொடுத்தது.

தப்பியோடிக் கொண்டிருந்த பொதுமக்கள் ஒரு கட்டத்தில் அடுப்பெரிக்கக் குவித்து வைக்கப்பட்டிருந்த விறகுக் கட்டைகளை எடுத்துக் கொண்டு எதிர்த் தாக்குதல் தொடுத்துத் தங்களைத் தற்காத்துக் கொள்ள முயன்றனர். பொது மக்களின் அடி எப்படியிருக்கும் என்பதை அப்போலீசு கும்பல் அன்று ருசி பார்த்தது.

இச்சம்பவம் நடந்த சில மணி நேரத்திலேயே, மாவட்ட போலீசு கண்காணிப்பாளர் மூர்த்தி தலைமையில் ஒரு பெரும் போலீசு பட்டாளம் கல்லாக்கோட்டையை முற்றுகையிட்டது. போலீசு பட்டாளம் வருவதை முன்பே பார்த்துவிட்ட பெரும்பாலான பொதுமக்கள் தங்கள் குழந்தை குட்டிகளோடு ஊருக்கு அருகாமையிலிருந்த காட்டுப் பகுதிக்குள் ஓடி ஒளிந்து கொண்டனர். ஊருக்குள் நுழைந்த போலீசு பட்டாளமோ தப்பிப் போக இயலாத முதியவர்கள், கர்ப்பிணிப் பெண்களைத் தாக்கியதோடு, 28 பேரை அடித்துப் போட்டு அள்ளிக் கொண்டு போனது. மேலும், 160 பேர் மீது பல்வேறு குற்றச்சாட்டுக்களின் கீழ் பொய்வழக்குகளும் போடப்பட்டன. ஊருக்குள் யாரும் நுழைந்துவிடாதபடி போலீசின் கண்காணிப்புப் போடப்பட்டதோடு, அந்த வழியாகச் சென்றுவரும் பேருந்துகளும் சோதனையிடப்பட்டன. சீமைச் சாராய ஆலைக்கு எதிராகப் போராடிவரும் உள்ளூர் மக்களைப் பயங்கரவாதிகள் என முத்திரை குத்தாததுதான் பாக்கி. மற்றபடி கல்லாக்கோட்டை சுற்றுவட்டாரமே பய பீதிக்கு உள்ளாக்கப்பட்டது.

கைது செய்யப்பட்ட 28 பேரும் திருமயம் போலீசு நிலையத்தில் அடைத்து வைக்கப்பட்டுக் கடுமையாகத் தாக்கப்பட்டனர். பெருமாள் என்ற துணை ஆய்வாளர் தலைமையில் இத்தாக்குதலும் சித்திரவதையும் நடந்தன.

திருமயம் 'நீதிபதி' சாந்தி, கைது செய்யப்பட்டவர்கள் சட்ட விரோதமான முறையில் தாக்கப்பட்டதையோ, அவர்கள் தரப்பு நியாயங்களையோ காது கொடுத்துக் கேட்காதது மட்டுமல்ல, அவர்கள் முகத்தைக்கூடப் பார்க்காமல் சிறையிலிட உத்தரவிட்டுத் தனது 'கடமையை'ச் சரிவர செய்து முடித்தார். இதற்கான பலன் என்ன கிடைத்ததோ? உள்ளூர் பத்திரிகைகளோ போலீசின் அவதூறுகளையே செய்தியாக வாந்தியெடுத்தன.

தி.மு.க.வின் பெரும் புள்ளிகள் இச்சீமைச் சாராய ஆலையில் மூலதனம் போட்டிருப்பதாகக் கூறப்படுவதால், அதிகார வர்க்கமே கால்ஸ் ஆலையின் காலடியில் விழுந்து கிடப்பதைக் காண முடிந்தது. குறிப்பாக, கைது செய்யப்பட்ட 28 பேரையும் பிணையில் எடுக்க முயன்றபொழுது, அதற்குத் தேவையான சான்றிதழ்களைத் தரக்கூட கிராம நிர்வாக அலுவலர்கள் மறுத்துவிட்டனர்.

கால்ஸ் ஆலைக்கு போலீசு அடியாளாகச் செயல்பட்டு கல்லாக்கோட்டை பொதுமக்களை மிருகத்தனமாகத் தாக்கியதையும்; நீதிபதி சாந்தி இதற்கு ஒத்தூதியதையும் அம்பலப்ப



www.padippakam.com

டுத்தி ம.க.இ.க., பு.மா.இ.மு. மற்றும் வி.வி.மு. சார்பாகச் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டன. மேலும், மனித உரிமை பாதுகாப்பு மையத்தைச் சேர்ந்த வழக்குரைஞர்களும், அவ்வமைப்பைச் சேர்ந்த பிற தோழர்களும் கல்லாக்கோட்டை கிராமத்திற்கு நேரடியாக வந்து, இத்தாக்குதல் பற்றி பொதுமக்களிடம் விசாரித்து அறிந்தனர். அவர்கள் இத்தாக்குதல் பற்றிய உண்மைகளை ஓர் அறிக்கையாகத் தயாரித்து, அதனை மாவட்ட ஆட்சியரிடம் கொடுத்து, சட்ட விரோதமாக நடந்து கொண்ட போலீசு அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கோரினர்.

இதனையடுத்து மனித உரிமை பாதுகாப்பு மையம் சார்பில் போலீசாரின் அட்டூழியத்தைக் கண்டித்தும், கால்ஸ் ஆலையை அப்புறப்படுத்தக் கோரியும் கந்தர்வக்கோட்டை போலீசு நிலையம் அருகில் 08.01.2009 அன்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. இந்த ஆர்ப்பாட்டத்தில் மனித உரிமை பாதுகாப்பு மையத்தைச் சேர்ந்த வழக்குரைஞர்களும் அமைப்பாளர்களும் மட்டுமின்றி, ம.க.இ.க. மாநில இணைச் செயலர் தோழர் காளியப்பன், பு.மா.இ.மு. மாநில ஒருங்கிணைப்பாளர் தோழர் பரமானந்தம் மற்றும் புதுகை பகுதியில் இயங்கி வரும் தமிழ் உணர்வாளர்கள் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் திரு. தரணி ம. ரமேசு, சாதி ஆதிக்க எதிர்ப்பு கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் தோழர் மு.ரெங்கசாமி, இளைய சிங்க இயக்கத்தின் தலைவர் தோழர் கே.கே.கார்த்திகேயன், புதுகையைச் சேர்ந்த பல் மருத்துவர் என். ஜெயராமன் ஆகியோரும் உரையாற்றினர்.

பெரும் போலீசு பட்டாளத்தைக் குவித்துப் பீதியூட்டி ஆர்ப்பாட்டத்தில் பொதுமக்கள் பங்கேற்பதைத் தடுத்துவிட போலீசார் முயன்றனர். மேலும், வழக்கத்திற்கு மாறாக ஆர்ப்பாட்டம் நடந்த பகுதி வழியாக போக்குவரத்தை மாற்றியமைத்து ஆர்ப்பாட்டத்தைப் பிசுபிசுக்கச் செய்துவிடவும் போலீசார் முயன்றனர். எனினும், அப்பகுதி மக்கள் பெருந்திரளாக கலந்துகொண்டு போலீசாரின் சதிகளை முறியடித்து ஆர்ப்பாட்டத்தை வெற்றியடையச் செய்தனர். போலீசு மட்டுமல்ல, கால்ஸ் ஆலையின் பினாமி முதலாளிகளும் மக்கள் சக்தியை எதிர்த்து நிற்க முடியாமல் தோற்றோடிப்போகும் நாள் வெகுதொலைவில் இல்லை.

—பு.ஜ.செய்தியாளர்கள்

# பசுபதி நாதர் ஆலயப் பிரச்சினை: பாரம்பரியமா? பிராந்திய ஆதிக்கமா?

மக்களின் பேராதரவுடன் ஆயுதப் போராட்டம் நடத்தி, மன்னர் ஆட்சியைத் தூக்கியெறிந்த நேபாள மாவோயிஸ்ட் கட்சியை அரசியல் நிர்ணய சபையில் இருந்து வெளியேற வைத்து, மீண்டும் ஆயுதப் போராட்ட பாதைக்குத் திருப்பித் தனிமைப்படுத்துவது எனும் செயல் உத்தியை நேபாளத்தில் இருக்கும் எதிர்ப்புரட்சி கும்பல்கள் ஒன்றுபட்டு செயல்படுத்தி வருகின்றன. நேபாளத்தில் அன்றாடம் நடக்கும் அற்ப விசயங்களைக் கூடப் பூதாகரமாக்கி மாவோயிஸ்டுகள் தலைமையிலான அரசுக்கு நெருக்கடியை ஏற்படுத்தி எரிச்சலூட்டுவதில் அங்கிருக்கும் போலி கம்யூனிஸ்ட் கட்சியும் நேபாள காங்கிரசு கட்சியும் கை கோர்த்துச் செயல்படுகின்றன. இதற்கு இந்திய அரசியல் கட்சிகள் உள்ளிட்ட அன்னிய சக்திகளும், கிரீடத்தை இழந்த மன்னரும் துணை நிற்கின்றனர். அண்மையில் பரபரப்பாகப் பேசப்பட்ட காத்மண்டு பசுபதி நாதர் கோவில் விவகாரம் இதைத்தான் உணர்த்துகிறது.

நீண்ட காலமாக தென்னிந்திய பார்ப்பனர்களைத்தான் பசுபதிநாதர் சிவாலயத்தின் தலைமை அர்ச்சகர்களாக நேபாள மன்னராட்சி நியமித்து வந்தது. தனக்கு ஏற்பட்டிருக்கும் தீராத முதுகுவலியின் காரணமாக செப்டம்பர் 2008-இல் தலைமைக் குருவான மகாபலீஸ்வர பட் வேலையை விட்டு விலகினார். மேலும் இரண்டு பட்டர்களும் அடுத்தடுத்து விலகினர். பல நூற்றாண்டுகளாக பசுபதி நாதருக்கு தென்கன்னடத்தைச் சேர்ந்த பட்டர்களையும், மராட்டி, தெலுங்குப் பார்ப்பனர்களையும் நியமிப்பது மரபாக இருந்தபோதிலும் 'தகுதியுள்ள நேபாள நாட்டவரையே நியமிக்க வேண்டும்' என்ற நேபாளப் பார்ப்பனர்களின் கோரிக்கை, தொடர்ச்சியாக எழுப்பப்பட்டு வந்திருக்கிறது. எனவே, இம்முறை காலியான இடங்களில் நேபாள நாட்டில் சமஸ்கிருதத்தில் தேர்ச்சிப் பெற்றவர்களை அர்ச்சகர்களாக புதிய நேபாள அரசு நியமித்தது.

நேபாள மன்னரால் நியமிக்கப்படும் தலைமைக்குருவுக்கு அளவு கடந்த அதிகாரமும் வழங்கப்பட்டிருந்தது. அவர் நினைக்கும் ஆட்களையே கோவிலின் இதர அர்ச்சகர்களாக அவரே நியமித்துக் கொள்ளலாம். மன்னராட்சி வீழ்த்தப்பட்டு, புதிய அரசு பொறுப்பேற்ற பிறகுதான், அதுவரை கோடிக்கணக்கில் கோவிலின் பணம் கொள்ளையடிக்கப்பட்டிருந்தது வெளியே தெரியவந்தது. பசுபதி பகுதி வளர்ச்சி அறக்கட்டளையின் பொறுப்பிலிருந்து மன்னர் ஞானேந்திராவும், ராணி கோமலும் துரத்தப்பட்டு, அரசின் கட்டுப்பாட்டுக்குள் கோவில் கொண்டுவரப்பட்டது. புரோகிதர்கள் வக்கிரமான பாலியல் வேட்டை நடத்தி வந்ததும் கண்டறியப்பட்டு அவர்கள் மக்களால் நையப் புடைக்கப்பட்டிருக்கின்றனர். பசுபதிநாதருக்கு பூசை செய்யும் பிஷ்ணுதாஸ் எனும் 30 வயது புரோகிதன், சென்ற ஜூன் மாதத்தில் கோவிலுக்கு அருகில் விளையாடிக்கொண்டிருந்த ஆறு வயது சிறுமியை சாக்லேட் தருவதாகச் சொல்லி ஏமாற்றி அழைத்துச் சென்று பாலியல் வன்முறை செய்தான். மக்களால் பிடிபட்டு உதைவாங்கிய பிறகும், ''இறைவன் இதனைச் செய்யவே தன்னைப் பூமிக்கு அனுப்பியதாக'' நியாயமும் பேசினான். அப்பூசாரி மூன்று முறை இதே போன்ற குற்றங்களைச் செய்துள்ளான்.


இப்பேர்ப்பட்ட தென்னிந்தியப் பார்ப்பன பூசாரிகளுக்கு ஆதரவாக நேபாள மக்கள் மத்தியில் இருந்து எந்தக் குரலும் எழவில்லை. நேபாள காங்கிரசு, போலி ஐக்கிய மா-லெ கம்யூனிஸ்ட் ஆதரவில் குடியரசுத் தலைவரான ராம் பிரன் யாதவும், முன்னாள் பிரதமர் கொய்ராலாவும் மட்டுமே எதிர்ப்பு தெரிவித்தனர். இவர்களோடு அரியணையை இழந்த மன்னரும் சேர்ந்து கொண்டு, ''மதம் அரசியலுக்கு மேலானது'' என்று சீறினார்.



படிப்பகம்

www.padippakam.com

ஆனால், இந்தியாவில் இருந்து வரிந்து கட்டிக் கொண்டு அத்வானியும் ராஜ்நாத் சிங்கும் நேபாளப் பிரதமருடன் தொலைபேசியில் பேசி "அர்ச்சகர் நியமனப் பிரச்சினையைச் சுமுகமாகக் கையாளுமாறு அறிவுரை'' கூறினர். சமாஜ்வாதி கட்சியின் முலாயம் சிங்கும், அமர் சிங்கும் நேபாள பிரதமர் பிரசந்தாவை நேரில் சந்தித்து முடிவை மாற்றிக் கொள்ளக் கோரினர்.



நேபாள மாவோயிஸ்டு அரசால் நியமிக்கப்பட்ட நேபாளத்தைச் சேர்ந்த அர்ச்சகர்கள், பூசை செய்வதற்காக பசுபதி நாதர் கோவிலுக்குள் செல்லும் காட்சி.

உலகெங்குமுள்ள இந்துக்களின் மத உணர்வை நேபாள மாவோயிஸ்டுகள் புண்படுத்திவிட்டதாக இங்குள்ள இந்து வெறியர்கள் கூச்சலிட்டனர். இந்திய ஊடகங்கள் மாவோயிஸ்டுகள் மீது அவதூறு சேற்றை வாரியிறைத்தன.

பா.ஜ.க.வின் கூட்டாளியான சிவசேனாக் கும்பலோ, புதுதில்லியில் ஆர்ப்பாட்டம் நடத்தி பிரசந்தாவின் கொடும்பாவியைக் கொளுத்தியது. இதே கட்சிதான் மும்பை நகரம், மராட்டியருக்கே சொந்தம் என்று மராட்டிய தேசியவெறியைக் கிளறி விட்டு மும்பையில் வாழ்கின்ற தமிழர்கள் மீதும் வட இந்தியர்கள் மீதும் இன வெறித் தாக்குதல்களைப் பலமுறை நடத்தியிருக்கிறது. மும்பையில் அக்கட்சி முன்வைக்கும் மண்ணின் மைந்தர் கொள்கை நேபாளத்துக்கு மட்டும் பொருந்தாதா?

அதிகாரத்தை இழந்த போதிலும் தமது இந்தியப் பங்காளிகள் மூலம் புதிய நம்பிக்கையை டைந்த தென்னிந்திய பார்ப்பனப் பூசாரிகளும் அவர்களது ஏடுபிடி கும்பலும் பசுபதிநாதர் கோயிலின் கதவை மூடிக் கொண்டு உள்ளிருப்புப் போராட்டம் நடத்தினர். பக்தர்களின் வழிபாட்டுரிமை பாதிக்கப்பட்டதால், மாவோயிஸ்டுகளின் இளைஞர் அமைப்பினர் கோவில் கதவை உடைத்துக் கொண்டு உள்ளே நுழைந்து, அப்பூசாரிக் கும்பலை வெளியேற்றினர். உடனே, ''ஐயோ! மாவோயிஸ்டுகள் வன்முறை!'' என்று இங்குள்ள இந்துவெறியர்களும் ஊடகங்களும் கூச்சலிட்டன. நேபாள உச்சநீதி மன்றமோ, பிற்போக்கு சக்திகளுக்கு ஆதரவாக ''பாரம்பரியத்துக்கு மாறாக நேபாள பூசாரிகளை நியமித்தது செல்லாது'' எனத் தீர்ப்பளித்தது. மிக அற்பமான விவகாரத்தை ஊதிப் பெருக்கி கலகம் செய்யும் பிற்போக்குக் கும்பல்களின் சூழ்ச்சிகள்-சதிகளை உணர்ந்த நேபாள மாவோயிஸ்டுகள், தென்னிந்திய பார்ப்பன பூசாரிகளையே நியமிப்பதை அரசின் முடிவாக அறிவித்துள்ளனர்.

பசுபதிநாதர் கோயிலில் நேபாளிகளைத் தலைமை அர்ச்சகர்களாக அந்நாட்டு அரசு நியமித்த நடவடிக்கையானது மிக நியாயமான, மிகச் சாதாரணமான உள்நாட்டு விவகாரம்தான். ஆனால் புனிதம், பாரம்பரியம், மத உணர்வு என்ற பெயரில் இந்தியப் பிற்போக்கு ஆளும் கும்பல்கள் நேபாளத்தின் அற்பமான விவகாரத்தில் கூட பிராந்திய மேலாதிக்கத் திமிரில் மூக்கை நுழைக்கின்றன. அதிகாரத்திலிருந்து தூக்கியெறியப்பட்ட போதிலும், மன்னராட்சி பிற்போக்குக் கும்பல் இழந்த சொர்க்கத்தை மீட்க இந்தியாவின் மறைமுகத் துணையோடு கலகம் செய்யத் துடிக்கின்றன.

பசுபதி நாதர் கோவிலில் பூசை செய்து வந்த இந்தியப் பார்ப்பனர்கள் நீக்கப்பட்டதை எதிர்த்து, தில்லியில் நேபாளப் பிரதமர் பிரசண்டாவின் உருவ பொம்மையை எரித்து வெறியாட்டம் போடும் சிவசேனா கும்பல்.



நேபாளத்தில் மாவோயிஸ்டுகளின் இடைக்கால அரசைப் பலவீனப்படுத்தி வீழ்த்த, அதிகாரத்தை இழந்த பிற்போக்கு கும்பல்கள் எத்தகைய கீழ்த்தரமான சதிகளில் இறங்கியுள்ளன என்பதையும், பிராந்திய மேலாதிக்க இந்தியப் பிற்போக்கு அரசு ஈழத்தில் மட்டுமின்றி, நேபாளத்திலும் எப்படியெல்லாம் தலையீடு செய்து வருகிறது என்பதையும் பசுபதி நாதர் கோயில் விவகாரம் அம்பலப்படுத்திக் காட்டியுள்ளது.

• கதிர்

www.padippakam.com

# திருமங்கலம் இடைத்தேர்தல்:

# பிழைப்புவாதத்தின் விபரீதம்

**"அட்ஜஸ்ட் பண்ணிப் போகணும்" என்ற விதைதான் திருமங்கலத்தில் நச்சு மரமாக வளர்ந்திருக்கிறது.**

நடந்து முடிந்த திருமங்கலம் இடைத்தேர்தல் வெற்றியை ''திருப்புமுனை ஏற்படுத்திய திருமங்கலம்'' என்று ஆளும் தி.மு.க.வினர் கோலாகலமாகக் கொண்டாடி வருகின்றனர். அரசியல் பார்வையாளர்களும் ஊடகங்களும் தேர்தல் வரலாற்றில் புதிய அத்தியாயத்தைத் தொடங்கியுள்ள திருப்புமுனைத் தேர்தல் என்பதாகக் குறிப்பிடுகின்றனர்.

திருமங்கலம் இடைத்தேர்தலைப் பொறுத்தவரை எல்லாமே வித்தியாசமாகவும் திருப்பு முனையாகவும்தான் அமைந்தது. கடந்த தேர்தலைவிட 18% வாக்குகள் அதிகமாகப் பதிவாகி, அதாவது இதுவரை கண்டிராத வகையில் 88.89% வாக்குகள் இத்தேர்தலில் பதிவாகின. தமிழகம், பீகாராக மாறிவிட்டது என்று மைய தலைமைத் தேர்தல் ஆணையர் என்.கோபாலசாமி புலம்பியதையடுத்து, திருமங்கலம் தொகுதியின் இடைத்தேர்தலைப் பாதுகாப்பாக நடத்தி 'ஜனநாயகத்தை நிலைநாட்ட' இதுவரை கண்டிராத வகையில் 4700 மாநிலப் போலீசாரும் 487 துணை இராணுவப் படையினரும் குவிக்கப்பட்டனர்.

திருமங்கலம் இடைத்தேர்தலில் ம.தி.மு.க.வுக்குப் பதிலாக இந்தமுறை அ.தி.மு.க. வேட்பாளர் நிறுத்தப்பட்டார். கடந்த முறை தனித்துப் போட்டியிட்ட மூவேந்தர் முன்னேற்றக் கழகம், தற்போதைய இடைத்தேர்தலில் அ.தி.மு.க.வை ஆதரித்தது. கடந்த தேர்தலில் தி.மு.க. கூட்டணியிலிருந்த இடது, வலது போலி கம்யூனிஸ்ட் கட்சிகள் இம்முறை அ.தி.மு.க.வுடன் கூட்டணி கட்டிக் கொண்டன. வரப்போகும் நாடாளுமன்றத் தேல்தலுக்கான முன்னோட்டம் என்று பிரச்சாரம் செய்த ஜெயலிதாவின் கணக்கு பொய்த்துப் போய், அத்தொகுதியை அ.தி.மு.க.கூட்டணி இழந்திருக்கிறது. கடந்த தேர்தலில் வெற்றிபெற்ற ம.தி.மு.க.வின் வீர இளவரசன் 37.5% வாக்குகளைப் பெற்றிருந்த நிலையை ஒப்பிடும்போது, தற்போதைய தேர்தலில் அ.தி.மு.க. 29% வாக்குகளை மட்டுமே பெற்று, 8% வாக்குகளை இழந்திருக்கிறது.

இந்த இடைத்தேர்தலில் நடிகர் விஜயகாந்த், அரசியல் பார்வையாளர்களால் அதிகமாக எதிர்பார்க்கப்பட்டார். இம்முறை அ.தி.மு.க.வுக்கு இணையான வாக்குகளை தே.மு.தி.க. பெற்றுவிடும் என்ற கணிப்பு பலரிடமும் இருந்தது. ஏனெனில், முந்தைய இடைத்தேர்தல்களைவிட விஜயகாந்த் தம்பதியினர் தொகுதி யெங்கும் அதிக நேரம் ஒதுக்கிச் சூறாவளிப் பிரச்சாரம் செய்தனர். இருப்பினும், முந்தைய தேர்தலில் 16% வாக்குகளைப் பெற்ற அக்கட்சி இம்முறை 9.5% வாக்குகளை மட்டுமே பெற்று கட்டுத்தொகையை இழந்துள்ளது. இதேபோல நடிகர் சரத்குமாரின் சமத்துவ மக்கள் கட்சி பரிதாபகரமாக வெறும் 831 வாக்குகளை மட்டுமே பெற்று தேர்தல் அரசியல் அரங்கில் காணாமல் போய்விட்டது.

மறுபுறம், தி.மு.க.வோ ஏறத்தாழ 28% வாக்கு வித்தியாசத்தில், அதாவது அ.தி.மு.க. வேட்பாளரை விட முப்பத்தொன்பதாயிரத்துக்கும் அதிகமான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றுள்ளது. ''தி.மு.க.வினரையே பிரமிப்பில் ஆழ்த்திய இந்த வெற்றிக்கு தளபதி அழகிரியே காரணம். நாற்பதாயிரம் வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெறுவோம் என்று அவர் அறிவித்த கணிப்பு அவ்வளவு துல்லியமாக பலித்துள்ளது'' என உடன் பிறப்புகள் மட்டுமின்றி, கிசுகிசு பத்திரிகைகளும் அழகிரியின் தேர்தல் வியூகம், உத்திகள், செயல்முறை பற்றிய அலசல்களை எழுதி சிலாகிக்கின்றன. எல்லா பத்திரிகைகளும், இதுவரை கண்டிராத வகையில் திருமங்கலம் இடைத்தேர்தலில் ஓட்டுக் கட்சிகள் கோடிக்கணக்கில் பணத்தை வாரியிறைத்தன என்பதை வெளிப்படையாகவே எழுதுகின்றன.

**திருமங்கலம் தொகுதியையே ஊழல்படுத்திய அழகிரியின் கட்-அவுட்டுக்குப் பாலாபிஷேகம்.**



திருமங்கலம் தொகுதியில் ஏறத்தாழ 1,55,000 வாக்காளர்கள் உள்ளனர். தி.மு.க.வும், அ.தி.மு.க.வும் ஒவ்வொரு வாக்காளர்களுக்கும் ரூ.1000 முதல் ரூ.5000 வரை அன்பளிப்பா க வாரியிறைத்தன. இவை தவிர மிக்சி, கிரைண்டர், செல்போன், திருநெல்வேலி அல்வா, சீமைச் சாராயம் என தனிக் கவனிப்புகளும் இருந்தன. தி.மு.க.வும் அ.தி.மு.க.வும் திருமங்கலம் தொகுதி வாக்காளர்களின் கையில் அன்பளிப்பாகக் கொடுத்த தொகை சுமார் 78 கோடி ரூபாய் என்கிறது இந்தியா டுடே. இதன்படி, திருமங்கலம் தொகுதியில் வெற்றிபெற்ற தி.மு.க. வேட்பாளரான லதா அதியமான்தான், சட்டமன்றத் தேர்தல் வரலாற்றிலேயே ''காஸ்ட்லி''யான உறுப்பினராக இருப்பார் என்கிறது அப்பத்திரிகை.



படிப்பகம்

www.padippakam.com

வாக்காளர்களைத் தம்பக்கம் இழுக்க ஓட்டுக்கட்சிகள் தேர்தலின் போது ஒருசில இடங்களில் இலஞ்சம் கொடுப்பது வாடிக்கைதான் என்றாலும், இதுவரை கண்டிராத வகையில் கோடிக்கணக்கில் வாரியிறைக்கப்பட்டு, திருமங்கலம் இடைத்தேர்தல் ஓட்டுப் பொறுக்கி அரசியலில் புதிய அத்தியாயத்தைத் தொடங்கியுள்ளது. ஓட்டுச்சீட்டு போலி ஜனநாயகத்தின் மீது இன்னமும் நம்பிக் கையூட்டி வரும் அறிவார்ந்த கணவான்களுக்கு, திருமங்கலத்தில் நடந்த பணநாயகத் தேர்தல் சம்மட்டி அடி கொடுத்துள்ளது.



கறி விருந்து கொடுத்து வெற்றியைக் கொண்டாடும் ஸ்டாலின்-அழகிரி: தமிழன் சோற்றால் அடித்த பிண்டமா?

தி.மு.க.வின் பணபலம், அழகிரியின் 'உத்திகள்' தான் திருமங்கலம் தேர்தல் ஏற்படுத்தியுள்ள திருப்பு முனையா? இத்தகைய பணபலமும் 'உத்திகளும்' எதிர்க்கட்சித் தலைவியான பார்ப்பன-பாசிச ஜெயாவிடமும் உள்ளது. எனவே, இவை மட்டும் திருப்பு முனையாகிவிட முடியாது.

ஒரு தொகுதியின் அனைத்து வாக்காளர்களையும் ஓட்டுக் கட்சிகள் விலைகொடுத்து வாங்கி விடமுடியும்; எச்சில் காசுக்காக ஒரு சிலரை ஊழல்படுத்துவது போய், ஊரையே - ஒரு தொகுதியையே ஊழல்படுத்தி ஓட்டுப் பொறுக்கிகள் வெற்றியைச் சாதித்துவிட முடியும். இதுதான் திருமங்கலம் இடைத்தேர்தல் உணர்த்தும் மிக முக்கியமான திருப்பு முனைச் செய்தி.

திருமங்கலத்தின் பல இடங்களில் மக்கள் தங்கள் தெரு, ஊர் சார்பாக மொத்தமாக ஓட்டுக்கட்சிகளிடம் பணத்தைக் கேட்டு வாங்கி, தங்களுக்குள் 'ஜனநாயக முறைப்படி' பிரித்துக் கொண்டுள்ளனர். பணம் கொடுக்கும் கட்சியினரைக் கையும் களவுமாக பிடித்துக் கொடுத்த எதிர்த் தரப்பினர், மக்களின் கண்டனத்திற்கு ஆளாகி, அதன்பிறகு ஆளுங்கட்சி மற்றும் எதிர்கட்சி கூட்டணிகள் அதனைச் சரிகட்ட, சேரவேண்டிய பணத்தைக் கணக்கிட்டு அம்மக்களுக்கு தனியாகப் பட்டுவாடா செய்துள்ளன.

வாக்களிப்பதற்கு பணம் கொடுப்பதும் வாங்குவதும் குற்றம் என்கிறது, சட்டம். ஆனால், ஓட்டுப் பொறுக்கிகளின் பணநாயகத் தேர்தலில் இவையிரண்டுமே ஏற்றுக் கொள்ளப்பட்ட நடைமுறையாகவும் தார்மீக உரிமையாகவும் மாறி விட்டன. திருமங்கலத்தில் ஆளும் கட்சியும் எதிர்க்கட்சியும் வாக்காளர்களைக் 'கவனித்த' விதத்தைப் பார்த்து, இங்கேயும் ஒரு இடைத்தேர்தல் வராதா என்று பிற தொகுதி மக்கள் ஏங்கு மளவுக்கு, அங்கே பணம் பாதாளம் வரை பாய்ந்துள்ளது. ஓட்டுப் பொறுக்கி அரசியல்வாதிகள் அனைவரும் ஊழல் பெருச்சாளிகள் என்று பத்திரிகைகள் சித்தரித்து வரும் நிலையில், இப்போது ஒரு தொகுதியின் மக்களே ஊழல் சாக்கடையில் மூழ்கிக் கிடக்கிறார்கள்.

வறுமையிலுள்ள மக்கள் சில ஆயிரங்களுக்கு விலை போவது நியாயம்தான் என்றால், பிறகு எல்லாவகை அயோக்கியத்தனங்களும் நியாயமாகிவிடும். பணத்திற்கு விலை போகும் மக்கள் சாதி-மதவெறிக்கு ஆட்பட மாட்டார்களா? அல்லது தனியார்மயம்- தாராளமயத்துக்கு எதிராகப் போராடத்தான் முன் வருவார்களா? பணம் அவர்களது கைகளைக்

## “ஓட்டுப்போடாதே! புரட்சி செய்!”

### புரட்சிகர அமைப்புகளின் தேர்தல் புறக்கணிப்புப் பிரச்சாரம்

ஆளும் கட்சியான தி.மு.க.வும் எதிர்க்கட்சியான அ.தி.மு.க.வும் தமது கூட்டணிப் பரிவாரங்களுடன் முகாமிட்டு, ஓட்டுக்கு ரூ. 1000 முதல் ரூ. 5000 வரை வாரியிறைத்தும், சீமைச் சாராயம், பிரியாணி என வாக்காளர்களைக் குளிப்பாட்டியும் திருமங்கலம் இடைத்தேர்தல் திருவிழாவைக் கோலாகலமாக நடத்திக் கொண்டிருந்த சூழலில், இப்போலி ஜனநாயக மோசடித் தேர்தலைப் புறக்கணித்து புதிய ஜனநாயகப் புரட்சிக்கு அணிதிரளுமாறு மக்களை அறைகூவி, இப்பகுதியில் இயங்கி வரும் விவசாயிகள் விடுதலை முன்னணி வீச்சாகப் பிரச்சார இயக்கத்தை மேற்கொண்டது. அதன் தொடர்ச்சியாக 3.1.09 அன்று திருமங்கலத்தில் ''தேர்தல் ஒரு ஏமாற்று! புரட்சியே தீர்வு!'' என்ற முழக்கத்துடன் மாபெரும் பொதுக்கூட்டம் - கலை நிகழ்ச்சியை நடத்தியது. வி.வி.மு அமைப்பாளர் தோழர் வீரணன் தலைமையில் நடந்த இப்பொதுக்கூட்டத்தில், சாதிபலம் - பணபலம் - குண்டர் பலத்தோடு கொள்ளையர்கள் நடத்தும் இம்மோசடித் தேர்தலை அம்பலப்படுத்தியும், மக்களை விலைபேசி பிழைப்புவாதத்தில் தள்ளும் ஓட்டுப் பொறுக்கிகளின் கயமைத்தனத்தைச் சாடியும் ம.க.இ.க. இணைச் செயலர் தோழர் காளியப்பன் சிறப்புரையாற்றினார். ''ஓட்டுப் போடாதே! புரட்சி செய்!'' என்ற முழக்கமே பாடலாக ஒலிக்க, ம.க.இ.க. மையக் கலைக் குழு நடத்திய புரட்சிகர கலைநிகழ்ச்சி, மக்களின் அரசியல் போராட்ட உணர்வைத் தட்டியெழுப்பியது. ஓட்டுப் பொறுக்கி பிழைப்புவாதிகளின் ஆரவாரத்துக்கு நடுவே நடந்த இப்பிரச்சாரம், மக்களிடம் பெருத்த தாக்கத்தை ஏற்படுத்துவதாக அமைந்தது.

— பு.ஜ. செய்தியாளர்கள்.



படிப்பகம்

www.padippakam.com

கட்டி கண்களைக் குருடாக்கிவிடும். எல்லாவகை அநீதிகளையும் அடக்கு முறைகளையும் சொரணையின்றி நியாயப்படுத்தும் பிழைப்புவாதப் புதை சேற்றில் தள்ளிவிடும்.

இப்படி விலைபோவது மக்களை மேலும் புழுவைவிடக் கேவலமான அடிமைகளாக்குவதற்குத்தான் துணை செய்யும். உலகின் பல சர்வாதிகாரிகள் இப்படி சில எலும்புத் துண்டுகளை வீசியெறிந்து, தமக்கென சமூக அடிப்படையை உருவாக்கிக் கொள்கிறார்கள் என்பது வரலாறு. திருமங்கலமும் அப்படியொரு புதிய அத்தியாயத்தை தமிழக அரசியல் வரலாற்றில் தொடங்கியிருக்கிறது.

தேர்தலில் வாக்களிக்க திருமங்கலம் தொகுதி மக்களுக்கு கோடிகளை வாரியிறைத்து விலைபேசியது போதாதென்று, கடந்த ஜனவரி 18-ஆம் தேதியன்று திருமங்கலம் தொகுதியிலுள்ள மக்கள் அனைவருக்கும் அசைவ விருந்து வைத்துள்ளது அழகிரி கும்பல். வாக்காளர்களுக்கு நன்றி தெரிவிக்கவே இந்த விருந்து என்று கூறிக் கொண்டு, கோடிகளை வாரியிறைத்து மக்களை எச்சில் சோற்றுக்கு அடிமைகளாக்கியுள்ளது.

சிங்கள இனவெறி இராணுவத்தால் ஈழத் தமிழர்கள் கொத்துக் கொத்தாகக் கொல்லப்பட்டு, காடுகளில் குழந்தைகளோடு பட்டினியில் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு மரண வாயில் நிற்கும் நிலையில், கிஞ்சித்தும் சொரணையின்றி திருமங்கலம் தொகுதி மக்கள் தடபுடலான கறி விருந்துண்டு களித்திருக்கின்றனர். அழகிரியின் கட்-அவுட்டுக்கு பாலாபிசேகம், ''அண்ணலே'', ''மிரட்சித் தலைவரே'', ''தெய்வமே'' என்று அழகிரியின் அடிமைகள் சுவரொட்டிகள் - பேனர்களை வைத்து தமிழகத்தையே நாறடித்துக் கொட்டமடிக்கின்றனர். இது தமிழினத்துக்கு நேர்ந்துள்ள மாபெரும் அவமானம்!

மக்களிடம் வேர்விடத் தொடங்கியுள்ள இந்தப் பிழைப்புவாதத்தை புரட்சிகர-ஜனநாயக சக்திகள் எதிர்த்து போராடி முறியடிக்கவேண்டும். இல்லையேல், எந்தவொரு அநீதிக்கும் அடக்குமுறைக்கும் தமிழகம் விலை போகும்; சொரணையற்ற அடிமைகளின் நாடாக தமிழகம் சீரழிக்கப்பட்டு விடும்.

• மணி

# மனித உரிமை கமிசனா? போலீசு உரிமை கமிசனா?

**தேசிய மனித உரிமை கமிசன் சல்வா ஜுடும் பற்றி தயாரித்திருக்கும் அறிக்கை, அதனின் நம்பகத்தன்மையைக் கேள்விக்குள்ளாக்கிவிட்டது.**

இரும்புத்தாது கனிம வளமிக்க சத்தீஸ்கர் மாநிலத்தின் மண்ணின் மைந்தர்களான கோண்டு பழங்குடியின மக்களை அம்மாநிலத்திலிருந்து விரட்டியடித்துவிட்டு, எஃகு ஆலை நிறுவிச் சூறையாட டாடா, மித்தல், எஸ்ஸார் முதலான தரகுப் பெருமுதலாளித்துவ நிறுவனங்கள் களமிறங்கியுள்ளன. இம்மறுகாலனியாதிக்கச் சூறையாடலுக்கு எதிராகப் பழங்குடியின மக்களைத் திரட்டிப் போராடி வரும் நக்சல்பாரி புரட்சியாளர்களான மாவோயிஸ்டுகளை முறியடிக்க, பழங்குடியின மக்களில் ஒருசிலரைக் கொண்டே எதிர்ப்புரட்சி குண்டர்படையை ஆட்சியாளர்களும் பெருமுதலாளிகளும் கட்டியமைத்துள்ளனர். இக்குண்டர்படையின் பெயர்தான் சல்வாஜுடும்.

சத்தீஸ்கர் மாநிலத்தில், தண்டேவாடா, பிஜாபூர் மாவட்டங்களில் நக்சல் வேட்டை என்ற பெயரில் இந்தக் குண்டர் படை பழங்குடியின மக்களைக் கடும் சித்திரவதைக்கு ஆளாக்கி வருகிறது. பழங்குடியினரின் பல கிராமங்கள் முழுவதுமாக தீ வைத்துக் கொளுத்தப்பட்டுள்ளன. நூற்றுக்கணக்கான அப்பாவிப் பழங்குடியினர் அநியாயமாகக் கொல்லப்பட்டுள்ளனர். பல்லாயிரம் பேர் அகதிகளாக முகாம்களில் அடைத்து வைக்கப்பட்டுள்ளனர்.

சல்வா ஜுடுமின் இத்தகைய காட்டுமிராண்டித்தனமான நடவடிக்கைகளை அரசு தெரிந்தே ஆதரித்து வருகிறது. இதை எதிர்த்துப் பல்வேறு அரசியல் அமைப்புகளும், மனித உரிமை அமைப்புகளும், தனி நபர்களும் உச்ச நீதிமன்றத்தில் முறையீட்டு மனுக்களைத் தாக்கல் செய்திருந்தனர். அவற்றை விசாரித்த உச்ச நீதிமன்றம் இதனைப் புலனாய்வு செய்யும் பொறுப்பை தேசிய மனித உரிமைக் கமிசனிடம் ஒப்படைத்தது. தகுதியான நபர்களைக் கொண்ட ஓர் உண்மை கண்டறியும் குழுவை அமைத்துக் குற்றச்சாட்டுகள் குறித்து விசாரிக்குமாறு, தேசிய மனித உரிமை கமிசனை உச்சநீதிமன்றம் கேட்டுக் கொண்டது. அதன் படி தேசிய மனித உரிமை கமிசனும் ஓர் உண்மை கண்டறியும் குழுவை அமைத்தது.

பொதுவாக இது போன்ற உண்மை கண்டறியும் குழுக்களில், தேசிய மனித உரிமைக் கமிசனின் உறுப்பினர்களையோ அல்லது துறை சார்ந்த அனுபவமுள்ள நபர்களையோ தேர்ந்தெடுப்பது வழக்கம். சில சமயங்களில் ஓய்வு பெற்ற நீதிபதிகள் கூட இது போன்ற உண்மை கண்டறியும் குழுக்களில் இடம் பெறுவார்கள். ஆனால், சல்வாஜுடும் பற்றி விசாரிக்க அமைக்கப்பட்ட தேசிய மனித உரிமைக் கமிசனின் குழுவில் இருந்தவர்கள் அனைவரும் போலீசு அதிகாரிகள். திருடனிடமே சாவியைக் கொடுத்ததைப் போல, அரசு பயங்கரவாத போலீசுப் படையின் அங்கமாகச் செயல்படும் சல்வாஜுடுமின் அட்டூழியங்களை விசாரிக்க போலீசையே நியமித்திருந்தனர்.

தேசிய மனித உரிமைக் கமிசனின் போலீசு பிரிவு நடத்திய புலனாய்வு எந்த லட்சணத்தில் இருக்கும் என்பதை அவர்கள் தயாரித்துள்ள அறிக்கையே நிரூபிக்கிறது. முன் முடிவுகளோ, காழ்புணர்ச்சியோ இல்லாத நடுநிலையோடு இருப்பதற்கான போலி நடிப்பு கூட இந்த அறிக்கையில் இல்லை. 13 பக்கங்களை கொண்ட அறிமுகப் பகுதியே 'அபாயம்' என்று குறிப்பிட்டு மாவோயிஸ்ட்டுகளைக் கடுமையாக விமர்சிக்கிறது. அடுத்த ஐந்து பக்கங்களுக்கு 'மாவோயிஸ்டுகளின் மனித உரிமை மீறல்கள்' குறித்தும், ஒன்றரை பக்கங்களுக்கு 'சல்வா ஜுடுமின் மனித உரிமை மீறல்கள்' குறித்தும் உள்ளது. இன்னும் ஒன்றரை பக்கங்களுக்கு 'உள்ளூர் போலீசு, பாதுகாப்பு படைகள் மற்றும் சிறப்பு போலீசு அதிகாரிகள் (SPO) போன்றவற்றின் பாத்திரம்' என்ற பகுதி வருகிறது. நிவாரண முகாம்களைத் தாண்டி இனிமேல் சல்வாஜுடும் செயல்பட



படிப்பகம்

www.padippakam.com

முடியாது என்று வருத்தத்தோடு முறையிட்ட பிறகு, நீண்ட நெடிய 67 பக்கங்களுக்கு 'ஆய்வில் கண்டறிந்தவை' என்ற தலைப்பின்கீழ் முறையீட்டு மனுக்களில் பட்டியலிடப்பட்டிருந்த குற்றச்சாட்டுகள் குறித்த புலனாய்வு அறிக்கை வருகிறது.



சல்வாஜுடும் குண்டர்களால் கிராமத்தை விட்டுத் துரத்தப்பட்டு, கோண்டா என்ற ஊரில் உள்ள முகாமில் தங்க வைக்கப்பட்டுள்ள சத்தீஸ்கர் பழங்குடியின மக்கள். (கோப்புப்படம்).

மாவோயிஸ்ட்டுகள் சத்தீஸ்கர் மாநிலத்தில் இருப்பதே மக்களை ஒடுக்குவதற்காகத்தான் என்று இந்த அறிக்கை கூறுகிறது. அவர்கள் அந்தப் பகுதியில் இயங்குவதால்தான் பழங்குடியினருக்கு கூலி உயர்வு கிடைத்துள்ளது; பீடி இலை கொள்முதல் செய்யும் ஒப்பந்ததாரர்களின் அடக்குமுறை, வனத்துறை அதிகாரிகளின் லஞ்ச ஊழல், முறைகேடுகள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளன; போலீசின் அட்டூழியங்கள், பாலியல் வன்முறைகள் அம்பலப்படுத்தப் பட்டுள்ளன — போன்ற உண்மைகள் கூட இந்த அறிக்கையில் இடம் பெறவில்லை. ஆனால், மாவோயிஸ்டுகள் குறித்து இதுவரை யாரும் கேட்டறிந்தேயிராத பல புதிய குற்றச்சாட்டுகள் இந்த அறிக்கையில் இடம் பெற்றுள்ளன. எடுத்துக்காட்டாக 'பழங்குடியின குழந்தைகள் 5-ஆம் வகுப்புக்கு மேல் படிக்கக் கூடாது என்று மாவோயிஸ்டுகள் உத்தரவிட்டிருப்பதாக' அறிக்கை குற்றம் சாட்டுகிறது. இவ்வாறு மாவோயிஸ்டுகள் மீது புலனாய்வுக் குழுவுக்கு இருக்கும் காழ்ப்புணர்ச்சி அறிக்கையின் ஒவ்வொரு வரியிலும் வெளிப்படுகிறது.

அறிக்கை, மாவோயிஸ்டுகளைப் பற்றிய குற்றச்சாட்டுகளை ஆணித்தரமாக பதிவு செய்துள்ள அதே வேளையில், சல்வாஜுடுமின் குற்றங்களைப் பற்றிச் சொல்லும் போது, 'கூறப்படுகிறது', 'சொல்லப்படுகிறது', 'இருக்கலாம்' எனப் பூசி மெழுகுகிறது. உதாரணத்திற்கு, ஆந்திரப் பிரதேசத்திற்கு விரட்டப்பட்ட பெருந்திரளான சத்தீஸ்கர் பழங்குடியினர் குறித்துச் சொல்லும்போது, 'சல்வாஜுடுமால் அவர்கள் இடம் பெயர்ந்ததாகச் சொல்லப்படுகிறது' என்கிறது அறிக்கை.

சல்வாஜுடும் ஏன் உருவானது என்பது குறித்து அரசு ஒரு பொய் பிரச்சாரத்தை செய்து வருகிறது. மாவோயிஸ்டுகளின் ஆயுத நடவடிக்கைகளின் பின் விளைவாக, தங்கள் மீது பாயும் அரசு ஒடுக்குமுறை தங்களது உயிருக்கும், சுதந்திரத்திற்கும் உலை வைப்பதாக உள்ளது என்று கிராம மக்கள் கருதியதாகவும், இதன் விளைவாக மாவோயிஸ்டுகளுக்கு எதிராக ஒரு அமைப்பை உருவாக்கியதாகவும் அரசு கூறுகிறது. ஆனால், உண்மையில் காங்கிரசு கட்சியைச் சேர்ந்த ஊழல் பேர்வழியான மகேந்திர வர்மாதான் போலீசு மற்றும் தரகுப் பெருமுதலாளிகளின் துணையோடு பழங்குடியின மக்களைக் கொண்ட மாவோயிஸ்டு எதிர்ப்பு குண்டர்படையை உருவாக்கினான். இதனைக் 'கொலைகார கும்பல்' என்று சொல்லுவதுதான் பொருத்தமாக இருக்கும். அவர்கள் கிராமங்களைச் சூறையாடி அங்கிருக்கும் மக்களை அடித்து நொறுக்கி மிரட்டுவதன் மூலம் அந்த மக்களை சல்வாஜுடுமில் சேர வைக்கிறார்கள். பிறகு அவர்களைக் கொண்டே பக்கத்துக் கிராமங்களைத் தாக்கி அழிக்கிறார்கள்.

அரசின் மக்கள் விரோதக் கொள்கைகளை எதிர்த்ததால் நக்சலைட்டு ஆதரவாளர் என முத்திரை குத்தப்பட்டு கைது செய்யப் பட்டுள்ள பினாயக் சென். (கோப்புப்படம்)



முதலில், கிராமங்களில் இருக்கும் மாவோயிஸ்டு ஆதரவாளர்களை விரட்டியும், பின்னர் எஞ்சியிருப்பவர்களைத் தனிமைப்படுத்தியும் மாவோயிஸ்டுகளைக் கொன்றொழிப்பதற்கு வசதியாக, அந்த பகுதியை போலீசு படையினருக்கு முழுமையாகத் திறந்து விடுவதுதான் சல்வா ஜுடுமின் முக்கியமான வேலையாகும். உண்மை இவ்வாறிருக்கும்போது, சல்வாஜுடும் குண்டர்படையே மாவோயிஸ்டுகளின் அடக்குமுறைக்கு எதிரான ஆதிவாசிகளின் எதிர்க்கிளர்ச்சி அமைப்பு என்பதைப் போல அறிக்கை காட்டுகிறது. இந்தியா முழுவதும் அரசை எதிர்க்கும் கிளர்ச்சிகளை சல்வாஜுடும் போன்ற குண்டர் படைகளின் மூலம் ஒழிப்பதையே சிறந்த வழிமுறையாகக் கருதும் போலீசின் புத்தியே அறிக்கையில் இவ்வாறு வெளிப்படுகிறது.

'ஆய்வில் கண்டறிந்தவை' என்ற தலைப்பின் கீழ் அறிக்கையில் குற்றச்சாட்டுகள் குறித்து சொல்லப்பட்டுள்ளவற்றை வாசிக்கும் எவருக்குமே, சல்வா



படிப்பகம்

www.padippakam.com

ஜுடும் மீதான குற்றச்சாட்டுகள் அனைத்தும் அடிப்படையற்றவை என்றுதான் எண்ணத் தோன்றும். ஆனால், கவனத்துடன் ஊன்றிப் படிக்கும் போது பல சிக்கலான கதைகள் வெளிவருகின்றன. சில குற்றச்சாட்டுகளில் சம்பந்தப்பட்ட கிராமத்தில் யாராவது அவை பொய் என்று சொல்லியதாக பதிவு செய்யப்பட்டிருந்தால், அவற்றை 'பொய்யான குற்றச்சாட்டு' என்று முடிவு செய்கிறது அறிக்கை. ஆனால் குற்றச்சாட்டுகள் உண்மை என்பதாக கருத வாய்ப்புள்ள இடங்களிலோ 'உறுதிப்படுத்தப்படாத தகவல்' என்று கூறி அறிக்கை அவற்றை மூடி மறைத்து விடுகிறது.



நக்சல்பாரிகளை வேட்டையாடுவதற்காகவே அரசால் உருவாக்கப்பட்டுள்ள சல்வாஜுடும் எதிர்ப்புரட்சி படை. (கோப்புப்படம்).

உதாரணமாக, சல்வாஜுடும் ஒருவரைக் கொன்றதாகக் குற்றம் சாட்டப்பட்டு அதனை இந்த அறிக்கை 'உறுதிப்படுத்தப்படவில்லை' என்று பதிவு செய்கிறது எனக் கொண்டால், உண்மையில் என்னதான் நடந்தது என்பதை யார் வந்து புலனாய்வு செய்வது? குற்றம் சுமத்துபவருக்கும் விசாரணை அதிகாரிக்கும் இடையில் நடக்கும் வாதப்பிரதிவாதங்களைப் புலனாய்வு என்று கருத முடியாது. அது நீதிமன்றத்தின் வேலை. குற்றச்சாட்டுகள் குறித்த உண்மைகளைக் கண்டறிந்து சொல்வதுதான் புலனாய்வு குழுவின் வேலை. காணாமல் போன நபர்கள் என்னவானார்கள், கிராமங்கள் ஏன் காலியாகின, ஏன் தீக்கிரையாக்கப்பட்டன என்பதைப் புலனாய்வு குழுதான் கண்டுபிடித்துச் சொல்ல வேண்டுமே தவிர, அவற்றை 'உறுதிப்படுத்தப்படாத தகவல்' என்று சொல்லி ஒதுக்கித் தள்ள முடியாது.

ஆனால், இங்கே உண்மை கண்டறியும் குழுவோ, உண்மைகளைக் கண்டறிய எந்த முயற்சியும் செய்த மாதிரித் தெரியவில்லை. எரிந்து மிச்சமிருந்த கிராமங்கள் குறித்து எவ்வித விசாரணை மேற்கொள்ளப்பட்டது என்று உள்ளூர் போலீசை ஒரு கேள்வி கூட அது கேட்கவில்லை. புலனாய்வு செய்வதற்காகவே சத்தீஸ்கர் அரசிடம் சம்பளம் வாங்கிக் கொண்டு இருக்கும் போலீசுக்காரர்களிடம் விசாரணை செய்யாமலேயே 'உறுதிப்படுத்தப்படாத குற்றச்சாட்டுகள்' என்று அறிக்கையில் பதிவாகியுள்ளது.

மேலும் இந்த விசாரணை முழுவதும், சல்வாஜுடுமின் முகாம்களில் உள்ளவர்களிடம் மட்டுமே நடத்தப்பட்டுள்ளது. சல்வா ஜுடுமின் தாக்குதலால் பெரும்பான்மையான பழங்குடியினர் ஆந்திராவிற்கு ஓடிவிட்ட நிலையில், தண்டேவாடா பகுதிகளில் எஞ்சி இருப்பவர்கள், சல்வாஜுடுமுக்கு ஆதரவாளர்களும் சல்வாஜுடுமுடன் ஒத்துப் போவது என்று முடிவு செய்தவர்களும் மட்டுமே. இந்நிலையில் அந்தப் பகுதியில் மட்டுமே செய்யப்படும் எந்தப் புலனாய்வும், உண்மையை வெளிக் கொணருவதாக இருக்காது. சல்வாஜுடுமால் மோசமாகப் பாதிக்கப்பட்டப் பழங்குடியினரை முறையாக விசாரித்திருந்தாலே, சல்வாஜுடுமிற்கு எதிரான குற்றச்சாட்டுகளை உறுதி செய்திருக்க முடியும். ஆனால், புலனாய்வுக் குழுவின் நோக்கம் அதுவல்லவே!

ஒட்டுமொத்தமாக சல்வாஜுடுமைப் புனிதப்படுத்தும் நோக்கத்தோடு அமைக்கப்பட்ட இந்த ஆய்வுக் குழுவின் அறிக்கை வேலிக்கு ஓணான் சாட்சி சொன்ன கதையாக இருப்பதில் வியப்பொன்றுமில்லை. ஏனெனில், ''மாநிலத்தின் தொழில் வளர்ச்சி'' என்ற பெயரில் தரகுப் பெருமுதலாளிகளின் சூறையாடலை சட்டபூர்வமாக அங்கீகரிப்பதுதான் சத்தீஸ்கர் மாநில அரசின் கொள்கை. அக்கொள்கை வழியில் உருவாக்கப்பட்ட குண்டர்படைதான் சல்வாஜுடும். இதன்படி, அரசின் மறுகாலனியாதிக்கக் கொள்கையையும், அரசு மற்றும் சல்வாஜுடும் குண்டர் படையின் பயங்கரவாத அட்டூழியங்களையும் எதிர்த்து அம்பலப்படுத்தும் அனைவருமே எதிரிகள்; அத்தகையோர் மீது அடக்குமுறையை ஏவுவதில் தவறில்லை என்பதுதான் சத்தீஸ்கர் மாநில அரசின் நியாய வாதம்.

இதனடிப்படையில்தான் கடந்த 2007-ஆம் ஆண்டில் குடியுரிமைகளுக்கான மக்கள் சங்கத்தின் அனைத்திந்திய துணைத் தலைவரும் குழந்தை மருத்துவ நிபுணருமான டாக்டர் பினாயக் சென், சத்தீஸ்கர் மாநில சிறப்புப் பொது பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டுச் சிறையிலடைக்கப்பட்டார். இவர் மட்டுமின்றி. குடியுரிமைகளுக்கான மக்கள் சங்கத்தின் சத்தீஸ்கர் மாநில நிர்வாகிகளுள் ஒருவரான அஜய் கங்காதரன்; கமலேஷ் பாய்க்ரா, அச்சல்கான் எனுமிரு பத்திரையாளர் உள்ளிட்டு 43 பேர் சிறையிடப்பட்டனர். சல்வாஜுடுமின் அட்டூழியங்களை எதிர்த்த இவர்கள் மாவோயிஸ்டு தீவிரவாதிகளுடன் தொடர்புடையவர்கள் என்று மாநில அரசால் பொய்க்குற்றம் சாட்டப்பட்டுள்ளனர். டாக்டர் பினாயக் சென்னுக்குப் பிணை வழங்கக் கோரி தொடரப்பட்ட வழக்கையும் உச்சநீதி மன்றம் தள்ளுபடி செய்து விட்டது. மாநில அரசின் கொள்கையில் நீதிமன்றம் தலையிட முடியாது என்று 'நடுநிலைமை' காட்டியது, உச்ச நீதி மன்றம்.

மறுகாலனியாக்கம் எனும் பயங்கரவாதப் போரில் 'நடுநிலைமை' கிடையாது. இனியும் ஒளிந்து கொள்ள முடியாமல் நடுநிலைமை எனும் புனிதப் போர்வை கிழிந்து கந்தலாகி விட்டது. உச்சநீதி மன்றம் மட்டுமல்ல; இதற்கு அப்பால் தேசிய மனித உரிமைக் கமிசனும்கூட இயற்கை நீதியையும் நடுநிலைமையும் கொண்டதாக இருக்கமுடியாது என்பதற்கு இந்த விசாரணை அறிக்கையே சாட்சியாக உள்ளது.

• ராஜன்


படிப்பகம்

www.padippakam.com

# சுயதம்பட்டம் + சாதிப்பற்று = தா.பாண்டியன்

இடது, வலது போலி கம்யூனிஸ்டு கட்சிகளின் நீண்ட வரலாற்றில் தற்பெருமையடிக்கும் போக்கு ஒரு சில தலைவர்களிடம் அவ்வப்போது தலைகாட்டியிருப்பினும், அந்தப் போக்கில் புதிய எல்லைவரை சென்றிருக்கும் ஒருவர்தான் சி.பி.ஐ.கட்சியின் பொதுச்செயலாளர் தா.பாண்டியன்.

2008-ஆம் ஆண்டின் ''டாப் 10'' அரசியல்வாதிகளுள் ஒருவராக தா.பாண்டியனை ஆனந்த விகடன் வார இதழ் தேர்ந்தெடுத்திருந்தது. இதற்காக அவரைப் பாராட்டிப் புகழ்ந்து, அக்கட்சியின் ஒவ்வொரு மாவட்டக் குழுவும் தினமும் அரைப்பக்க விளம்பரங்களை ''ஜனசக்தி''யில் வெளியிட்டு வருகின்றன. பாண்டியன் புகழ் பரப்பும் ''ஜனசக்திக்கு'' பாண்டியன்தான் ஆசிரியர்.

''இலங்கைத் தமிழர் பிரச்சினையைக் கையில் எடுத்த சிவப்புக் கம்பளம்'', ''உழைக்கும் மக்களின் உண்மைத் தோழர்'', ''தமிழகத்தின் ஆரோக்கிய அரசியல் சூறாவளி', ''சிவப்புச் சூறாவளி'', ''தொழிலாளி வர்க்கத்தின் விடிவெள்ளி''. — இவை எல்லாம் தா.பாண்டியனார் புகழ்பாடிய விளம்பரங்களில் அவருக்குச் சூட்டப்பட்ட கிரீடங்கள். இவை போதாதென்று அண்மையில் 'தானைத் தலைவர்' என்ற அடைமொழி வேறு சேர்ந்து கொண்டிருக்கிறது. ஈழப் பிரச்சினையை தா.பாண்டியன் கையில் எடுத்ததால் விழித்துக் கொண்ட தமிழ்ச் சமூகம், அப்பிரச்சினையையே 'தா.பா.வுக்கு முன், பின்' என்று காலத்தைக் கிழித்துப் போட்டிருப்பதையும், 'பாலன் இல்லம் வந்து பார், தா.பா. வடிவாய் சிவப்புச் சூரியன் சுட்டெரிப்பதை' என்ற கவிதை வரியையும் அறிந்து கொள்ள தா.பா. நடத்தும் ஜனசக்தியைத்தான் நாம் பார்க்க வேண்டும்.


சுய விளம்பரப் பிரியன் தா.பாண்டியன்.

முதலாளித்துவ ஓட்டுப் பொறுக்கிக் கட்சிகளின் இயல்பான சுயவிளம்பர மோகத்தை வரித்துக் கொண்டுள்ள தா.பாண்டியன், தான் ஆதிக்கசாதி வெறிக்கும் ஆதரவாளர்தான் என்பதை உத்தப்புரம் தீண்டாமைச் சுவர் பிரச்சினையில் வெளிப்படுத்தி இருந்தார். அதாவது, சி.பி.ஐ. கட்சி ஏன் இந்தப் பிரச்சினையில் போராடவில்லை எனக்கேட்டபோது அவர், 'நான் அசைவன் எனக் காட்டிக் கொள்ள எலும்புகளைத் தொடுத்து மாலை போட்டு ஆட வேண்டிய தேவையில்லை' என்று 'பொறுப்பாக'ப் பதிலளித்திருந்தார்.

முக்குலத்தோர் சாதிப் பிரிவுகளில் ஒன்றான அகமுடையர் சாதிச் சங்கம் டிசம்பர் 2008-இல் நடத்திய கல்வி அறக்கட்டளை விழா ஒன்றில் பார்ப்பனிய பயங்கரவாத பா.ஜ.க.வின் திருநாவுக்கரசருடன் தா.பாண்டியனும் கலந்து கொண்டார். அரசியல் வேறுபாடுகளைக் கடந்து சாதி உணர்வோடு இக்கூட்டத்தில் இணைந்ததை 'கல்வி சம்பந்தப்பட்ட விழா என்பதால் கலந்து கொண்டேன்' என்று நியாயப்படுத்தவும் முயன்றார்.

ஓட்டுக்காக சாதிவெறியைத் தூண்டவும் அவர் தயங்கவில்லை என்பதை திருமங்கலத்தில் அவர் ஆற்றிய தேர்தல் பணி நிரூபித்திருக்கிறது. சென்னை அம்பேத்கர் சட்டக் கல்லூரியில், ஆதிக்க சாதித் திமிருக்காக மாணவர்கள் திருப்பித் தாக்கப்பட்ட சம்பவத்தை முன்வைத்து 'சட்டக் கல்லூரியில் ஒரு மாணவனை வாசலில் போட்டு மற்றொரு மாணவன் அரைமணி நேரமாக அடிக்கிறான். அதைத் தடுக்காமல் 360 போலீசார் வேடிக்கை பார்க்கின்றனர். குற்றங்களைத் தடுக்க வேண்டிய காவல்துறையின் கைகள் கட்டப்பட்டிருக்கின்றன. அதற்காகவே தி.மு.க.வைத் தோற்கடிப்போம்' என்று அப்பட்டமாகத் தேவர் சாதி வெறியைத் தூண்டிப் பிரச்சாரம் செய்தார்.

இந்து மதவெறிக்கும் தான் பங்காளிதான் என்பதை தா.பா. நடத்தும் ஜனசக்தி வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. பார்ப்பன பயங்கரவாதிகள் ஏற்றிப் போற்றும் சுவாமி விவேகானந்தரை 'செங்காவிப் புயல்' என்றும் 'செங்காவிச்சிங்கம்' என்றும் ஜனசக்தி புகழ்ந்து தள்ளுகிறது. ராஜாஜி ஒருமுறை 'விவேகானந்தர் இந்தியாவையும் இந்து மதத்தையும் காப்பாற்றியவர்' எனப் புகழ்ந்ததையும் எழுதி ஜனசக்தி பூரித்துப் போகிறது. ராமகிருஷ்ண பரமஹம்சரின் மனைவி சாரதா அம்மையாரின் 'ஆன்மீகப் புரட்சியை' விலாவாரியாகப் புகழும் கட்டுரைக்கும் ஜனசக்தியில் இடமுண்டு.

இந்து மதவெறியை மூலதனமாக வைத்து அரசியல் செய்த திலகரை மாபெரும் தியாகியாகவும், சாதிவெறியர்களின் குல தெய்வமான முத்துராமலிங்கத்தேவரை மாபெரும் போராளியாகவும் சித்தரித்து இந்தத் தலைவர்களின் பிறந்தநாளை ஜனசக்தி கொண்டாடுகிறது. விநாயகர் சதுர்த்தி ஊர்வலம் நடத்தி, திலகர் இந்து மதவெறியைப் பரப்பியதை எவ்விதக் கேள்வியும் கேட்காமல் அவரை விதந்தோதுகிறது.

ஜனசக்தியின் விற்பனைக்காக வெளியிடப்பட்ட விளம்பரம் 'தொட்டுப் பார்த்தால் காகிதம்; தொடர்ந்து படித்தால் ஆயுதம்' என்று உரத்துக் கூவி இருக்கிறது. பாண்டியனின் ஆயுதத்தை நம்பி பார்ப்பன இந்து பயங்கரவாதத்தையோ, ஆதிக்க சாதி வெறியையோ எதிர்கொள்ள முடியுமா என்பதை வலது கம்யூனிஸ்டு கட்சியிலுள்ள புரட்சியை நேசிக்கும் அணிகள்தான் சொல்லவேண்டும்.

● தனபால்


படிப்பகம்

www.padippakam.com

# சத்யம் மோசடி:
# தனியார்மயத்தின் மகிமை!

**முதலாளித்துவப் பொருளாதார அமைப்பு முறை கிரிமினல்மயமானது என்பது மீண்டும் நிரூபணமாகி இருக்கிறது.**

ஜனவரி 7, 2009 அன்று இந்தியாவை ஒரு பெரும் பூகம்பம் உலுக்கியதைப் போன்று சத்யம் நிறுவனத்தில் நடந்த மோசடிகள் அம்பலமாயின. சத்யம் நிறுவன அதிபர் ராமலிங்க ராஜு, தனது நிறுவனத்தின் இயக்குநர்களுக்கும், இந்தியப் பங்குச் சந்தை பரிமாற்ற வாரியத்திற்கும் எழுதிய கடிதத்தில், ''கடந்த ஏழு ஆண்டுகளாக நிறுவனத்தின் ஆண்டு வரவு-செலவு கணக்குகளில் 7,106 கோடி ரூபாய் அளவிற்குத் தில்லுமுல்லுகள் செய்திருப்பதாக''த் தானே வலிய வந்து ஒத்துக் கொண்ட செய்தி அன்று வெளியாகியது.

''சத்யம் நிறுவனத்திற்குப் பல்வேறு வங்கிகளில் 5,040 கோடி ரூபாய் ரொக்கச் சேமிப்பாக இருப்பதாகவும், அதன் மூலம் 376 கோடி ரூபாய் வட்டி கிடைத்திருப்பதாகவும், 1,230 கோடி ரூபாய் கடன் இருப்பதாகவும், 490 கோடி ரூபாய் நிறுவனத்திற்கு வர வேண்டிய கடனாகவும் காட்டப்பட்டிருப்பது அனைத்தும் பொய்க் கணக்கு'' என்ற உண்மையை அக்கடிதத்தில் போட்டு உடைத்து இருந்தார், ராஜு. அவர் இந்தப் பொய்க்கணக்குகளின் மூலம் தம்மாத்துண்டு சத்யத்தைப் பன்னாட்டு நிறுவனம் ரேஞ்சுக்கு ஊதிப் பெருக்கினாரா அல்லது சத்யத்தின் இலாபத்தை உறிஞ்சித் திவாலாக்கினாரா என்பதுதான் இம்மோசடியின் பின் மறைந்துள்ள மர்மம்.

ராஜு பொய்க் கணக்குக் காட்டியபொழுதெல்லாம் பங்குச் சந்தையில் ரூ.188.70 என விற்றுக் கொண்டிருந்த சத்யம் நிறுவனப் பங்குகள், அவர் உண்மையைச் சொன்னவுடன் ரூ39.95 ஆகச் சரிந்து விழுந்து விட்டது. உண்மைக்கும் பங்குச் சந்தை வியாபாரத்துக்கும்தான் எப்பேர்பட்ட பொருத்தம்!

சத்யம் நிறுவனத்தின் நலனை முன்னிட்டுத்தான் பொய்க்கணக்கு எழுதியதாகத் தனது கடிதத்தில் ராஜு குறிப்பட்டுள்ளார். மேலும், ''இதன்மூலம் நானோ அல்லது எனது குடும்பத்தாரோ ஒரு பைசா / ஒரு டாலர் கூடப் பலனாகப் பெறவில்லை'' என உருக்கமாகவும் குறிப்பிட்டுள்ளார்.

ராமலிங்க ராஜுவின் இந்தத் 'தன்னலமற்ற' குணத்தை அவரது சக முதலாளிகளே நம்ப மறுக்கிறார்கள். ஏழு ஆண்டுகளுக்கு முன்பு, அதாவது ராஜு பொய்க்கணக்கு எழுதத் தொடங்கியபொழுது சத்யம் நிறுவனத்தின் மொத்தப் பங்குகளில் 22.89 சதவீதம் ராஜுவிடம் இருந்தது. ராஜு இப்பொய்க் கணக்குகள் பற்றிய உண்மையைச் சொல்ல முடிவெடுத்த தருணத்தில், அவரிடம் வெறும் மூன்று சதவீதப் பங்குகளே இருந்தன. ராஜு பொய்க்கணக்கு எழுத எழுத, அதற்கேற்ப பங்குச் சந்தையில் சத்யம் நிறுவனத்தின் பங்குகளின் விலை ஏற ஏற, அவர் தன் கைவசம் இருந்த பங்குகளை கொஞ்சம்கொஞ்சமாகச் சந்தையில் விற்று பணத்தை அள்ளியிருக்கிறார். இவ்விற்பனை மூலம், டிச.2003 தொடங்கி மார்ச் 2007-க்குள் ராஜுவிற்கு 1,252.62 கோடி ரூபாய் வருமானம் கிடைத்திருக்கிறது.

ராஜு எழுதிய பொய்கணக்குப்படி 5,000 கோடி ரூபாய்க்கு மேல் அவரது நிறுவனத்தில் ரொக்கக் கையிருப்பு இருக்க வேண்டும். ஆனால், இருந்ததோ 320 கோடி ரூபாய் தானாம். இந்த இடைவெளியை இட்டு நிரப்புவது எப்படி? ராஜு அதற்கும் ஒரு குறுக்கு வழியைக் கண்டுபிடித்தார். அவர், தனது இரு மகன்களையும் முதலாளிகளாகப் போட்டு மேடாஸ் இன்ஃப்ரா, மேடாஸ் கன்ஸ்ட்ரக்ஷன் என்ற இரு ரியல் எஸ்டேட் நிறுவனங்களை நடத்தி வந்தார். இந்த இரு நிறுவனங்களையும் சத்யமே 160 கோடி அமெரிக்க டாலர் கொடுத்து வாங்கிக் கொள்ளப் போவதாக அறிவித்தார், ராஜு. சத்யம் நிறுவனத்தின் இயக்குநர் அவையும் இத்திட்டத்திற்கு ஒப்புதல் கொடுத்தது.

இத்திட்டம் நிறைவேறியிருந்தால், இல்லாத ரொக்கத்தை எடுத்து அந்த நிறுவனங்களை வாங்கியதாகக் கணக்கு எழுதிவிட்டு ராஜு நிம்மதியாக இருந்திருப்பார். ஆனால், சத்யத்தில் முதலீடு செய்திருந்த சிலர் ராஜுவின் திட்டத்திற்கு எதிர்ப்பு தெரிவித்ததால், ராஜு அந்த குறுக்கு வழியைக் கைவிட நேர்ந்தது. பொருளாதார நெருக்கடியால் ஐ.டி. துறையும் சருக்கலில் இருந்ததால், வரவு-செலவு கணக்கில்

**''420'' குற்றங்களுக்காகக் கைது செய்யப்பட்டுள்ள சத்யம் நிறுவன முன்னாள் அதிபர் ராமலிங்க ராஜு (நடுவில்) போலீசு விசாரணைக்காகச் சிறையில் இருந்து அழைத்துச் செல்லப்படுகிறார்.**





படிப்பகம்

www.padippakam.com

செய்யப்பட்ட தில்லுமுல்லு, மோசடிகளை ஒப்புக்கொள்ள வேண்டிய இக்கட்டில் ராஜு சிக்கிக் கொண்டார்.

ராஜுவே தான் ஏழாயிரம் கோடி ரூபாய் அளவிற்குப் பொய்க்கணக்கு எழுதி தில்லுமுல்லு செய்திருப்பதை ஒத்துக் கொண்டுள்ளார். எனினும், சட்டத்தின் இரும்புக் கரம் அவர் மீது உடனடியாகப் பாய்ந்து விடவில்லை. இரண்டு நாட்கள் கழித்து ராஜுவே ஆந்திர மாநில போலீசில் சரணடைந்தார். இந்த மோசடி தொடர்பான முக்கியமான ஆவணங்களை அழிப்பதற்கு இந்த இரண்டு நாள் அவகாசமே போதுமானது. இந்தக் கைதுகூட, பங்கு பரிமாற்ற வாரியம் ராஜுவை நெருங்கி விடக் கூடாது என்பதற்காகத்தான் நடந்திருப்ப தாகக் கூறப்படுகிறது. ஆந்திர நீதிமன்றம் ராஜுவைப் பங்கு பத்திர பரிமாற்ற வாரியம் விசாரிக்க அனுமதி மறுத்திருப்பது இந்த வதந்தியை உறுதிப்படுத்துகிறது. கிரிமினல்களுக்கு போலீசைவிட வேறு யார் நல்ல பாதுகாப்பைத் தந்துவிட முடியும்?

**நாட்டில் நடக்கும் வரி ஏய்ப்பும், உள்நாட்டில் புழங்கும் கருப்புப் பணமும் முதலாளித்துவ நிறுவனங்கள் அனைத்திலும் பொய்க் கணக்கு எழுதுவது புரையோடிப் போயிருப்பதைத்தான் காட்டுகின்றன.**

•••

**ச**த்யம் நிறுவனத்தில் நடந்துள்ள மோசடியைத் தனிப் பட்ட நிறுவனத்தில் நடந்துவிட்ட அசம்பாவிதமாகவும், ராம லிங்க ராஜு என்ற தனிப்பட்ட நபரின் பேராசையால் விளைந் துவிட்ட தவறாகவும் பார்க்க வேண்டும் என நிறுவுவதற்கு முதலாளித்துவவாதிகள் அனைவரும் வரிந்துகட்டிக் கொண்டு நிற்கிறார்கள். சி.ஐ.ஐ. என்ற தரகு முதலாளிகள் சங்கம் சத்யம் நிறுவனத்தில் நடந்துள்ள மோசடியைக் காட்டி மற்ற தனியார் நிறுவனங்களையும் சந்தேகக் கண்கொண்டு பார்க்கக் கூடாது எனப் பொதுமக்களுக்கு வகுப்பு எடுக்கிறது.

ஒரு பெரிய நிறுவனம் என்றால், அதனின் வரவு-செலவு கணக்குகளைக் கண்காணிப்பதற்கு அந்நிறுவனத்திலேயே வேலை பார்க்கும் தணிக்கை அதிகாரிகள், வெளியிலிருந்து வந்து தணிக்கை செய்யும் நிறுவனங்கள், அந்நிறுவனத்தின் பங்குகளை வாங்கியுள்ள பொதுமக்களின் நலன்களைப் பாது காப்பதற்காகவே நியமிக்கப்படும் தனி இயக்குநர்கள், இதற்கு அப்பால் கம்பெனி விவகாரங்களைக் கண்காணிப்ப தற்காக நியமிக்கப்பட்டுள்ள அரசு அதிகாரிகள், பங்கு பத்திர பரிமாற்ற வாரியம், வருமான வரித் துறை, ரிசர்வ் வங்கி எனப் பல அடுக்குக் கண்காணிப்பு வளையங்களைச் சட்டமே உரு வாக்கி வைத்திருக்கிறது. இவர்கள் கண்களில் எல்லாம் மிளகாய்ப் பொடியைத் தூவிவிட்டு ராஜு என்ற தனிப்பட்ட நபர் 7,000 கோடி ரூபாயைச் சுருட்டிவிட்டார் என்பது நம்பும் படியாக இல்லை; அப்படி அது உண்மையென்றால், மற்றவர் களெல்லாம் ராஜு பொய்கணக்கு காட்டும்பொழுது எதைப் புடுங்கிக் கொண்டிருந்தார்கள் என்ற கேள்விக்கு விடையும் கிடைக்கவில்லை.

**அமெரிக்க அதிபராக இருந்த கிளிண்டன் ஹைதராபாத் நகருக்கு வந்தபோது, அவருக்கு அருகாமையில் அமரும் பேற்றை ராமலிங்க ராஜுவுக்கு ஏற்படுத்திக் கொடுத்தார் சந்திரபாபு நாயுடு.**



சத்யம் நிறுவனத்தின் இயக்குநர்கள் அவையில் (Board of Directors) முன்னாள் அமைச்சரவைச் செயலர் டி.ஆர்.பிரசாத், அமெரிக்காவின் ஹார்வார்டு பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணியாற்றிய கிருஷ்ண பலேப்பு, ஐ.டி.துறையின் ஜாம்பவான் வினோத் ராம், இன்டர்நேஷனல் ஸ்கூல் ஆப் பிசினஸ் என்ற புகழ்பெற்ற மேலாண்மை கல்வி நிறுவ னத்தில் பணியாற்றிய மோகன் ராவ் உள்ளிட்ட பல திறமைசாலிகள் தனி இயக்குநர்களாக (Independent Directors) இம்மோசடி நடந்த காலத்தில் பணியாற்றி வந்துள்ளனர்.

ராஜு காட்டிய கணக்கு வழக்குகள் பற்றி எந்தக் கேள்வியும் எழுப்பாமல் தலையாட்டிவிட்டு வருவ தற்கு இந்த ஜாம்பவான்கள் எதற்கு? சத்யம் நிறுவ னத்தில் இயக்குநர்கள் என்ற பெயரில் இருந்த தலை யாட்டி பொம்மைகள் ஒவ்வொருவரும் இயக்குநர் அவைக் கூட்டத்தில் அமரும் கட்டணம், ஆலோ சனைக் கட்டணம் என்ற பெயரில் 2006-07-ஆம் அண்டில் மட்டும் ரூ.12.4 இலட்சம் முதல் ரூ.99.48 இலட்சம் வரை தங்களின் 'தகுதி'க்கு ஏற்பச் சம்பாதித் துள்ளனர்.

அ.தி.மு.க. தலைவி ஜெயா நடத்தும் கட்சி பொதுக் குழுக் கூட்டத்தில் உறுப்பினர்களின் வாயை பிரியா



படிப்பகம்

www.padippakam.com

ணியைக் கொண்டு அடைப்பதைப் போல, ராஜு இயக்குநர்களின் வாயைப் பணக் கட்டு களைக் கொண்டு அடைத்துள்ளார். அதனால்தான், சத்யம் நிறுவனத்தின் பணத்தை எடுத்து மேடாஸ் நிறுவனங்களை வாங்க ராஜு போட்ட சதித் திட்டத்திற்கு இந்த இயக்குநர்கள் அனைவருமே மறுப்பேதும் சொல்லாமல் ஒப்புதல் அளித்துள்ளனர். மேலும், சத்யம் நிறுவனத்தில் இருந்த 17 இயக்குநர்களுமே தங்களிடம் இருந்த சத்யம் பங்குகளை, கப்பல் கவிழும் முன்னே நல்ல விலைக்கு விற்றுக் காசும் பார்த்து விட்டனர்.



சிறந்த ஐ.டி.துறை நிர்வாகி என்ற விருதை ஆந்திர முதல்வர் ராஜசேகர ரெட்டியிடமிருந்து பெறுகிறார், ராமலிங்க ராஜு.

தனியார் நிறுவனங்கள் நடத்தும் பண மோசடி, நம்பிக்கை துரோகம் ஆகியவற்றுக்கு உடந்தையாக இருந்து வரும் பிரைஸ்வாட்டர் கூப்பர் நிறுவனத்தின் வரலாறு பற்றித் தனிப் புத்தகமே போடலாம். இந்தியாவைச் சேர்ந்த குளோபல் ட்ரஸ்ட் வங்கி திவாலானபோதும், அமெரிக்காவைச் சேர்ந்த பெர்னார்ட் எல். மடோஃப் இன்வெஸ்மென்ட் செக்யூரிட்டீஸ் என்ற நிதி நிறுவனம் திவாலானபோதும், தற்பொழுது சத்யத்திற்கும் தணிக்கை நிறுவனமாக இருந்து ஊரான் பணத்தை இம்முதலாளிகள் அமுக்கிக் கொள்வதற்குத் தன்னாலான எல்லா உதவிகளையும் செய்து கொடுத்திருக்கிறது, பிரைஸ்வாட்டர் கூப்பர். இன்ஃபோசிஸ், விப்ரோ, டி.சி.எஸ்., போன்ற ஐ.டி. நிறுவனங்கள் தங்கள் தணிக்கை நிறுவனங்களுக்குக் கொடுத்துவரும் ஆண்டுக் கட்டணத்தைவிட அதிகக் கட்டணத்தை பிரைஸ்வாட்டர் நிறுவனத்திற்கு சத்யம் கொடுத்திருப்பதாகக் கூறப்படுகிறது. கொள்ளையில் பங்கு கொடுக்காமல் கூட்டாளியின் வாயை எப்படி மூட முடியும்?

சத்யம் நிறுவனப் பங்குகளின் விலை உயர உயர, அதனால் ராஜு மட்டும்தானா பலன் அடைந்திருக்கிறார்? பங்குச் சந்தையில் ஈடுபட்டுள்ள தரகர்கள், பரஸ்பர நிதி நிறுவனங்கள், வங்கிகள், அந்நிய நிதி நிறுவனங்கள் உள்ளிட்ட பலரும் சத்யம் நிறுவனப் பங்குகளை வாங்கி விற்றதன் மூலம் பல கோடி ரூபாய் இலாபம் பார்த்திருப்பார்கள். காற்

# தாய் எட்டடி பாய்ந்தால் குட்டி பதினாறு அடி பாய்கிறது!

**ச**த்யம் நிறுவனத்தில் நடந்துள்ள பொய்க்கணக்கு மோசடியில் மறைந் துள்ள உண்மைகளைக் கண்டறிய வேண்டும் என்றால், ராமலிங்க ராஜுவின் மகன்களை முதலாளிகளாகக் கொண்டு இயங்கிவரும் மேடாஸ் நிறுவனங்களைத் தோண்டித் துருவ வேண்டும். இந்த இரண்டு நிறுவனங்களின் மீதும் கை வைத்தால், ராமலிங்கராஜு-ஆந்திர முதல்வர் ராஜசேகர ரெட்டி-அதிகார வர்க்கம் ஆகியோருக்கும் இடையேயான நெருக்கம் மட்டுமல்ல, மாபெரும் ஊழல்-அதிகார முறைகேடுகள் கூட அம்பலத்துக்கு வரும்.

சத்யம் நிறுவன அதிபர் ராமலிங்க ராஜு, ஹை-டெக் முதல்வர் சந்திரபாபு நாயுடுவின் ஆட்சியிலேயே அரசாங்கத்தின் செல்லப் பிள்ளையாகிவிட்டார். நாயுடு ஆட்சிக்குப் பின் வந்த ரெட்டி ஆட்சியிலோ, ராஜு அரசாங்கத்தின் ஓர் அங்கமாகவே மாறிவிட்டார். காங்கிரசு ஆட்சியில் தான் மேடாஸ் நிறுவனங்களுக்கு ''பம்பர்'' பரிசு அடித்தது போல, 12,000 கோடி ரூபாய் பெறுமான ஹைதராபாத் பெருநகர ரயில் திட்டம்; 1,500 கோடி ரூபாய் பெறுமான மச்சிலிப்பட்டிணம் துறைமுகத்திட்டம்; காக்கிநாடாவில் மூன்று சிறப்புப் பொருளாதார மண்டலங்கள் அமைக்கும் திட்டம் உள்ளிட்டு 40,000 கோடி ரூபாய் பெறுமான பல கட்டுமானத் திட்டங்கள் கிடைத்தன.

அரசாங்க விதிகளின்படி, கட்டுமானத் திட்டங்கள் முடிவடைவதைப் பொருத்துதான் ஒப்பந்தக்காரர்களுக்குப் பணம் பட்டுவாடா செய்யப்படும். ஆனால், ஆந்திர அரசோ, இந்த விதிமுறைகளைத் தலைகீழாய் புரட்டிப் போட்டு, மேடாஸ் நிறுவனம் பாந்தர் துறைமுகக் கட்டுமானப் பணிகளைத் தொடங்கும் முன்பே, மேடாஸுக்கு 335 கோடி ரூபாயைச் சுளையாகத் தூக்கிக் கொடுத்தது.

ஹைதராபாத் பெரு நகர ரயில் திட்டத்தை நிறைவேற்ற ஆதரவு நிதியாக 4,800 கோடி ரூபாயை ஒதுக்க ஆந்திர அரசு முடிவெடுத்த பொழுது, மேடாஸ் நிறுவனமோ பணத்திற்குப் பதிலாக நிலமாகத் தருமாறு கோரியது. இதன்படி, ஆந்திர அரசு மேடாஸுக்கு 275 ஏக்கர் நிலம் ஒதுக்கிக் கொடுத்தது. இதனையடுத்து, ரயில் பாதையின் நீளத்தை மேலும் 5 கி.மீ தூரத்திற்கு நீட்டிக்க வேண்டும் என்ற கோரிக்கையை ஆந்திர அரசு முன்வைத்தது. இதன்பின்னே, மேடாஸுக்கு ஒதுக்கப் பட்ட நிலத்தின் மதிப்பை உயர்த்தும் சதி இருப்பதைப் புரிந்து கொண்ட இத்திட்டத்தின் ஆலோசகரும், தில்லை பெருநகர


படிப்பகம்

www.padippakam.com

றுள்ளபோதே தூற்றிக்கொண்ட இந்தச் சூதாடிகளை எந்தச் சட்டத்தின் கீழ் கைது செய்ய முடியும்?

•••

இது போன்ற மோசடி இந்தியாவிலேயே இப்பொழுதுதான் முதன்முறையாக நடப்பதுபோல முதலாளித்துவவாதிகள் புளுகிக் கொண்டு திரிகிறார்கள். அர்சத் மேத்தாவும், கேதான் பரீக்கும் வங்கிப் பணத்தை எடுத்துப் பங்குச் சந்தையில் கொட்டி, அதன் மூலம் சிலபல நிறுவனங்களின் பங்குகளின் விலையைச் செயற்கையாக உயர்த்தி மோசடி செய்தார்கள் என்றால், ராமலிங்க ராஜு பொய்க்கணக்கு எழுதி, அதன் மூலம் தனது நிறுவனத்தின் பங்கு விலையைச் செயற்கையாக உயர்த்திக் கொள்ளையடித்திருக்கிறார். பல முதலாளிகள் அர்சத் மேத்தா போன்ற தரகர்கள் மூலம் நடத்தும் மோசடியை - செயற்கையாக பங்கின் விலையை உயர்த்துவதை - ராஜு தானே செய்திருக்கிறார் என்பதைத் தவிர இந்த இரண்டு மோசடிகளுக்கும் அடிப்படையிலேயே ஏதாவது வேறுபாடு இருக்கிறதா?

தரகு முதலாளிகளிலேயே ராமலிங்க ராஜு மட்டும்தானா பொய்க் கணக்கு பேர்வழி? நாட்டில் நடக்கும் வரி ஏய்ப்பும், உள்நாட்டில் புழங்கும் கருப்புப் பணமும், சுவிஸ் வங்கிகளில் பதுக்கி வைக்கப்பட்டுள்ள கருப்புப் பணமும் சிறிதோ பெரிதோ முதலாளித்துவ நிறுவனங்கள் அனைத்திலும் பொய்க் கணக்கு எழுதுவது புரையோடிப் போயிருப்பதைத்தானே காட்டுகின்றன.

அமெரிக்காவில் 1990-களில் அந்நாட்டுப் பங்குச் சந்தை ஊதிப் பெருத்ததற்குக் காரணமே பொய்க் கணக்குதான் என சி.பி.சந்திரசேகர் என்ற பொருளாதார நிபுணர் குறிப்பிடுகிறார். அக்காலக்கட்டத்தில் அமெரிக்காவைச் சேர்ந்த என்ரான், அடெல்பியா கம்யூனிகேஷன்ஸ், டைகோ, வேர்ல்டுகாம் உள்ளிட்ட பல நிறுவனங்கள் பொய்க்கணக்கு எழுதி, அதன் மூலம் தங்கள் நிறுவனப் பங்குகளை ஊதிப் பெருக்க வைத்துப் பின் அந்நிறுவனங்கள் திவாலானதாக சி.பி.சந்திரசேகர் குறிப்படுகிறார். தனியார்மயம் - தாராளமயம் என்ற பெயரில் அமெரிக்க பாணி முதலாளித்துவத்தைச் வரித்துக் கொண்ட பிறகு, அதன் அசிங்கங்களை மட்டும் "சென்சார்" செய்துவிட முடியுமா?

ஒரு நிறுவனத்தில் கிடைக்கும் இலாபத்தைத் தனது சகோதர நிறுவனங்களுக்குக் கடத்திக்கொண்டு போவதை கார்ப்பரேட் நிறுவனங்களில் சர்வசாதாரணமாகக் காண முடியும். வரி கட்டாமல் ஏய்க்கவோ அல்லது இலாபத்தில் இயங்கும் நிறுவனத்தை மூடிவிட்டு, அதைவிட அதிக இலாபம் தரும் வேறொரு தொழிலுக்கு மாறிச் செல்லவோ இந்த இலாபக் கடத்தல் சதியைத் தரகு முதலாளிகள் கையாளுகின்றனர். சென்னை அம்பத்தூரில் இயங்கி வந்த டன்லப் நிறுவனம் திடீரென மூடப்பட்டு ஆயிரத்திற்கும் மேற்பட்ட தொழிலாளர்கள் வீதியில் வீசியெறியப்பட்டதற்கு இந்த இலாபக் கடத்தல்தான் காரணம். பொதுத்துறை நிறுவனமான வீ.எஸ்.என்.எல்.-ஐ வாங்கிய டாடா, அந்நிறுவனத்தில் இருந்த ஆயிரம் கோடி ரூபாய் கையிருப்பை நட்டத்தில் இயங்கிய தனது சகோதர நிறுவனத்திற்குக் கடத்தி வந்தார்.

ஒவ்வொரு தரகு முதலாளியும் பொய்க்கணக்கு எழுதி வரி கட்டாமல் ஏய்ப்பதற்காகவே, இலாபத்தைக் கடத்துவதற்காகவே பல துணை நிறுவனங்களை நடத்தி வருகிறார்கள்.

---

ரயில் கார்ப்பரேஷனின் தலைவருமான சிறீதரன், இந்த முறைகேட்டை அம்பலப்படுத்தி திட்ட கமிசனிடம் புகார் செய்தார். காங்கிரசு அரசும் திட்ட கமிசனும் சிறீதரனின் புகாரை விசாரிக்க மறுத்ததோடு, அவரைத் திட்ட ஆலோசகர் பதவியில் இருந்து தூக்கி எறிந்தார்.

விசாகப்பட்டிணத்தில் ஒரு ஏக்கர் 10 லட்ச ரூபாய் என்ற விலையில் 50 ஏக்கர் நிலத்தை மேடாஸுக்கு ஒதுக்கிக் கொடுத்துள்ளது, காங்கிரசு அரசு. ஆனால், இந்நகரில் ஒரு ஏக்கர் நிலத்தின் சந்தை மதிப்பு 4 கோடி ரூபாய் முதல் 5 கோடி ரூபாய் வரை இருப்பதாகக் கூறப்படுகிறது.

மச்சிலிப்பட்டிணம் துறைமுகப் பணிகள் தொடங்கும் முன்பே, அங்கு 412 ஏக்கர் நிலத்தை ஆந்திர அரசு மேடாஸுக்குத் தூக்கிக் கொடுத்துள்ளது.

இவையெல்லாம், ராமலிங்க ராஜு காங்கிரசு ஆட்சியில் ராஜசேகர ரெட்டியின் துணையோடு அடித்த கொள்ளையில் ஒரு சில துளிகள். ராமலிங்க ராஜு சத்யம் நிறுவனத்தில் இருந்து கடத்திய 7,000 கோடி ரூபாயையும் மேடாஸ் நிறுவனங்களின் பெயரில் நிலங்களாக வாங்கிக் குவித்திருக்கலாம்; ஹவாலா முறையில் மொரீசியஸ் உள்ளிட்ட வெளிநாடுகளுக்குக் கடத்தியிருக்கலாம் எனப் பல அனுமானங்கள் உலா வருகின்றன.

ராமலிங்க ராஜு, காங்கிரசு, தெலுங்கு தேசம், பா.ஜ.க. என சர்வ கட்சிகளுக்கும் நெருக்கமாக இருந்ததால், ஆட்சி மாறினால் கூட உண்மை வெளிவருமா என்பது சந்தேகமாக இருக்கிறது. மேலும், ராஜு, தான் கொள்ளையடித்த பணத்தையும், வளைத்துப் போட்ட நிலத்தையும் சட்டப்படியே பாதுகாக்க என்னென்ன ஏற்பாடுகளை செய்து வைத்திருக்கிறாரோ? கன்னக் கோல் வைப்பவனுக்குத்தானே அதன் சூட்சுமம் தெரியும்!



ஹைதராபாத் மெட்ரோ ரயில் திட்டத்தில் மேடாஸ் நிறுவன ஊழலை அம்பலப்படுத்திய சிறீதரன்.

இறுதியா ஒன்று, அரசியல்வாதிகளோடு தொடர்பு வைத்துக் கொண்டு தொழிலை விரிவாக்கியது புது முதலாளி ராமலிங்க ராஜு மட்டும் தானா? 'சுதந்திர'ப் போராட்ட காலத்தில் இருந்தே, காந்தி - நேரு - காங்கிரசோடு தொடர்பு வைத்துக் கொண்டு, தங்களது தொழில் சாம்ராஜ்யங்களைக் கட்டியமைத்தவர்கள்தான் டாடாவும், பிர்லாவும். அம்பானியின் அரசியல் தொடர்பு ஊருக்கே தெரிந்ததுதான். சின்ன அம்பானி சமாஜ்வாதிக் கட்சியின் எம்.பி. ஆகவும் அவதாரமெடுத்துவிட்டார். கோடீசுவரர்களும், தொழில் அதிபர்களும்தான் தேர்தலில் போட்டியிட முடியும் என்ற நிலை உருவாகி வரும்பொழுது, ஜனநாயகமாவது, மண்ணாவது! ●



படிப்பகம்

www.padippakam.com

இப்படிப்பட்ட மோசடிகளுக்காகத் தண்டிக்க வேண்டும் என்றால், முதலில் அம்பானி சகோதரர்களைத்தான் தண்டிக்க வேண்டும். வெளிநாட்டு அழைப்புகளை உள்ளூர் அழைப்புகளாகக் காட்டியதன் மூலம் மட்டுமே அம்பானி சகோதரர்கள் ஆயிரம் கோடி ரூபாய்க்கு மேல் அரசுக்குச் செலுத்தாமல் மோசடி செய்திருக்கிறார்கள். பொதுத்துறை வங்கிகளில் கடன் வாங்கி, அதனைத் திருப்பிச் செலுத்தாமல் ஏப்பம் விட்டதற்காக எந்தத் தரகு முதலாளி தண்டிக்கப்பட்டிருக்கிறார்?



உலக வங்கியின் ஆர்டர்களைப் பெற அதன் ஊழியர்களுக்கு இலஞ்சம் கொடுத்த விப்ரோ நிறுவன அதிபர் அசிம் பிரேம்ஜி.

ஏதோ ராஜு என்ற ஒருவராவது மாட்டிக் கொண்டாரே என நாம் ஆறுதல் அடைந்துவிட முடியாது. ஏனென்றால், மாட்டிக் கொண்ட ராஜு தண்டிக்கவும்படுவார் என்பதற்கு எந்த உத்திரவாதமும் கிடையாது.

●●●

ராமலிங்க ராஜு, தனது சத்யம் நிறுவனம் வெறும் மூன்று சதவீத இலாபத்திற்குத்தான் வெளிநாட்டு வேலைகளை எடுத்துச் செய்ததாகவும், அதனை ஈடுகட்டத்தான் இலாபத்தை பெருக்கிக் காட்டி பொய்க் கணக்கு எழுதியதாகவும் கூறிவருகிறார்.

டி.சி.எஸ்., இன்ஃபோசிஸ் போன்ற மற்ற ஐ.டி.நிறுவனங்கள் 20 சதவீத இலாபத்திற்கு மேல் கிடைக்கும்படியான வேலைகளை எடுத்துச் செய்துவரும்பொழுது, சத்யம் நிறுவனத்திற்கு 3 சதவீதம் மட்டுமே இலாபம் கிடைத்து வந்ததாகக் கூறப்படுவதை நம்ப முடியாது என ஐ.டி. துறையைச் சேர்ந்த வல்லுநர்கள் குறிப்பிடுகிறார்கள். மேலும், உலகிலேயே மிகப்பெரிய நிறுவனங்களாகப் பட்டியல் இடப்பட்டுள்ள 500 நிறுவனங்களுள், 180 நிறுவனங்களை சத்யம் வாடிக்கையாளராகக் கொண்டிருப்பதால், சத்யத்தின் இலாபம் அதிகமாகத்தான் இருக்க முடியும் என்றும் அவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

ராஜு உண்மை சொல்வதாக எடுத்துக் கொண்டால், டி.சி.எஸ்., இன்ஃபோசிஸ் போன்ற மற்ற நிறுவனங்கள் இலாபத்தைக் கூட்டிக்காட்டிப் பொய்க் கணக்கு எழுதி வருகிறார்கள் என்ற முடிவுக்கு வர வேண்டும். ராஜு பொய் சொல்கிறார் என்றால், அவர் சத்யம் நிறுவனத்தின் 7000 கோடி ரூபாய் இலாபத்தையும் மொத்தமாகச் சுருட்டிக் கொண்டு எங்கோ பதுங்கி விட்டார் என்று எடுத்துக் கொள்ள வேண்டும். இதில் எது உண்மை என்பதைக் கண்டுபிடித்துவிட பங்கு பத்திர பரிமாற்ற வாரிய (''செபி'') அதிகாரிகள் துடிக்கிறார்களாம்.

● சத்யம் நிறுவனம் மூன்று ஆண்டுகளாகத் தனது பங்குதாரர்களுக்கு இலாப ஈவு கொடுக்கவில்லை என்பதைக் கேள்வி கேட்காத செபி;

● 2000-ஆம் ஆண்டில் ராமலிங்க ராஜுவின் மைத்துனர் நடத்தி வந்த சத்யம் எண்டர்பிரைசஸ் என்ற நிறுவனத்தை, சத்யம் கம்ப்யூட்டர் நிறுவனத்துடன் இணைத்த பொழுது நடந்த மோசடியைக் கண்டும் காணாது நடந்து கொண்ட செபி;

● 1999-ஆம் ஆண்டு சத்யம் நிறுவனத்தின் துணை நிறுவனமான சத்யம் இன்ஃபோ வே, இந்தியா வேர்ல்டு கம்யூனிகேசன் என்ற நிறுவனத்தை அதிக விலை கொடுத்து வாங்கியதில் நடந்த மோசடியைச் சகித்துக் கொண்ட செபி;

● ராமலிங்க ராஜு கடந்த நான்கு ஆண்டுகளாகத் தனது கையில் உள்ள பங்குகளை விற்றுக் கொண்டே போவது ஏன் என ஆராயாத செபி;

● ராமலிங்க ராஜு இந்த மோசடியை ஒப்புக் கொள்ளுவதற்கு முன்பாக, இந்த 'இரகசியத்தை'த் தெரிந்து கொண்ட வங்கிகள், ராஜு தங்களிடம் அடமானமாக வைத்திருந்த 2.45 இலட்சம் பங்குகளைக் கமுக்கமாக விற்று 300 கோடி ரூபாய் திரட்டிக் கொண்டதைத் தடுக்கத் திராணியற்ற செபி, இப்பொழுது தும்பை விட்டு வாலை பிடிக்கிறது.

இம்மோசடிகளைச் சட்டப்படியோ அல்லது சட்டத்தின் ஓட்டைகளைப் பயன்படுத்திக் கொண்டோ ராமலிங்க ராஜு நடத்தியிருக்கிறார் என்றால், இப்பொழுது மட்டும் அவர் செபியிடம் மாட்டிவிடுவாரா?

●●●

ராமலிங்க ராஜு வியாபாரத்தில் கால்பதித்த காலந் தொட்டே, அவர் மீது பல மோசடி குற்றச்சாட்டுகள் இருந்து வந்துள்ளன. இந்தியக் குடியரசுக் கட்சி யின் நாடாளுமன்ற உறுப்பினர் ராமதாஸ் அத்வாலே 2003-ஆம் ஆண்டிலேயே, ''ராஜு குடும்பம் பல்வேறு பினாமி வங்கிக் கணக்குகள் மூலம் வரியை ஏமாற்றுவது பற்றி செபி விசாரிக்க வேண்டும்'' எனக் கோரினார். அவரது குற்றச்சாட்டு எவ்வித விசாரணையுமின்றி அமுக்கப்பட்டது.

இன்னொருபுறம் முதலாளித்துவ ஊடகங்கள், அவரை உழைப்பால் உயர்ந்த உத்தமராகக் காட்டி அவருக்கு ஒளிவட்டம் கட்டின. அவரது வெற்றி தனியார்மயத்தின் வெற்றியாகவும்; முன்னேறத் துடிக்கும் நடுத்தர வர்க்கத்தின் குறியீடாகவும் ராஜு ஊடகங்களால் முன்நிறுத்தப்பட்டார். ராஜு சத்யத்தில் பொய்க்கணக்கு எழுதிவந்த அதே சமயத்தில், 2002-லும், 2008-லும் அவர் மிகச் சிறந்த நிர்வாகியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, தங்க மயில் விருது பெற்றார்.

பணமும், புகழும் உயர, உயர, அவர் சந்திரபாபு நாயுடுவோடும், அதன்பின் ராஜசேகர ரெட்டியோடும் நெருக்கத்தை ஏற்படுத்திக் கொண்டார். இந்த நெருக்கத்தைப் பயன்படுத்திக் கொண்டு, ரியல் எஸ்டேட் வியாபாரத்தில் புகுந்து விளையாடினார். சிறப்புப் பொருளாதார மண்டலத் திட்டமும், அடிக்கட்டுமானத் துறையில் தனியாரோடு கூட்டுச் சேர்வது என்ற அரசின் முடிவும் ராஜுவின் கனவுகளுக்குப் பக்கபலமாக அமைந்தன. பங்குச் சந்தையில் புகுத்தப்பட்ட தாராளமயமும்; தரகு முதலாளித்துவ நிறுவனங்கள் தங்களைத் தாங்களே கண்காணித்துக் கொள்ளும்படி, கம்பெனி விவகாரச் சட்டம் நீர்த்துப் போகச் செய்யப்பட்டதும்; ஐ.டி.



படிப்பகம்

www.padippakam.com

துறைக்கு அளிக்கப்பட்ட வரி விலக்குகளும், ராமலிங்க ராஜு துணிந்து தனது மோசடிகளை நடத்தியதற்கு இடம் கொடுத்தன.

ஒரேயொரு ராஜு மாட்டிக் கொண்டிருக்கலாம்; ஆனால், தனியார்மயம் - தாராளமயம் ஓராயிரம் ராஜுக்களை உருவாக்கும் அடிப்படையைக் கொண்டிருக்கிறது என்ற உண்மையை நாம் மறந்துவிடக் கூடாது. ராஜு கொள்ளை நோயைப் பரப்பும் கொசு என்றால், அந்தக் கொசுவை உற்பத்தி செய்யும் சாக்கடைதான் முதலாளித்துவப் பொருளாதாரம்.

சத்யம் நிறுவனத்தில் 8,000 கோடி ரூபாய் முதலீடு செய்துள்ள ஆயுள் காப்பீட்டு கழகத்தின் தலைவர், டி.எஸ்.விஜயன், ராமலிங்க ராஜுவின் மோசடிகளை மும்பய்ப் பயங்கரவாதத் தாக்குதல்களுடன் ஒப்பிட்டுள்ளார். தனியார்மயம் - தாராளமயத்திற்குப் பின் அர்சத் மேத்தா ஊழல், கேத்தன் பரீக் ஊழல், யு.டி.ஐ.மோசடி, தேக்கு மரப் பண்ணை மோசடி என அடுக்கடுக்காக, இந்த முதலாளித்துவ பயங்கரம் ஒரு கால அலைவரிசையில் நமது நாட்டு மக்களைத் தாக்கி வருகிறது.

1992-க்கு பின் வேர்விட்ட முசுலீம் பயங்கரவாதத்தை ஒழிக்க தடா, பொடா எனப் பல பாசிசச் சட்டங்களைக் கொண்டு வந்திருக்கும் அரசு, இம்முதலாளித்துவ பயங்கரத்தை ''ஒழிக்க'' பழைய உளுத்துப் போன சட்டங்களைத்தான் வைத்துக் கொண்டிருக்கிறது.




அரசியல்வாதிகள் செய்யும் ஊழலைக்காட்டி, அரசியல் அமைப்பு முறை கெட்டுவிட்டதாகப் பட்டிமன்றம் நடத்தும் மேல்தட்டு நடுத்தர வர்க்கம், முதலாளிகள் நடத்தும் இந்த ஊழல், மோசடிகளைப் பெரிதாகக் கண்டு கொள்வதில்லை. சத்யம் நிறுவன ஊழியர்கள் ஹைதராபாத் சிறைக்கு முன்னதாக ராமலிங்க ராஜுவுக்கு ''ஜே'' போட்டு நிற்பதும்; ஐ.டி.துறையில் வேலை பார்க்கும் நடுத்தரவர்க்கம் அங்கு நடக்கும் அட்டூழியங்கள் - மோசடிகளை, சத்யம் மோசடி அம்பலமான பிறகும் சகித்துக் கொண்டு நிற்பதுமே இதற்கு சாட்சி. முதலாளிகளின் ஊழல் மோசடி மட்டுமல்ல, நடுத்தர வர்க்கத்தின் இந்தச் சகிப்புத்தன்மையும் பாராமுகமும் கூட அருவெறுக்கத்தக்கதுதான்!

● குப்பன்

# தவறுக்கு வருந்துகிறோம்

புதிய ஜனநாயகம் ஜனவரி 2009 இதழில் வெளியான **''த.மு.எ.ச. மாநாடு: கோலிவுட்டை வளைக்க நடந்த கூத்து''** என்ற கட்டுரையில், ''இ.எம்.எஸ். நம்பூதிரிபாடின் முதல் 'கம்யூனிஸ்ட் கட்சி' அரசைக் கவிழ்த்ததில் அமெரிக்க கொலைகார உளவு நிறுவனமான சி.ஐ.ஏ.வின் பங்கு பற்றிய புதிய நூலை அரங்குக்கு வெளியே விற்றுக் கொண்டிருந்த இவர்களே, சி.ஐ.ஏ.வின் பிரதிநிதியான போர்டு பவுண்டேசன் நடத்தும் அம்பேத்கர் ஆய்வு மையம் (பாளையங்கோட்டை நாட்டார் வழக்காற்றியல் மையம்) சார்பாக தர்மராஜனை ஆசி வழங்க அழைத்திருந்தனர்'' என்று குறிப்பிட்டிருந்தோம்.

இந்தப் பத்தியில் குறிப்பிடப்பட்டிருக்கும் பேரா. தருமராஜன், பாளையங்கோட்டை தூய சவேரியார் கல்லூரியில் இயங்கிவரும் நாட்டார் வழக்காற்றில் துறையில் (Department of Folklore, St. Xavier's College, Palayamkottai) பணிபுரியவர். இத்துறை, பல்கலைக்கழக மானியக் குழு(UGC)வின் உதவியோடு இயங்கி வருகிறது. பேரா. தருமராஜனின் அம்பேத்கர் ஆய்வுமையம் பல்கலைக்கழக மானியக் குழுவின் உதவியோடுதான் செயல்பட்டு வருகிறது.

அதேநேரத்தில் இதே சவேரியார் கல்லூரியில்தான் நாட்டார் வழக்காற்றியல் மூலாதாரம் மற்றும் ஆய்வு மையம் (Floklore Resources and Research Centre) என்ற அமைப்பும் இயங்கி வருகிறது. இந்த ஆய்வு மையத்துக்கு போர்டு பவுண்டேசன் பல இலட்சக்கணக்கில் நிதியுதவி செய்துள்ளது.

சவேரியார் கல்லூரியில் இயங்கும் நாட்டார் வழக்காற்றியல் துறைக்கும், நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையத்துக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு என்ற போதிலும், நாட்டார் வழக்காற்றியல் துறை என்பது வேறு; நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம் என்பது வேறு. முன்னது, பல்கலைக்கழக மானியக் குழுவின் கட்டுப்பாட்டில் இயங்குகிறது; பின்னது, போர்டு பவுண்டேசனின் நிதியுதவியில் இயங்குகிறது என்பதை இக்கல்லூரியின் ஆய்வாளர்களும் பேராசிரியர்களும் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இரண்டையும் வேறுபடுத்திப் பார்க்காமல், நாட்டார் வழக்காற்றியல் துறை மற்றும் மையம் அனைத்துமே போர்டு பவுண்டேசனின் நிதியுதவி பெறும் அமைப்புகளாகக் கருதி, தவறான தகவலைக் கொடுத்துவிட்டோம். தீர விசாரித்தறியாமல் இவ்வாறு தவறாக எழுதியமைக்காகவும், இதன்மூலம் பேரா. தருமராஜனுக்கு அவப்பெயர் ஏற்படுத்தியமைக்காகவும் மிகவும் வருந்தி சுயவிமர்சனம் ஏற்கிறோம்.

— ஆசிரியர் குழு.


படிப்பகம்

www.padippakam.com

# கந்தலானது அமெரிக்க மாயை!

## அதிகாரவர்க்க ஊழலும், பொருளாதார மோசடிகளும் புரையோடிப் போயிருக்கும் நாடுதான் அமெரிக்கா.

அமெரிக்காவில் நேற்று வரை மிகவும் புகழ்பெற்ற நிதி நிறுவனமாக இருந்து வந்த பெர்னார்ட் எல். மடோஃப் இன்வெஸ்மென்ட் செக்யூரிட்டீஸ் என்ற 'பிளேடு கம்பெனி' இன்று குப்புறக் கவிழ்ந்துவிட்டது. நேற்று வரை அமெரிக்காவின் மிகச் சிறந்த நிதி முதலீட்டு நிபுணராகக் கொண்டாடப்பட்ட அந்நிறுவனத்தின் அதிபர் பெர்னார்ட் மடோஃப், இன்று பண மோசடி, நம்பிக்கை துரோகம் உள்ளிட்ட பல்வேறு "420" குற்றச்சாட்டுகளுக்காக நீதிமன்றப் படிக்கட்டுகளில் ஏறி இறங்கிக் கொண்டிருக்கிறார். இந்நிறுவனம் ஏறத்தாழ 5,000 கோடி அமெரிக்க டாலர் (இரண்டு முதல் இரண்டரை இலட்சம் கோடி ரூபாய்) அளவிற்கு முதலீட்டாளர்களின் பணத்தை ஏப்பம் விட்டிருப்பதாகக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

பங்குச் சந்தை சூதாடி மடோஃபின் நிறுவனம் இத்துணை பெரிய மோசடியில் ஈடுபட்டிருப்பதை அமெரிக்க அரசின் எந்தவொரு புலனாய்வு அமைப்பும் ஆராய்ந்து கண்டுபிடித்து விடவில்லை. மாறாக, நமது நாட்டின் சத்யம் நிறுவன அதிபர் போல, பெர்னார்ட் மடோஃபே தனது நிறுவனம் செய்துள்ள பண மோசடிகளை ஒத்துக் கொண்டுவிட்டார். இத்துணைக்கும் மடோஃப் 'முதலீடு' என்ற பெயரில் நடத்தி வந்த மோசடிகள், கண்டுபிடிக்க முடியாத அளவிற்குச் சிக்கலானதும் அல்ல.

"எங்கள் நிறுவனத்தில் முதலீடு செய்தால் மற்ற நிறுவனங்களைவிட அதிக வட்டி தருவோம்" என்பதுதான் பெர்னார்ட் மடோஃபின் வர்த்தக தாரக மந்திரம். இந்த அதிக வட்டிக்கு ஆசைப்பட்டுச் சாதாரண முதலீட்டாளர்கள் மட்டுமின்றி, பங்குச் சந்தை நிறுவனங்கள் தொடங்கி சேமிப்பு வங்கிகள், முதலீட்டு வங்கிகள், ஓய்வூதிய நிதி நிறுவனங்கள் எனப் பல தரப்பினரும் மடோஃபின் நிறுவனத்தில் முதலீடு செய்து வந்தனர். இந்த முதலீட்டாளர்கள் மட்டுமின்றி, அமெரிக்காவின் பங்குச் சந்தை கண்காணிப்பு வாரியம்கூட, "இந்த அளவிற்குக் கூடுதலான வட்டியை மடோஃப் நிறுவனம் எப்படித் தர முடியும்?" என்ற கேள்வியை மறந்தும் எழுப்பவில்லை.

இந்த மோசடியின் சுவாரசியமான அம்சம் என்னவென்றால், மடோஃப் தனது முதலீட்டாளர்களுக்கு 2008 டிசம்பருக்கு முன்பு வரை சொல்லியபடி வட்டியை ஒழுங்காகக் கொடுத்து வந்தார். அசலைக்கூடத் திருப்பிச் செலுத்தி வந்தார். இதனால் அமெரிக்க முதலீட்டாளர்கள் மத்தியில் மடோஃப் நிறுவனத்தில் முதலீடு செய்யும் ஆர்வம் அதிகம் இருந்து வந்தது. மடோஃப், தனது நிறுவனத்தை இப்படி 'ஒழுங்காக' நடத்துவதற்குக் கையாண்ட நடவடிக்கையும் மிகவும் எளிதானது.

இந்நிறுவனத்தின் பழைய முதலீட்டாளர்களுக்குத் தரப்பட வேண்டிய வட்டியோ அசலோ நிறுவனத்தின் 'இலாபத்திலிருந்து' தரப்படாமல், புதிதாக முதலீடு செய்பவர்களின் பணத்திலிருந்து தரப்பட்டது. அப்புதிய முதலீட்டாளர்களுக்குத் தர வேண்டிய தவணைப் பணம் அவர்களையடுத்து முதலீடு செய்பவர்களின் பணத்தில் இருந்து தரப்பட்டது. இந்தச் சங்கிலித் தொடர் அறுந்து போகாமல் இருப்பதற்கு மடோஃபுக்குப் புதிதுபுதிதாக முதலீட்டாளர்கள் தேவைப்பட்டனர். சேமிப்பு வங்கிகளும், முதலீட்டு வங்கிகளும் இந்த ஆள் பிடிக்கும் வேலையைச் செய்து கொடுத்து கமிசன் வாங்கிக் கொண்டன.

சான்டாந்தர், பேங்க் மெடிசி, ஹெச்.எஸ்.பி.சி. உள்ளிட்ட பல வங்கிகள், ஃபேர் ஃபீல்டு கிரீன்விச், ட்ரேமோண்ட் நிதி மேலாண்மை உள்ளிட்ட பல முதலீட்டு வங்கிகள் மடோஃபின் தரகர்களாகச் செயல்பட்டுள்ளன. இவ்வங்கிகள் ஆள் பிடிக்கும் வேலையைச் செய்து கொடுத்ததோடு, மடோஃபின் நிறுவனம் கவிழ்ந்து விடாமல் காப்பாற்றுவதற்காகத் தேவைப்படும் நேரத்திலெல்லாம் வங்கிச் சேமிப்புகளையும், தொழிலாளர்களின் ஓய்வூதிய நிதியையும் மடோஃபின் நிறுவனத்தில் கொட்டி, இச்சூதாட்டத்தைத் தொடர்ந்து நடத்தி வந்தன.

**ஆசை காட்டி மோசடி செய்த பங்குச் சந்தை சூதாடி பெர்னார்ட் மடோஃப்.**



"சப் பிரைம்" கடன் பிரச்சினையால் அமெரிக்கப் பொருளாதாரம் திவாலானதையடுத்து, இவ்வங்கிகள் முட்டுக் கொடுத்து வந்த சங்கிலித் தொடர் அறுந்து போனது. புதிய ஏமாளிகள் கிடைக்காமல் போனதால், பழைய ஏமாளிகளுக்கு 700 கோடி அமெரிக்க டாலரை (ஏறத்தாழ 28,000 கோடி ரூபாய்க்கு மேல்) திருப்பிக் கொடுக்க முடியாமல் மடோஃப் மாட்டிக் கொண்டார். இதனையடுத்து வங்கிகளின் துணையோடு அவர் நடத்தி வந்த மோசடிகளை அவரே ஒப்புக் கொள்ள வேண்டியதாகிவிட்டது. 5,000 கோடி அமெரிக்க டாலர் அளவிற்கு நடந்துள்ள இம்மோசடியில், 2,200 கோடி அமெரிக்க டாலருக்கான கணக்கு வழக்குகளைக் கண்டுபிடிக்க முடியவில்லை என்று கூறப்படுகிறது.

மடோஃப் இம்மோசடியைப் பல ஆண்டுகளாக எந்தவிதமான சந்தேகங்களுக்கும் இடம்தராமல் நடத்தி வந்ததற்கு வங்கிகளைப் போலவே, அமெரிக்கத் தணிக்கை நிறுவனங்களும் உடந்தையாக இருந்துள்ளன. பல இலட்சம் கோடி ரூபாய் வரவு-செலவு நடத்தி வந்த மடோஃப் நிறுவனத்தைத்


படிப்பகம்

www.padippakam.com

தணிக்கை செய்த ஃப்ரீஹ்லிங்க் அண்ட் ஹோரோவிட்ஸ் என்ற தணிக்கை நிறுவனத்தில் வெறும் மூன்றே பேர்தான் ஊழியர்களாக இருந்துள்ளனர். மேலும், இந்தத் தணிக்கை நிறுவனம் வேறு எந்தவொரு நிறுவனத்தையும் தணிக்கை செய்ததாகத் தெரியாததால், கடந்த பதினைந்து ஆண்டுகளில் இத்தணிக்கை நிறுவனத்தின் செயல்பாடுகள் மர்மமாகவே இருந்துள்ளன. இம்மோசடி அம்பலமான பிறகுதான், மடோஃப் நிதி முதலீட்டு நிறுவனத்தை மேற்கண்ட தணிக்கை நிறுவனம்தான் 'தணிக்கை' செய்துவந்த தகவலே வெளியுலகுக்குத் தெரிய வந்தது.



சொனட்டர் பதவியை விற்க முயன்ற வழக்கில் கைது செய்யப்பட்டுள்ள இலினாய்ஸ் மாநில ஆளுநர் ராட் ப்ளாகோஜேவிச்.

சத்யம் மோசடி வழக்கில் மாட்டிக் கொண்டுள்ள தணிக்கை நிறுவனமான பிரைஸ்வாட்டர் ஹவுஸ் கூப்பர்ஸ், எர்ன்ஸ்ட் அண்ட் யங் மற்றும் கே.பி.எம்.ஜி. ஆகிய அமெரிக்கத் தணிக்கை நிறுவனங்களுக்கு, அமெரிக்க வங்கிகள் தங்களின் சேமிப்பிலிருந்து மடோஃப் நிறுவனத்திற்கு நிதியுதவி அளிப்பது தெரிந்திருந்தும்கூட, அத்தணிக்கை நிறுவனங்கள் இக்கூட்டு களவாணித்தனம் பற்றி வாய்மூடிக் கிடந்ததாகக் கூறப்படுகிறது.

பல ஓய்வூதிய நிறுவனங்கள் மடோஃப் நடத்தி வந்த இச்சூதாட்டத்தில் பணத்தைப் போட்டு 'ஏமாந்து'விட்டதால், பல்லாயிரக்கணக்கான அமெரிக்கத் தொழிலாளர்கள் தங்களின் வாழ்நாள் சேமிப்பையெல்லாம் இழந்து போண்டியாகிவிட்டார்கள். இக்குற்றத்திற்காக மடோஃபிற்குத் தூக்கு தண்டனைகூட விதிக்கலாம். ஆனால், மடோஃபோ சிறைக்குப் போன சில நாட்களிலேயே பிணை வாங்கிக் கொண்டு வெளியில் வந்துவிட்டான். இம்மோசடிக்குத் துணைநின்ற வங்கி அதிகாரிகள், தணிக்கை அதிகாரிகளுள் ஒருவர்கூடக் கைது செய்யப்படவில்லை. 2005 மற்றும் 2007-ஆம் ஆண்டுகளில் இம்மோசடிகள் பற்றி அமெரிக்கப் பங்குச் சந்தை வாரியம் விசாரணை நடத்திய போதும் உருப்படியாக எதனையும் கண்டுபிடிக்காமல் விட்டுவிட்டது. இந்த மேம்போக்குத்தனத்திற்காக எந்தவொரு அதிகாரியும் விசாரிக்கப்படவில்லை. அந்தளவிற்கு அமெரிக்க நீதி, பங்குச் சந்தை சூதாடிகளுக்குச் சாதகமாக அமைந்திருக்கிறது.

அமெரிக்க வங்கிகளும் காப்பீட்டு நிறுவனங்களும் அடுத்தடுத்து திவாலானபொழுது, அதற்கு வீட்டுக் கடன் வாங்கி கட்டாமல் விட்ட அமெரிக்க உழைக்கும் மக்களின் மீது பழியைப் போட்டுத் தப்பிக்க முனைந்தது, அமெரிக்க ஆளுங்கும்பல். ஆனால், மடோஃப் என்ற ஒரேயொரு சூதாடி நடத்திய இம்மோசடியைப் பூசிமெழுகி, அமெரிக்க ஆளுங்கும்பலால் யாரையும் பலிகிடா ஆக்க முடியவில்லை. அதனால் நிலைமையைச் சமாளிக்கும் வண்ணம் பல பொருளாதார நிபுணர்களும் நிதித்துறையைக் கண்காணிக்கக் கடுமையான கட்டுப்பாடுகள் இருந்திருந்தால், இம்மோசடி நடந்திருக்காது என முதலைக் கண்ணீர் வடித்து வருகின்றனர்.

பிளேடு கம்பெனிகளால் ஏமாற்றப்பட்ட தமிழக நடுத்தர வர்க்க முதலீட்டாளர்கள் இந்த ஆலோசனையைக் கேள்விப்பட்டால் வாயால் சிரிக்க மாட்டார்கள். ஏனென்றால், இந்திய நிதிச் சந்தையைக் கண்காணிக்க 'கடுமையான' சட்டங்கள் இருந்த பொழுதுதான், பல்வேறு பைனான்ஸ் கம்பெனிகள் பல ஆயிரம் கோடி ரூபாயை ஏப்பம் விட்டன என்பதுதான் வரலாறு. நிதி மோசடியும் முதலாளித்துவமும் ஒட்டிப் பிறந்த இரட்டையர்கள் எனும்பொழுது, அவர்களைச் சட்டம் போட்டுப் பிரித்துவிட முடியாது.

இப்பொருளாதார மோசடி அம்பலமான அதே சமயம், மற்றொரு ஊழல் வெடித்து வெளியே வந்து அமெரிக்க அரசியலை நாறடித்தது. இலினாய்ஸ் மாநில செனட்டராக இருந்த பாரக் ஒபாமா அமெரிக்க அதிபராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதால், அந்த செனட்டர் பதவி காலியானது. நம் நாட்டைப் போன்று அமெரிக்காவில் இடைத் தேர்தல் போன்ற சமாச்சாரங்கள் கிடையாது. இலினாய்ஸ் ஆளுநரே, தனக்குப் பிடித்த நபரை அந்தப் பதவியில் அமர்த்திக் கொள்ளலாம். இலினாய்ஸ் மாநில ஆளுநராக இருந்த ராட் ப்ளாகோஜேவிச் இந்த அதிகாரத்தைப் பயன்படுத்திக் கொண்டு, அந்தப் பதவியை இரகசியமாக ஏலம் விட்டுத் தனக்குத் தேர்தல் நன்கொடை திரட்டிக் கொள்ள முடிவு செய்தார்.

பாரக் ஒபாமா அமெரிக்க அதிபராகத் தேர்வு செய்யப்பட்டு விடுவார் என உறுதியாகத் தெரிந்துவிட்டதால், செனட்டர் பதவியை ஏலம் விடுவதற்கான இரகசிய பேரங்கள் அதிபர் தேர்தலுக்கு முன்பே தொடங்கி விட்டன. இதற்காக இரகசிய விருந்துகளும் நடத்தப்பட்டன. இதன் அடிப்படையில் ஜெஸ்ஸி ஜாக்ஸன் ஜூனியர் என்பவரிடம் 15 இலட்சம் அமெரிக்க டாலர்கள் 'நன்கொடையாக' வாங்கிக் கொண்டு, அவரை செனட்டராக்கிவிட முடிவு செய்யப்பட்டது. ராட் ப்ளாகோஜேவிச்சுக்குச் சாதகமாக இப்பேரத்தை நடத்தி முடிப்பதில் அமெரிக்க வாழ் இந்திய முதலாளிகள் மும்முரமாக ஈடுபட்டனர். எனினும், பணம் கைமாறும் முன்பே இந்த இரகசிய பேரங்கள் அம்பலமாகி விட்டதால், ராட் ப்ளாகோஜேவிச்சும் அவரது இந்திய நண்பர்களும் இப்பொழுது கம்பி எண்ணிக் கொண்டுள்ளனர். பாரக் ஒபாமாவின் ஆதரவாளர்களுக்கும் இந்த ஊழலில் தொடர்பிருக்கலாம் என்ற சந்தேகம் எழுப்பப்பட்டு, அது எவ்வித விசாரணையுமின்றி அமுங்கிப் போனது.

இந்தியாவும் அமெரிக்கா போல மாற வேண்டும் என துக்ளக் ''சோ'' உள்ளிட்டோர் வாதாடி வருகின்றனர். அவர்களின் நல்லெண்ணம் நடைமுறைக்கு வந்தால், தற்பொழுது இந்தியாவில் ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் அளவில் நடைபெறும் ஊழலும் மோசடிகளும் அதிகார முறைகேடுகளும் இலட்சம் கோடி ரூபாயைத் தொடக்கூடும். ஒருவேளை அவர்கள் சொல்லும் 'வளர்ச்சி' என்பது இதுதானோ!

• ரஹீம்

www.padippakam.com

## வறுமையின் கோரம்:

# பெற்ற மகளை விற்ற அன்னை

**நாட்டையே விற்கும் ஆட்சியாளர்கள், வறுமை காரணமாக குழந்தையை விற்கும் பெற்றோரைக் குற்றவாளியாக்குகின்றனர்.**

இந்திய அரசு பின்பற்றி வரும் மறுகாலனியாதிக்கப் பொருளாதாரக் கொள்கையால் விவசாயம் திட்டமிட்டே அழிக்கப்பட்டு வருவதால், விவசாயிகள் பிழைக்க வழிதேடி நகரங்களை நோக்கி ஓடி வருகின்றனர். நகரங்களில் வானளாவிய கட்டிடங் களின் உச்சியில் உயிரைப் பணயம் வைத்துக் கட்டுமான வேலைகள் செய்தும், கொதிக்கும் வெயிலில் சாலைகள் அமைத்துக் கொண்டும் அவர்கள் தங்களது வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருக்கின்றனர்.

நகரத்தில் வேலை வாய்ப்பு கிடைக்கும் வரை சிறிதுகாலம் அங்கிருப்பது, பின்பு கிராமத்திற்குத் திரும்பிவிடுவது, கிராமத்தில் வேலையில்லாமல் பட்டினி கிடக்கும் போது, மீண்டும் நகரத்தை நோக்கி ஓடிவருவது என உதைபடும் பந்துகளைப் போல மாறிப் போயிருக்கும் விவசாயக் குடும்பங்களில் ஒன்றைப் பற்றியதுதான் இந்தக் கதை.

ஒரிசா மாநிலம், போலங்கிர் மாவட்டத்தின் குண்டபுட்லா கிராமத்தைச் சேர்ந்தவர் சியாம்லால் தாண்டி; இவரது மனைவி லலிதா தாண்டி. தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த இந்தத் தம்பதியினருக்கு, மூன்று குழந்தைகள் இருந்தனர். பாசன வசதி இல்லாத அரை ஏக்கர் நிலத்தை வைத்துக் கொண்டு, இவர்கள் வாழ்க்கையை நடத்தி வந்தனர். மழையை நம்பி விவசாயம் செய்து வந்த இவர்களுக்கு வருடத்தில் இரண்டு மாதங்கள் மட்டுமே வேலை கிடைத்தது. அவ்விருமாதங்களில் மட்டும் இரண்டு வேளையாவது உணவு கிடைத்து வந்தது. மற்ற நாட்களில் அதுவும் கிடைக்க வழியில்லை. ஒரு கட்டத்தில், இனி விவசாயம் செய்தால் பிழைக்க முடியாது என்றுணர்ந்த இவர்கள், அருகிலிருந்த இரும்பு எஃகுத் தொழிலுக்குப் பெயர்போன நகரமான பிலாய் நகருக்குக் குடிபெயர்ந்து கூலி வேலைக்குச் செல்லத் தொடங்கினர்.

பிளாஸ்டிக் கூரையால் மூடப்பட்ட ஒரு வீட்டில் கணவன் - மனைவி இருவரும் தங்கிக் கொண்டு, அந்நகரில் நடைபெறும் கட்டிட வேலைகளில் செங்கல் சுமப்பவர்களாகப் பிழைப்பு நடத்தி வந்தனர். அங்கே கிடைத்த கூலி அற்பமானதாக இருந்தபோதிலும், அவர்களால் குழந்தைகளுக்கு வயிறார உணவளிக்க முடிந்தது. கொஞ்சம் பணத்தைக் கூட சேமித்து வைத்தனர். இதுவும் சிலகாலம் மட்டுமே நீடித்தது. அவர்களது நான்கு வயது மகன் ஹரேந்திராவுக்கு திடீரென உடல்நலம் பாதிக்கப்பட்டது. பிலாய் இரும்பு ஆலையில் உள்ள மருத்துவமனையில் இடம் பெயர்ந்த தொழிலாளர்களுக்கு அனுமதி கிடையாதென்பதால், மகனுக்கு மருத்துவம் பார்க்க வழியின்றி அவர்கள் தவித்தனர். தனியார் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லவும் அவர்களிடம் பணம் இல்லை. தங்களது கிராமத்திற்குத் திரும்புவதைத் தவிர அவர்களுக்கு வேறுவழியில்லை.

கிராமத்திற்கு அருகிலிருந்த திட்லாகர் அரசு மருத்துவமனையில் ஹரேந்திராவைச் சோதித்த மருத்து வர்கள், அவனுக்கு அறுவை சிகிச்சை செய்ய இலஞ்சம் கேட்டனர். ஏழைகளான தாண்டி தம்பதிகளால் அவர்கள் கேட்ட பெருந்தொகையைத் தர முடியவில்லை. எனவே, அவர்கள் துக்லா கிராமத்து ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஐந்தாயிரம் ரூபாயை இலஞ்சமாகக் கொடுத்துத் தங்களது மகனைச் சேர்த்தனர். சிகிச்சைக்குப் பிறகு அந்தச் சிறுவனுக்குக் கேட்கும் திறன் முற்றிலும் பறிபோனது.

மகனைப் பார்த்துக் கொள்ள மனைவியைக் கிராமத்தில் விட்டுவிட்டு சியாம்லால் மட்டும் நகரத்திற்கு வேலைக்குச் சென்றார். ஆனால், இம்முறை நிமோனியாவால் அவர் பாதிக்கப்பட்டார். போதிய உணவு இல்லாததாலும், கடுமையான உழைப்பின் காரணமாகவும் அவரது உடல்நிலை மேலும் மேலும் மோசமடைந்து வந்தது. அவரது வாய் மற்றும் கண் இமைகளில் புண்கள் ஏற்பட்டன. அவரால் தனது கண்ணை மூடக்கூட இயலவில்லை. கடுமையான காய்ச்சலால் அவதிப்பட்டார். அவரது எடை மிகவும் குறைந்து போனது.



வறுமைக்கு தனது மகளைப் பலி கொடுத்துவிட்ட சியாம்லால் மற்றும் அவரது மனைவி லலிதா தாண்டி.

இதனால், எங்கே தனது கணவனை இழந்து விடுவோமோ எனப் பயந்த லலிதா, இம்முறை திட்லாகர் அரசு மருத்துவமனை மருத்துவர்களுக்கு லஞ்சம் கொடுத்து சியாம்லாலுக்குச் சிகிச்சை பெற முடிவு செய்தார். சியாம்லாலுக்கு தினந்தோறும் ஊசிகள் போட வேண்டியிருந்தது. மருத்துவர்கள் ஒரு ஊசிக்கு நூறு ரூபாய்




படிப்பகம்

www.padippakam.com

வேண்டும் எனக் கேட்டனர், அவர்களிடம் மன்றாடிய லலிதா அவர்களை அறுபது ரூபாய்க்குச் சம்மதிக்க வைத்தார்.

சியாம்லால் உடல் தேறி வந்த போது, அவர்கள் கட்டிட வேலையில் கடுமையாக உழைத்துச் சேர்த்த பணம் முழுவதும் கரைந்ததுடன், 12,000 ரூபாய் கடனும் சேர்ந்திருந்தது. மாவட்ட வளர்ச்சி அலுவலகத்தில், அரசாங்க வேலையில் இருந்த ராம்பிரசாத் மங்கராஜ் என்ற லலிதாவின் உறவினர்தான் இவர்களுக்குப் பணம் கொடுத்து உதவினார்.

மருத்துவமனையிலிருந்து திரும்பிய சியாம்லாலால் முன்னைப் போலக் கடுமையான வேலைகள் செய்ய முடியவில்லை. எனவே, கிராமத்திலேயே கூலி வேலைக்குச் செல்ல அவர்கள் முடிவெடுத்தனர். கிராமத்தில் அவர்களுக்கு மரம் வெட்டுதல், மாடு மேய்த்தல் போன்ற வேலைகள்தான் கிடைத்தன. அவையும் தொடர்ச்சியான வேலை களாக இல்லாமல், வருடத்திற்கு ஏழு அல்லது எட்டு மாதங்களுக்கு மட்டுமே கிடைத்தது. சில சமயங்களில் நான்கு மாதங்கள் வரை கூடத் தொடர்ச்சியாக வேலை எதுவும் கிடைக்காமல் இருந்தது. நகரத்தில் கிடைத்ததில் பாதி மட்டுமே கூலியாகக் கிடைத்தது. கிடைத்த கூலியை வைத்து வயிறாரச் சாப்பிட்டாலே அது பெரிய விஷயம்தான். வயிறு நிறைய சாப்பிடுவதைக் கடவுள் கொடுத்த வரமாக இவர்கள் கருதினார்கள். கூலி கிடைக்காத நாட்களில் அவர்களின் குடும்பத்திலிருந்தவர்கள் அனைவருக்குமான உணவு — பழைய சோறும், தண்ணீரில் ஊறவைத்த கஞ்சியும் தான்.



சியாம்லாலின் சோகக் கதையை மீண்டும் நினைவூட்டிய முன்னாள் ஐ.ஏ.எஸ். அதிகாரியும் சமூக சேவகருமான ஹர்ஷ் மந்தர்.

சாப்பிடப் போதிய அளவு உணவில் லாமல் தவித்த அவர்களுக்கு ராம்பிரசாத் தின் கடனை அடைப்பதென்பது இயலாத காரியமாக இருந்தது. இந்தச் சூழ் நிலையில்தான் அவர்களின் மூன்று வயதுப் பெண் குழந்தை ஹேமாவைத் தனக்குத் தத்துக் கொடுத்தால் அவர்கள் வாங்கிய கடனை ரத்து செய்வதாக ராம்பிரசாத் கூறினார்.

சியாம்லாலின் உடல் நிலை சீரடையாமலேயே இருந்த காரணத்தால் லலிதாதான் இது குறித்து முடிவெடுக்க வேண்டியிருந்தது. தனது மகளைத் தத்துக் கொடுக்க முடிவெடுத்த லலிதா, தன் மகள் மீது கொண்டிருந்த எல்லையற்ற பாசத்தாலும், கடன் சுமையிலிருந்து மீளவும் அப்படியொரு முடிவை எடுத்ததாகக் கூறினார். பெண் குழந்தை இல்லாத ராம்பிரசாத், ஹேமாவைத் தனது மகளாக நினைத்து வளர்ப்பார் என அவர் கருதினார். குழந்தையைத் தத்தெடுத்தது, பத்திரத்திலும் பதிவு செய்யப்பட்டது.

**சியாம்லாலும், லலிதாவும் இன்னமும் அதே குடிசையில் தினமும் ஒருவேளைக் கஞ்சியைக் குடித்துவிட்டு, நோஞ்சானாகக் கிடக்கும் மற்ற குழந்தைகளை எப்படிக் காப்பாற்றுவது எனத் தெரியாமல் போராடிக் கொண்டிருக்கின்றனர்.**

கடந்த 2001-ஆம் ஆண்டில் கடனை அடைப்பதற்காக குழந்தையை தத்து கொடுத்த செயல் நகரத்தை எட்டியவுடன், அது பரபரப்பான செய்தியானது. விரைவிலேயே மாநிலம் முழுவதும், ஏன் நாடு முழுவதும் இது பரவியது.

இதனால் நிர்ப்பந்தத்துக்குள்ளான அரசு, சபாநாயகர் தலைமையில் ஒரு குழுவை அமைத்து விசாரணைக்கு உத்தரவிட்டது. அந்தக் குழுவும் சியாம்லாலின் கிராமத்திற்கு வந்து அத்தம்பதியினரைக் கடுமையாகச் சாடிவிட்டு, குழந்தையை வாங்கியவரைச் சிறையிலடைத்து, குழந்தையைப் பெற்றோரிடம் ஒப்படைத்தது. அதற்குப் பிறகு எல்லோரும் இவ்விஷயத்தை மறந்து விட்டனர். அப்பெற்றோர் குழந்தையை விற்கக் காரணம் என்ன என்பது பற்றியெல்லாம் யாரும் கவலைப்படவில்லை. நாட்டிற்கு ஏற்படவிருந்த பெரும் பழியைத் துடைத்துவிட்ட மகிழ்ச்சியில் எல்லா பத்திரிக்கைகளும் அடுத்த செய்தியை பரபரப்பாகச் சொல்ல ஆரம்பித்தன.

வருடங்கள் உருண்டோடிவிட்டன, பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்ட குழந்தை எப்படியிருக்கிறது எனப் பார்க்க விரும்பிய ஹர்ஷ் மந்தர் எனும் பத்திரிகையாளர், அண்மையில் அந்த கிராமத்திற்குச் சென்று பார்த்தபோது, குழந்தை ஹேமா அங்கே உயிரோடு இல்லை.

பெற்றோரிடம் ஒப்படைக்கப்பட்டு ஒரு வருடம் கழித்து, அந்தக் குழந்தை மஞ்சள் காமாலை நோய்த் தாக்கி இறந்து விட்டது. சரியான உணவு இல்லாததால், நோஞ்சானாக இருந்த குழந்தையால் மஞ்சள் காமாலை நோயை எதிர்த்துப் போராட முடியவில்லை. ''அந்தக் குழந்தை ராம் பிரசாத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தால், இன்று அவள் உயிரோடு இருந்திருப்பாள். ராம்பிரசாத்திடம் வசதியிருப்பதால், அவர் குழந்தையைக் காப்பாற்றி வளர்த்திருப்பார். ஆனால், எங்களிடம் எந்த வசதியும் இல்லாததால், எங்கள் அன்பு மகளைப் பறிகொடுத்துவிட்டோம்'' என்று வேதனையில் விம்முகிறார், லலிதா. சியாம்லாலும், லலிதாவும் இன்னமும் அதே குடிசையில், தினமும் ஒருவேளைக் கஞ்சியைக் குடித்துவிட்டு, நோஞ்சானாகக் கிடக்கும் மற்ற குழந்தைகளை எப்படிக் காப்பாற்றுவது எனத் தெரியாமல் போராடிக் கொண்டிருக்கின்றனர்.

**''தி ஹிந்து'' நாளேட்டில் (நவ.30, 2008, ஞாயிறு பதிப்பு) ஹர்ஷ் மந்தர் எழுதியுள்ள கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு தொகுக்கப்பட்டுள்ளது.**


படிப்பகம்

www.padippakam.com

# உறைபனி உணர்த்தும் உண்மைகள்

## பணக்கார இந்தியர்கள் காசுமீரில் பனிச் சறுக்கு விளையாடும்பொழுது, ஏழை இந்தியர்கள் குளிரில் விறைத்துச் சாகிறார்கள்.

உறை பனியை நெருங்கிவிட்ட நடுநடுங்க வைக்கும் கடுங்குளிர்; நூறு அடிக்கு முன்னே இருப்பது கூடத் தெரியாத அளவுக்கு எங்கும் பனி மூட்டம்; வாகனங்கள், ரயில்கள், விமானங்களின் போக்குவரத்து பெரிதும் பாதிக்கப்பட்டன; குடிநீர்க் குழாய்களில் தண்ணீர் உறைந்து சில்லிட்டன என்று கடுங்குளிரின் தாக்கத்தை கொட்டை எழுத்துக்களில் நாளேடுகள் படம் பிடித்துக் காட்டின. வாட்டியெடுக்கும் கடுங்குளிரில் கிழிந்த சாக்குகளையே போர்வையாக்கிக் கொண்டு, கையது கொண்டு மெய்யது பொத்தி நடுங்கிக் கொண்டிருந்த வீடற்ற-நடைபாதைவாசிகளான உழைக்கும் மக்கள் குளிரில் விறைத்து அடுத்தடுத்து மாண்டு கொண்டிருந்தனர். பீகாரில் 60 பேர்; உ.பி.யில் 50 பேர்; டெல்லியில் 20 பேர்; பஞ்சாப், அரியானா, ராஜஸ்தானில் 20 பேர் என குளிருக்குப் பலியான மக்களைப் பற்றிய செய்தியை இதே நாளேடுகள் துணுக்குச் செய்தியாக வெளியிட்டு அலட்சியப்படுத்தின.

"கடந்த 2006-ஆம் ஆண்டில் நடந்ததைப் போல இவ்வாண்டும் வழக்கதைவிட அதிகமாக கடுங்குளிர் வாட்டியெடுக்கிறது. கிழிந்த சாக்குகளைப் போர்த்திக் கொண்டு குப்பைகளைக் கொளுத்திக் குளிர் காய்ந்தாலும், உறைபனியை நெருங்கிவிட்ட குளிரைத் தாக்குப் பிடிக்க முடியவில்லை. பசியாலும் குளிராலும் தூக்கமின்மையாலும் நாங்கள் அவதிப்படுகிறோம். அரசு எங்களுக்கு எந்த உதவியும் செய்யவில்லை" என்று தனது உறவினரைப் பறிகொடுத்த துயரத்தில் விம்முகிறார், துக்காராம்.

விவசாயம் பொய்த்துப் போனதால் இவர் உ.பி. மாநிலத்திலிருந்து டெல்லிக்குப் பிழைக்க வந்த ரிக்ஷா ஓட்டும் தொழிலாளி. அவரைப் போலவே பாரவண்டி இழுப்பவர்கள், மூட்டை தூக்குபவர்கள் எனப் பல்லாயிரக்கணக்கான தொழிலாளர்கள் தங்கள் குடும்பத்தோடு நடைபாதையோரங்களில் குளிரில் நடுங்கிக் கொண்டு தத்தளிக்கிறார்கள். பத்தாண்டுகளுக்கும் மேலாக இவர்கள் குடியிருந்த புறநகர் சேரிப் பகுதி இடிக்கப்பட்டதால், இவர்கள் குடியிருக்க வீடு ஏதுமின்றித் தவிக்கிறார்கள். நகரின் மையத்திலுள்ள சேரிப்பகுதிகள் மட்டுமின்றி, 2010-இல் நடைபெறவுள்ள காமன்வெல்த் நாடுகளின் விளையாட்டுப் போட்டிக்காக புறநகர் சேரிப்பகுதிகளும் இடித்துத் தள்ளப்படுவதால், டெல்லியில் மட்டும் ஏறத்தாழ ஒரு லட்சம் பேர் வீடற்ற நடைபாதைவாசிகளாகப் பரிதவிக்கின்றனர்.

இதுகூட சேரிப்பகுதிகள் இடிக்கப்பட்டதால் வீடிழந்தோரின் கணக்குதான். இதுதவிர, உ.பி., பீகார், பஞ்சாப், ராஜஸ்தான் மாநிலங்களிலிருந்து பிழைப்புக்காக டெல்லிக்கு ஓடிவந்து நடைபாதைகளில் வசிக்கும் கூலி-ஏழைகளையும் சேர்த்துக் கணக்கிட்டால், டெல்லி நடைபாதைவாசிகளின் எண்ணிக்கை ஏறத்தாழ 4,5 லட்சம் பேர்களாக இருக்கும் என்கிறது, "ஆக்ஷன் எய்ட்" என்கிற தன்னார்வ நிறுவனம்.

"நடைபாதைகளில் கடுங்குளிரில் தத்தளிக்கும் இம்மக்களுக்கு அரசு எவ்வித நிவாரண உதவியும் செய்வதில்லை. கிழிந்த சாக்குகள், பாலிதீன் விரிப்புகளைக் கொண்டும் குப்பைகளை எரித்துக் குளிர் காய்ந்து கொண்டும் பரிதவிக்கும் இம்மக்கள், கடுங்குளிரைத் தாக்கப் பிடிக்க முடியாமல் அடுத்தடுத்து மாண்டு வருகிறார்கள். பசியாலும் தூக்கமின்மையாலும் அவர்களது மரணம் விரைவுபடுத்தப்படுகிறது" என்று பல்வேறு தன்னார்வ - மனித உரிமை அமைப்புகள் குற்றம் சாட்டுகின்றன.

ஆனால், டெல்லி மாநில அரசோ இது அப்பட்டமான பொய் என்று எதிர்வாதம் செய்கிறது. தற்போதைய கடுங்குளிரிலிருந்து ஏழைகளைப் பாதுகாக்க நிவாரண முகாம்களை அமைத்துள்ளதாகவும், ஏற்கெனவே நிரந்தரமாக 12 சத்திரங்களைக் கட்டியமைத்துள்ளதாகவும் அது கணக்கு காட்டுகிறது. இவற்றை நடைபாதைகளில் வசிக்கும் மக்கள் பயன்படுத்திக் கொள்ளாதது அவர்களது தவறாகும் என்று ஏழைகளின் மீது குற்றம் சாட்டுகிறது.

டெல்லி மாநகராட்சி நடைபாதைகளில் வசிக்கும் ஏழைகளுக்காக ஏற்கெனவே 12 சத்திரங்களைக் கட்டியிருக்கிறது

தலைநகர் டெல்லியின் மறுபக்கம்: வாட்டும் கடுங்குளிரில் நடைபாதையில் பரிதவிக்கும் பலூன் வியாபாரியின் குடும்பம்.





படிப்பகம்

www.padippakam.com

என்பது உண்மைதான். இவற்றில் ஒரு சத்திரம், பிரத்யேகமாக பெண்களுக்காகவே உருவாக்கப்பட்டுள்ளது என்பதும் உண்மைதான். ஆனால், இத்தகைய சத்திரங்களில் ஏறத்தாழ 2500 பேர் வரை மட்டுமே தங்க முடியும். டெல்லி நடைபாதைகளில் ஏறத்தாழ ஒரு லட்சத்துக்கும் மேலானோர் வசிக்கும் நிலையில், இத்தகைய சத்திரங்களால் ஏழைகள் முழுமையாகப் பயனடையவே முடியாது.

மேலும், இத்தகைய சத்திரங்களில் கட்டணம் செலுத்தினால் மட்டுமே தங்க முடியும். கட்டணக் கழிப்பறை போலத்தான் இத்தகைய சத்திரங்களும் உள்ளன. 12 மணி நேரத்துக்கு ஒரு நபருக்கு ரூ. 10 முதல் ரூ. 15 வரை கட்டணம் என்றிருந்த நிலைமை போய், இப்போது அவை குத்தகைதாரர்களிடம் ஏலத்துக்கு விட்டப்பட்ட பிறகு, ரூ. 25 முதல் ரூ. 50 வரை கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இதுதவிர, போலீசார் இத்தகைய சத்திரங்களில் தங்கும் ஏழைகளைப் பிடித்துச் சென்று பொய் வழக்குச் சோடிப்பதும் தொடர்கிறது. இந்நிலையில், நடைபாதைவாசிகளான ஏழைகளால் இத்தகைய சத்திரங்களில் தங்க முடியுமா?

"பெண்களுக்காகப் பிரத்யேகமாகக் கட்டப்பட்ட சத்திரத்தில் ஏறத்தாழ 200 பேர் வரை மட்டுமே தங்க முடியும். அந்த சத்திரமும் 2007-ஆம் ஆண்டில் மூடப்பட்டு அரசாங்க கிட்டங்கியாக மாற்றப்பட்டு விட்டது" என்கிறார். நடைபாதையில் குடும்பத்தோடு பரிதவிக்கும் ஒரு தாய். இத்தகைய சத்திரங்கள் தரமற்ற வகையில் பெயருக்குக் கட்டப்பட்டுள்ளனவே தவிர, அவை மழை, குளிர் காலங்களில் மக்களுக்குப் பாதுகாப்பானவையோ, தாக்குப் பிடிக்கக் கூடியவையோ அல்ல என்பதை பல்வேறு மனித உரிமை அமைப்புகள் ஆதாரங்களோடு அம்பலப்படுத்தியுள்ளன.



மாறாத அவலம்: சாலையோரத்தில் குளிர் காயும் நடைபாதைவாழ் கூலித் தொழிலாளர்கள்.

போர்வைக் கூட இல்லாமல் கடுங்குளிரில் நடைபாதையில் தத்தளிக்கும் முதியவர்.



அதேசமயம், டெல்லி மாநில அரசும், மாநகராட்சியும் டெல்லி பெருநகர ரயில் திட்டத்துக்காக ரூ.10,751 கோடி; போக்குவரத்து மேம்பாலங்களுக்காக ரூ.1,000 கோடி; காமன்வெல்த் விளையாட்டு போட்டி நடத்துவதற்கான ஏற்பாடுகளுக்காக ரூ. 5,200 கோடி என பல்லாயிரம் கோடிகளை வாரியிறைக்கின்றன. இவற்றில் ஒரு சில கோடிகளைக் கூட நடைபாதைகளில் பரிதவிக்கும் மக்களின் குடியிருப்புக்காக ஒதுக்கப்படவில்லை. நாட்டின் மிகப்பெரிய, பணக்கார டெல்லி மாநகராட்சியிலேயே இந்த நிலைமை என்றால், இதர நகர, பெருநகரங்களைப் பற்றிச் சொல்ல வேண்டியதில்லை.

உ.பி. மாநில அரசோ, குளிரால் விறைத்துச் சாகும் நடைபாதை ஏழை மக்களைப் பாதுகாக்க சாலையோரங்களில் பெருந்தீ மூட்டுமாறு உத்தரவிட்டுள்ளது. இதர வடமாநில அரசுகள் இந்தக் 'கருணை'யைக் காட்டக்கூட முன்வரவில்லை. கடந்த 2006-ம் ஆண்டில் தாக்கிய கடுங்குளிரால் வடஇந்தியாவில் 300-க்கும் மேற்பட்ட நடைபாதை ஏழைகள் மாண்டு போயினர். இவ்வாண்டில், இதுவரை 150-க்கும் மேற்பட்டோர் பலியாகியுள்ளதோடு, தொடர்ந்து தாக்கும் கடுங்குளிரால் 2006-ஆம் ஆண்டை விஞ்சும் அளவுக்கு சாவுகள் பெருகும் என்று பல்வேறு மனித உரிமை அமைப்புகள் எச்சரிக்கின்றன. ஆனால் மைய அரசோ, வடஇந்திய மாநில அரசுகளோ இக்குளிர்காலக் கொலைகளைத் தடுக்க எந்த நடவடிக்கையும் இதுவரை எடுக்கவில்லை. இந்த ஏழைகளின் சாவை வைத்து 'குளிர்காய'க் கூட எந்த ஓட்டுக் கட்சியும் முன்வரவில்லை.

வடமாநிலங்களில் குளிர்தாக்குதல் தீவிரமடைந்து வருகிறது. உழைக்கும் மக்களின் அடிப்படைத் தேவைகளை அறவே புறக்கணித்து வரும் அரசின் அலட்சியத்தால் குளிர்காலக் கொலைகளும் தீவிரமாகின்றன. குளிரால் விறைத்துச் சாகும் ஏழைகளின் துயரச் செய்திகளைவிட, இந்த அநீதியை நாட்டு மக்கள் இன்னமும் சொரணையின்றிச் சகித்துக் கொண்டிருப்பதுதான் மிகவும் துயரமானது.

● குமார்


படிப்பகம்

www.padippakam.com

# யூத இனவெறி பயங்கரவாதப்பேயாட்டம்

## காசா முனை மீது இசுரேல் நடத்திய தாக்குதலைக் கண்டிக்காத நாடுகளுக்குப் பயங்கரவாதம் பற்றி ஓலமிட அருகதையில்லை.

பாலஸ்தீன மக்களின் மீது நடத்தி வரும் ஆக்கிரமிப்புப் போரையும், முற்றுகையையும் கிறிஸ்துமஸுக்குப் பிறகு இசுரேல் மீண்டும் தீவிரப்படுத்தியிருக்கிறது. இசுரேலுக்கும் பாலஸ்தீன விடுதலை இயக்கத்திற்கும் இடையே கையெ ழுத்தான ''ஆஸ்லோ'' சமாதான ஒப்பந்தத்தின்படி பாலஸ் தீனத்தின் ஒரு பகுதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட காசா முனை யைத்தான் இப்பொழுது இசுரேல் குறிவைத்துத் தாக்கி வருகிறது.

காசா முனை மூன்றுபுறம் இசுரேலையும், மற்றொருபுறம் எகிப்தையும், மத்தியத்தரைக் கடலையும் எல்லையாகக் கொண்ட, 270 சதுர கிலோமீட்டரே பரப்புடைய சிறிய நிலப் பரப்பாகும். காசா முனையில் இருந்து ஒரு பொருள் வெளியேற வேண்டும் என்றாலோ அல்லது அத்தியாவசியப் பொருட்கள் காசா முனைக்கு உள்ளே வர வேண்டும் என்றாலோ, அதற்கு இசுரேலின் அனுமதி கிடைக்க வேண்டும். இவ்வளவு ஏன், காசா முனையைச் சேர்ந்த ஒரு பாலஸ்தீனர், பாலஸ்தீன சுயாட்சிப் பிரதேசமான மேற்குக் கரையில் வாழும் மற்றொரு பாலஸ்தீனரையோ, தனது உறவி னரையோ சந்திக்க வேண்டும் என்றால்கூட, இசுரேலின் அனு மதியைப் பெற வேண்டும். அந்தளவிற்கு காசா முனை இசு ரேலின் முற்றுகையின் கீழ் இருந்து வருகிறது. அதனால்தான் காசா முனை உலகின் மிகப் பெரிய திறந்தவெளி சிறைச்சாலை என்றே அழைக்கப்படுகிறது. இசுரேலின் இக்காலனி ஆதிக்கத் திற்கு எதிரான போராட்டத்தின் ஊடாகத்தான் 15 இலட்சம் பாலஸ்தீனர்கள் காசா முனையில் வாழ்ந்து வருகின்றனர்.

போர் என்றால்கூட இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த இடங்களை மட்டும்தான் தாக்க வேண்டும் என்கிறது, சர்வதேசச் சட்டம். ஆனால், வீடுகள், குடியி ருப்புப் பகுதிகள், பள்ளிக் கூடங்கள், பல்கலைக்கழகக் கட்டி டங்கள், மின் நிலையங்கள், குடிநீர் இறைக்கும் நிலையங்கள், கழிவுநீர் சுத்திகரிக்கும் நிலை யங்கள், பாலங்கள், ஐ.நா.வின் மேற்பார்வையில் இயங்கும் அகதி முகாம்கள் என அனைத்து இடங்கள் மீதும் இசுரேலின் முப் படைகளும் இணைந்து ''சரமசர மாகக் குண்டுகளை வீசி, காசா முனையை மக்கள் வசிக்கத் தகாத இடமாக, குப்பை மேடாக மாற்றிவிட்டன.




போரின் முதல்நாள் (டிசம்பர் 27 அன்று) இசுரேலின் விமானப் படை நடத்திய தாக்குதலில் மட்டும் 190 பாலஸ்தீ னர்கள் கொல்லப்பட்டனர். போரின் 20-ஆம் நாளில், கொல்லப்பட்ட பாலஸ்தீனர்களின் எண்ணிக்கை 1,066 ஆக உயர்ந்தது; இதில் 311 குழந்தைகளும், 97 பெண்களும் அடங்குவர்; படுகாயமடைந்து உயிருக்குப் போராடுபவர் களின் எண்ணிக்கை 3,000-ஐத் தாண்டிவிட்டதாகக் கூறப்படு கிறது.

காசா முனையில் 'ஆட்சி' நடத்தி வரும் ஹமாஸ் இயக்கம், ''இசுரேல் இந்தப் போரில் பல புதுவிதமான ஆயு தங்களை, குண்டுகளைப் பரிசோதித்துப் பார்க்கும் களமாக காசா முனையைப் பயன்படுத்தி வருவதாக''க் குற்றஞ்சுமத்தி யுள்ளது.

காசா முனையில் தன்னார்வத் தொண்டராகப் பணி யாற்றும் நார்வே நாட்டைச் சேர்ந்த மேட்ஸ் கில்பர்ட் என்ற மருத்துவர், ''உடம்பில் இருந்து உறுப்புகளைப் பிய்த்து எறியக்கூடிய மிகவும் சக்தி வாய்ந்த உலோகக் குண்டுகளை இந்தப் போரில் இசுரேல் பயன்படுத்தியதற்குத் தக்க ஆதாரங்கள் இருப்பதாக''ச் சாட்சியம் அளித்துள்ளார்.

''தடை செய்யப்பட்டுள்ள வெள்ளை பாஸ்பரஸ் வெடி மருந்தை இசுரேல் இந்தப் போரில் பயன்படுத்தி வருவ தாக'' ஐ.நா. மன்ற அதிகாரிகளும் குற்றஞ்சுமத்தியுள்ளனர்.

அமெரிக்காவில் நியூயார்க் நகரில் இருந்த இரண்டு கட்டி டங்கள் தகர்க்கப்பட்டதையும்; இந்தியாவின் மும்பையில் உள்ள தாஜ் விடுதி தாக்கப்பட்டதையும்; அதனால் பலர் இறந்ததையும் பயங்கரவாதம் என அழைப்பது சரியென்றால், இசுரேலின் இந்த மனிதத்தன்மையற்ற, காட்டுமி ராண்டித்தனமான தாக்குதலை வருணிப்பதற்கு பயங்கரவாதம் என்ற சொல்கூடப் போதாது என்றுதான் சொல்ல வேண்டும்.

குண்டு வைத்து மக்களைக் கொல்லும் முசுலீம் பயங்கரவாதி களைக் கண்டிப்பதில் போட்டிப் போடும் உலகத் தலைவர்களுள்


படிப்பகம்

www.padippakam.com

பெரும்பாலோர் இந்த யூத மதவெறி பயங்கரவாதத்தைக் கண்டும் காணாது போலவே நடந்து கொண்டனர். பாலஸ்தீன விடுதலையை ஆதரிப் பதாகச் சவடால் அடித்து வரும் இந் தியாவோ, இந்தத் தருணத்தில்கூட இசுரேலுடனான இராணுவத் தளவாட வர்த்தக ஒப்பந்தங்களைக் கைகழுவ மறுக்கிறது. வெனிசுலா, ஈரான், சிரியா உள்ளிட்ட ஒருசில ஏழை நாடுகள் மட்டும்தான் இசுரேல் நடத்தி வரும் இந்த அநீதியான போரைக் கடுமையாகக் கண்டித் துள்ளன.



இசுரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் தரைமட்டமான காசா முனையில் உள்ள ஜெபாலியா பகுதி.

அமெரிக்க அதிபர் தொடங்கி நம்ம ஊர் மொட்டைத் தலையன் ''சோ'' வரையிலான பாசிஸ்டுகள் அனைவரும், ''இசுரேல் அமைதியாக இருந்ததாகவும்; ஹமாஸ் இயக்கத் தீவிரவாதிகள் இசுரேலின் மீது ராக்கெட் தாக்குதலை நடத்தியதால்தான், தனது நாட்டின் பாதுகாப்புக்காக இசுரேல் இந்தப் போரை ஹமாஸ் இயக் கத்தின் மீது நடத்தி வருவதாகவும்'' ஒரு நொண்டிச்சாக்கை அவிழ்த்துவிட்டு, இசுரேலின் இந்தப் போர்க் குற்றங்களை நியாயப்படுத்தி வருகின்றனர்.

ஹமாஸ் இயக்கம் இசுரேல் மீது நடத்தும் ராக்கெட் தாக் குதலை ஏதோ அணுகுண்டை ஏந்திவரும் ஏவுகணைத் தாக்கு தலைப் போலப் பெரிதுபடுத்தி ஏகாதிபத்தியவாதிகள் பீதியூட்டி வருகின்றனர். ஆனால், போர் வல்லுநர்களோ, ''இந்த ராக்கெட் தாக்கி ஒரு இசுரேலியக் குடிமகன் இறக்க வேண்டும் என்றால், அது நேராக அவர் தலையில் விழ வேண்டும்'' என அதன் திறனை மதிப்பிடுகின்றனர்.

இசுரேலின் ஆக்கிரமிப்புப் போர் தீவிரமடைந்த பின், ஹமாஸ் இயக்கம் இசுரேலின் மீது நூற்றுக்கணக்கான ராக்கெட் தாக்குதல்களை நடத்தியிருக்கிறது. இசுரேலின் கணக்குப்படியே, டிசம்பர் 27-க்குப் பிறகு நடந்த ராக்கெட் தாக்குதல்களால் இறந்து போன இசுரேலியக் குடிமகன்களின் எண்ணிக்கை வெறும் மூன்றுதான். ஆனால், காசா முனையில்.....?

கடந்த எட்டு ஆண்டுகளில் ஹமாஸ் இயக்கம் காசா முனையில் இருந்து இசுரேலின் மீது நடத்திய ராக்கெட் தாக்கு தல்களால் இறந்துபோன இசுரேலியக் குடிமகன்களின் எண் ணிக்கை வெறும் 17 தான். அதே சமயம், இந்த எட்டு ஆண்டு களில் இசுரேல் நடத்திய வான் மற்றும் தரைவழித் தாக்கு தல்களால் காசா முனையில் 5,000 பாலஸ்தீனர்களும், மேற்குக் கரையில் 45 பாலஸ்தீனர்களும் கொல்லப்பட் டுள்ளனர் என்ற உண்மையில் இருந்தே, ''யார் குற்றவாளி?'' என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

ஹமாஸ் இயக்கத்திற்கும், இசுரேலுக்கும் இடையே ஜூன் 2008 தொடங்கி தற்காலிகப் போர் நிறுத்தம் அமலில் இருந்து வந்தது. டிசம்பர் 2008-இல் காலாவதியாகும் நிலையில் இருந்த இவ்வொப்பந்தத்தைப் புதுப்பிக்கும் முயற்சிகளும் நடந்து வந்தன. இதனை விரும்பாத இசுரேல், ஹமாஸ் இயக் கத்தை ஆத்திரமூட்டி தாக்கச் செய்யும் நரித்தனத்தில் இறங் கியது. இதன் அடிப்படையில், இசுரேல் அரசு தனது நாட்டின் வழியாக காசா முனைக்குச் செல்ல வேண்டிய அனைத்து அத்தியாவசியப் பொருட்களையும் கடந்த நவம்பர் மாதம் முதல் தடுத்து நிறுத்தி, பாலஸ்தீன மக்களின் மீது பொருளாதார முற்றுகையை மீண்டும் திணித்தது.

காசா முனைக்கு அத்தியாவசியப் பொருட்களைக் கொண்டு வருவதற்கு இசுரேலைத் தவிர வேறு வழிகளே இல்லாததால், பாலஸ்தீன மக்கள் உணவின்றி, எரிபொரு ளின்றி, மின்சாரமின்றி, மருந்துப் பொருட்கள் இன்றித் தவிக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டனர். காசா முனையில் வசிக்கும் பாலஸ்தீன மக்களுள் 56 சதவீதப் பேர் பச்சிளம் குழந்தைகளும் சிறுவர்களும்தான். இசுரேல் திணித்த பொருளாதாரத் தடையால், இக்குழந்தைகள் பால்கூடக் கிடைக்காமல் பட்டினிச் சாவின் விளிம்பிற்குத் தள்ளப்பட் டனர். இப்பொருளாதார முற்றுகையின் தொடர்ச்சியாக, காசா முனையைச் சேர்ந்த பத்து பாலஸ்தீனர்கள் இசுரேல் இராணுவத்தால் அநியாயமாகக் கொல்லப்பட்டனர். இதற்குப் பதிலடி கொடுக்கும் முகமாகத்தான் ஹமாஸ், இசுரேலின் மீது ராக்கெட் தாக்குதலைத் தொடுத்தது.

இவை ஒருபுறமிருக்க, காசா முனையும் மேற்குக் கரையும் ஆஸ்லோ ஒப்பந்தத்தின்படி பாலஸ்தீன சுயாட்சிப் பகு திகளாக வரையறுக்கப்பட்டிருந்தாலும், அந்த இரண்டு பகுதி களும் இசுரேலின் காலனி ஆதிக்கத்தின் கீழும், முற்று கையின் கீழும்தான் இன்றுவரை இருந்து வருகின்றன. குறிப்பாக, ஹமாஸ் இயக்கத்தைப் பூண்டோடு அழித்துவிட வேண்டும் என்பதற்காகவே, காசா முனை மீது கடந்த மூன் றாண்டுகளாக இசுரேலின் இராணுவத் தாக்குதல்களும், பொருளாதார முற்றுகையும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன. ஏகாதிபத்தியக் கும்பலும் அவர்களது அடிவருடிகளும் ஊதிப் பெருக்கும் ராக்கெட் பூச்சாண்டி என்பது இசுரேலின் இக்காலனி ஆதிக்கத்தை மூடிமறைக்கும் மோசடித்தனம் தவிர, வேறெதுவும் கிடையாது.

•••

1990-களுக்கு முன்பு பாலஸ்தீன மக்களின் விடிவெள்ளி யாகக் கருதப்பட்ட பாலஸ்தீன விடுதலை இயக்கம் இன்று

www.padippakam.com



இசுரேல் நடத்திய பீரங்கித் தாக்குதலில் கொல்லப்பட்ட பாலஸ்தீனக் குழந்தைகளின் சடலங்கள்.

இசுரேல் காசா முனைக்கு வர வேண்டிய அத்தியாவசியப் பொருட்களைத் தடுக்கும் அடாவடித்தனத்தைத் தொடர்ந்து செய்து வந்ததால், எகிப்து நாட்டில் இருந்து காசா முனைக்குத் தேவைப்படும் அத்தியாவசியப் பொருட்களையும் ஹமாஸுக்குத் தேவையான ஆயுதங்களையும் எடுத்துவரும் இரகசிய சுரங்கப் பாதைகள் அமைக்கப் பட்டன. இந்த இரகசிய சுரங்கப் பாதைகளை முற்றிலுமாக அழித்துவிட வேண்டும் என்ற நோக்கத்தின் அடிப்படையில்தான் இசுரேல் தற்பொழுது இராணுவத் தாக்குதல்களைத் தீவி ரப்படுத்தியதோடு, தனது தரைப்படையையும் காசா முனைக்குள் புகச் செய்தது. மேலும், தற் பொழுது இசுரேலில் ஆட்சி நடத்தி வரும் தொழிலாளர் கட்சி கூட்டணி, விரைவில் வரவுள்ள இசுரேல் நாடாளுமன்றத்துக்கான தேர்தலில் வென்று மீண்டும் ஆட்சியைப் பிடிப்பதற்கு, காசா முனை மீது ஒரு திடீர்த் தாக்குதலை நடத்துவதையே தனது தேர்தல் உத்தியாகவும் வகுத்துக் கொண்டுள்ளது.

அமெரிக்க அடிவருடியாகச் சீரழிந்து போய்விட்டது. ஆஸ்லோ ஒப்பந்தப்படி உருவாக்கப்பட்ட பாலஸ்தீன ஆணையத்திற்கு 2006-ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் பாலஸ்தீன விடுதலை இயக்கம், தனது சொந்த மக்களாலேயே புறக்கணிக்கப்பட்டுத் தோல்வியைச் சந் தித்தது. சர்வதேசக் கண்காணிப்பின் கீழ் நடத்தப்பட்ட இந்தத் தேர்தலில் ஹமாஸ் இயக்கம் அடைந்த வெற்றியை, அமெரிக் காவும், இசுரேலும் ஏற்றுக் கொள்ள மறுத்தன. இத்தேர்தலை யடுத்து, பாலஸ்தீன விடுதலை இயக்கத்திற்கும், ஹமாஸ் இயக்கத்திற்கும் இடையே நடந்த சகோதரச் சண்டையில், மேற்குக் கரையை பாலஸ்தீன விடுதலை இயக்கமும், காசா முனையை ஹமாஸ் இயக்கமும் தமக்குள் பாகப்பிரிவினை செய்து கொண்டன.

காசா முனையின் நிர்வாகத்தைக் கைப்பற்றிக் கொண்ட ஹமாஸ் இயக்கத்தை அழிக்க, ''காசா முனையில் வாழும் பாலஸ்தீன மக்களைக் கசக்கிப் பிழிவது'' என்ற திட்டத்தை அமெரிக்க- இசுரேல் கூட்டணி செயல்படுத்தியது. இதன்படி, காசா முனையில் உற்பத்தியாகும் பொருட்கள் இசுரேல் வழியாக ஏற்றுமதி செய்யப்படுவது தடுக்கப்பட்டு, காசா முனையில் நடந்து வந்த விவசாயமும், சிறு தொழிலும் முற்றி லுமாக அழியும் நிலைக்குத் தள்ளப்பட்டன. இசுரேலின் கையில் இருந்த பாலஸ்தீன மக்களின் வரிப் பணமும், ஏற்றுமதி வருமானமும் அவர்களுக்குத் திருப்பித் தரப் படாமல் முடக்கப்பட்டன; காசா முனைக்குச் சேர வேண்டிய ஐ.நா.வின் உதவிகளும் தடுக்கப்பட்டன.

ஹமாஸ் இயக்கத் தலைவர்களைக் குறிபார்த்துத் தாக்கிக் கொல்வது என்ற பெயரில், கடந்த மூன்றாண்டுகளாக காசா முனை மீது வான்வழித் தாக்குதல்கள் தீவிரப்படுத்தப் பட்டன. மேலும், இசுரேல் வழியாக காசா முனைக்குச் செல்லும் அத்தியாவசியப் பொருட்களின் வரத்து படிப்படி யாகத் தடை செய்யப்பட்டு, கடந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் காசா முனை மீது ஒரு முழுமையான பொருளாதாரத் தடை இசுரேலால் திணிக்கப்பட்டது. பாலஸ்தீன மக்கள், எகிப்து நாட்டின் எல்லையை அத்துமீறிக் கடந்து, அந்நாட்டிற்குள் நுழைந்ததன் மூலம் இப்பொருளாதார முற்றுகையை முறிய டித்தனர்.

போர் தொடங்கி 22 நாட்கள் கழித்து காசா முனை மீதான தாக்குதல்களை நிறுத்திக் கொள்வதாக இசுரேல் அறிவித்தி ருந்தாலும், காசா முனைக்குள் புகுந்திருக்கும் இசுரேலிய தரைப்படை முற்றிலுமாக விலக்கிக் கொள்ளப்படுமா என்ற கேள்வியை முதலாளித்துவ பத்திரிகைகளே எழுப்புகின்றன. பாலஸ்தீனத்தின் மீதான இசுரேலின் காலனியாதிக்கமும் முற்றுகையும் முடிவுக்கு வராத வரை, இசுரேல் அறிவிக்கும் போர் நிறுத்தம் என்பதெல்லாம் ஊரை ஏமாற்றும் மோசடித் தனம்தான். இக்காலனியாதிக்கம் முடிவுக்கு வராத வரை ஹமாஸின் ராக்கெட் தாக்குதலும் முடிவுக்கு வராது.

எகிப்து-காசா முனை எல்லையில் உள்ள சுரங்கப் பாதைகள் முற்றிலுமாக அழிக்கப்படுவதோடு, எதிர் காலத்தில் எகிப்தில் இருந்து அத்தியாவசியப் பொருட்களும், ஆயுதங்களும் கடத்தப்படுவதைத் தடுக்க ஒரு சர்வதேசக் கண்காணிப்புப் படையை எகிப்து-காசா முனை எல்லையில் நிறுத்த வேண்டும் என இசுரேல் நிபந்தனை விதிக்கிறது. இதனை வேறு மாதிரியாகச் சொன்னால், மூன்று ஆண்டு களுக்கு முன்பு காசா முனையில் இருந்து வெளியேறிய இசுரேல் இராணுவம் மீண்டும் சர்வதேசக் கண்காணிப்பு என்ற பெயரில் அங்கு பாசறைகளை அமைத்து, காசா முனையை நேரடியாக ஆள விரும்புகிறது என்பதுதான்.

ஹமாஸ் இயக்கம் இசுரேலின் இந்த ஆதிக்கத் திமிர் பிடித்த நிபந்தனைகளுக்கு மாறாக, ''இசுரேல் இராணுவம் காசா முனையில் இருந்து வெளியேற வேண்டும்; காசா முனையை வெளியுலகோடு இணைக்கும் அனைத்துப் பாதை களையும் திறந்துவிட வேண்டும்'' என்ற கோரிக்கைகளை முன் வைத்துள்ளது.

•••

இசுரேல், கிறிஸ்துமஸ் முடிந்தவுடனேயே காசா முனை மீது தாக்குதல் தொடுக்கும் என்பது அமெரிக்க அரசிற்கு முன்பே தெரியும். முதலாளித்துவ பத்திரிகைகளே அதற்கான ஆதாரங்களை இப்பொழுது அம்பலப்படுத்தி வருகின்றன. இசுரேலை எதிர்க்கும் ஹமாஸ் மற்றும் ஹிஸ்புல்லா இயக் கங்களை ஒடுக்குவதை, மேற்காசியாவில் ஈரானின் செல் வாக்கைக் கட்டுப்படுத்தும் திட்டத்தின் முன்னோட்டமாக


படிப்பகம்

www.padippakam.com

அமெரிக்க ஏகாதிபத்தியம் பார்ப்பதால், நட்த்திய ஜார்ஜ் புஷ் இத்தாக்குதலை இசுரேலை வெளிப்படையாக ஆதரித்து நின்றதோடு, போர் நிறுத்தம்கூட இசுரேலின் நலன்களுக்கு ஏற்றபடிதான் அமைய வேண்டும் என விரும்பினார்.



இசுரேலின் அதிநவீன இராணுவத்தின் மீது கவன்கல் தாக்குதல் நடத்தும் பாலஸ்தீனத்தின் வீர இளைஞர்கள்.

பாரக் ஒபாமா இப்பொழுது அதிபராகிவிட்டதால், அமெரிக்கா - இசுரேல் உறவில் மாற்றம் ஏற்படும் என்ற மூட நம்பிக்கையை சில முதலாளித்துவ அறிஞர்கள் பரப்பி வருகின்றனர். ஒபாமாவிற்கு மேற்காசியா குறித்து ஆலோசனைகள் வழங்கத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள டென்னிஸ் ரோஸ், டான் கர்ட்ஸர் என்ற இரு அதிகாரிகளும் இசுரேலின் பாதாந்தாங்கிகள் என்பது ஊரறிந்த உண்மை. மேலும், ஒபாமாவின் அமைச்சரவையின் மூத்த அதிகாரியாக நியமிக்கப்படவுள்ள ரஹ்ம் இமானுவேல், இசுரேலின் இராணுவத்தில் பணியாற்றியவர்; இசுரேல், பாலஸ்தீனத்திற்கு எந்தச் சலுகையும் காட்டத் தேவையில்லை என்ற கொள்கையை உடையவர்.

இது மட்டுமின்றி, அமெரிக்க அதிபர் தேர்தலுக்கு முன்பாக இசுரேலுக்குச் சென்ற ஒபாமா, ஹமாஸின் ராக்கெட் தாக்குதலால் சேதமடைந்து போன இசுரேல் போலீசு நிலையத்தைப் பார்வையிட்டுவிட்டு, ''என் இரண்டு பெண் குழந்தைகள் தூங்கிக் கொண்டிருக்கும்பொழுது யாராவது ஏவுகணையை வீசினால், அதைத் தடுக்க எதையும் செய்வேன்'' எனக் கூறி, இசுரேலின் அடாவடித்தனங்களுக்கு ஒத்து ஊதினார். அதனால்தான் அமெரிக்க மொழியியல் வல்லுநரான நோம் சோம்ஸ்கி, ''மேற்காசியா தொடர்பான ஒபாமாவின் நிலைப்பாடு, புஷ்ஷின் ஆட்சிக் காலத்தைவிட மோசமாக இருக்கும்'' என எச்சரித்துள்ளார்.

பாகிஸ்தானில் இயங்கி வரும் முசுலீம் தீவிரவாத அமைப்புகளின் முகாம்களை மூடச் சொல்லி பாக். அரசுக்கு நெருக்கடி கொடுத்தது, ஐ.நா. மன்றம். அதேசமயம், காசா முனையில் ஐ.நா. மன்றம் நடத்திவந்த பள்ளிக்கூடத்தின் மீது விமானத் தாக்குதல் நடத்தி 40-க்கும் மேற்பட்ட பாலஸ்தீனச் சிறுவர்களை இசுரேல் கொன்றொழித்தபோதும்; ஐ.நா. பொதுச் செயலர் பான் கீ மூன் காசா முனைக்கு வந்து போரால் ஏற்பட்ட அழிவுகளைப் பார்வையிட்டுக் கொண்டிருந்த சமயத்தில், ஐ.நா. மன்றத்தின் கட்டுப்பாட்டில் இருந்த உணவுக் கிடங்கை இசுரேல் குண்டு போட்டு அழித்த போதும், ஐ.நா. மன்றம் இந்த யூத மதவெறி பயங்கரவாதத்தைக் கடுமையான வார்த்தைகளால் கண்டிக்கக்கூட முன்வரவில்லை. இப்படி ஐ.நா. மன்றம் யூத மதவெறி பயங்கரவாதத்துக்கு இணங்கிப் போவதை அதன் கையாலாகாத்தனம் என்பதா? இரட்டை வேடம் என்பதா?

மும்பயில் ''நாரிமன் ஹவுஸ்'' என்றழைக்கப்படும் யூத மதத்தினரின் பிரார்த்தனைக் கூடம் முசுலீம் தீவிரவாதிகளால் தாக்கப்பட்டபொழுது, அதனைப் பத்திரிகைகள் கண்ணீர் வடிக்காத குறையாகக் கண்டித்து எழுதின. இசுரேலியக் குண்டு வீச்சால் பாலஸ்தீனம் சுடுகாடாக்கப்பட்டு வரும்பொழுது, யூதர்கள் மட்டும் அமைதியாகவும், பாதுகாப்பாகவும் வாழ்ந்துவிட முடியுமா? இந்தியா, யூத மதவெறி பிடித்த இசுரேலுடன் நெருக்கமான இராணுவ உறவுகளை வளர்த்து வரும் பொழுது, முசுலீம் தீவிரவாத அமைப்புகளின் குறியில் இருந்து நமது நாடுதான் தப்பித்துக் கொள்ள முடியுமா?

காசா முனையில் வாழும் பாலஸ்தீன மக்களைக் கசக்கிப் பிழிந்தால், அவர்கள் ஹமாஸ் 'ஆட்சி'யைத் தூக்கியெறிந்து விடுவார்கள் என்ற அமெரிக்க-இசுரேல் கூட்டணியின் திட்டம் இன்று மண்ணைக் கவ்வி விட்டது. ஊழலும், அதிகார முறைகேடுகளும் நிறைந்த ஹமாஸ் ஆட்சியை வெறுக்கும் பாலஸ்தீன மக்கள்கூட, அதைவிடப் பல மடங்கு அதிகமாக அமெரிக்க-இசுரேல் பாசிசக் கூட்டணியைத்தான் வெறுக்கிறார்கள்.

எகிப்து, ஜோர்டான், சவூதி அரேபியா ஆகிய நாடுகளின் ஆளுங்கும்பல்கள், காசா முனை மீது இசுரேல் நடத்தும் தாக்குதலை மறைமுகமாக ஆதரிக்கும் நிலையில்; மேற்குக் கரையில் வாழும் பாலஸ்தீன மக்கள் இசுரேலைக் கண்டித்து நடத்தும் ஆர்ப்பாட்டங்களைக்கூட ஒடுக்கும் அளவிற்கு பாலஸ்தீன விடுதலை இயக்கம் சீரழிந்து போய்விட்ட நிலையில், அரபு நாடுகளின் தெருக்களில் அமெரிக்க அடிவருடித்தனத்திற்கு எதிரான போராட்டங்கள் தன்னிச்சையாக வெடித்துப் பரவி வருகின்றன.

புரட்சிகர கம்யூனிஸ்டு இயக்கங்களோ, மதச் சார்பற்ற தேசிய விடுதலை இயக்கங்களோ வலுவாக இல்லாத நிலையில்; அரபு மக்களின் ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வை முசுலீம் மதவாத இயக்கங்கள் அறுவடை செய்து கொள்கின்றன. மேற்காசியாவில் புதிய உலக ஒழுங்கமைப்பு என்ற பெயரில் அமெரிக்கா நடத்தி வரும் மறுகாலனி ஆதிக்க அடாவடித்தனங்கள் மட்டுமின்றி, விடுதலை இயக்கங்களின் தலைமையை முசுலீம் மதவாத இயக்கங்கள் கைப்பற்றி வருவதும்கூட கவலைக்குரிய விசயமாகும்!

• செல்வம்


படிப்பகம்

www.padippakam.com

# "தாழ்த்தப்பட்ட மக்கள் மீதான அடக்குமுறைகளை முறியடிப்போம்! வாழ்வுரிமைக்காகப் போராடுவோம்!"

## – புரட்சிகர அமைப்புகளின் ஆர்ப்பாட்டம்

தர்மபுரி - கிருஷ்ணகிரி மாவட்டங்களின் பல கிராமங்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் மீதான அடக்குமுறைகள் கேள்விமுறையின்றித் தொடர்கின்றன. அஞ்செட்டி அருகே தேவன் தொட்டி கிராமத்தில் டீக்கடைகளில் தாழ்த்தப்பட்ட மக்களுக்கென தனிக்குவளை முறை பகிரங்கமாகவே நீடிக்கிறது. நாட்ராம் பாளையம் பகுதியில் பட்டா வழங்கி 25 ஆண்டுகள் ஆகியும், பல நூறு மனுக்கள் கொடுத்து முறையீடு செய்தும் இன்னமும் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு வீட்டுமனை கிடைக்கவில்லை. வீட்டுமனை கேட்டுப் போராடிய மக்கள் மீது பொய்வழக்குகளைப் போட்டு துன்புறுத்தி வருகிறது, அரசு. பென்னாகரம் அருகே சிகரலப்பள்ளி கிராமத்தில் உள்ள நிலத்தினை தாழ்த்தப்பட்ட மக்களிடம் ஒப்படைக்க வேண்டும் என உயர்நீதி மன்றம் உத்தரவிட்ட பின்னரும் இதுவரை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நிலம் கிடைக்கவில்லை. இம்மாவட்டங்களின் பல்வேறு கிராமப் பொதுக்கோயில்களில் தாழ்த்தப்பட்ட மக்களின் வழிபாட்டு உரிமை மறுக்கப்பட்டுத் தீண்டாமை கடைபிடிக்கப்படுகிறது. கடந்த ஆண்டில் செம்மணக்குழியில் தாழ்த்தப்பட்டோரின் 25 குடிசைகள் தீக்கிரையாக்கப்பட்ட வன்கொடுமை நடந்த போதிலும் குற்றவாளிகள் தண்டிக்கப்படவில்லை.

தாழ்த்தப்பட்ட மக்கள் மீது இம்மாவட்டங்களில் தொடரும் தீண்டாமை - வன்கொடுமைகளுக்கு எதிராகவும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நிலம் மற்றும் வீட்டுமனைப் பட்டாக்களை வழங்கக் கோரியும், பொய்வழக்குகளைத் திரும்பப்பெறக் கோரியும், வன்கொடுமைத் தடுப்புச் சட்டத்தின்கீழ் பதிவு செய்யப்பட்ட வழக்குகளை விரைவாக விசாரித்து,



ஆதிக்க சாதிவெறியர்களைத் தண்டிக்கக் கோரியும் தருமபுரி, கிருஷ்ணகிரி மாவட்டங்களில் இயங்கும் விவசாயிகள் விடுதலை முன்னணி, புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி ஆகிய புரட்சிகர அமைப்புகள் இணைந்து 29.12.08 அன்று கிருஷ்ணகிரி வட்டாட்சியர் அலுவலகம் முன்பாக எழுச்சி மிகு ஆர்ப்பாட்டத்தை நடத்தின. கீழ்வெண்மணி தியாகிகளின் 40-ஆம் ஆண்டு நினைவு நாளையொட்டி திரளான மக்கள் பங்கேற்புடன் நடந்த இந்த ஆர்ப்பாட்டம், ஆதிக்க சாதிவெறிக்கு எதிராகவும் தாழ்த்தப்பட்டோரின் வாழ்வுரிமைக்காகவும் அனைத்து உழைக்கும் மக்களையும் போராட அறைகூவியது.

**— பு.ஜ. செய்தியாளர்கள்.**

# தலைமையாசிரியரா? சமூக விரோத ரவுடியா?

நாகை மாவட்டம் அருகேயுள்ள திருமருகல் அரசு மேநிலைப்பள்ளியின் தலைமையாசிரியராக இருப்பவர் பா.திருமாவளவன். காலை 11 மணிக்குமேல்தான் பள்ளிக்கு வருவது; பள்ளியிலே தண்ணியடித்து விட்டுத் தனியறையில் தூங்குவது மட்டுமல்ல; சட்டவிரோதமாக கல்வி கட்டணம், கட்டாய நன்கொடை என 1,50,000-க்குமேல் வசூலித்தது



தொடங்கி, பள்ளியிலிருக்கும் தூங்குமூஞ்சி மரங்களை வெட்டியும், ஓடுகளைப் பிரித்தும், பழைய இரும்பு, தேர்வுத் தாட்களை எடைக்குப் போட்டும் பொறுக்கித் தின்றது வரையிலான திருவாளர் திருமாவளவனின் 'புகழ் பாட' பக்கங்கள் போதாது.

திட்டச்சேரி காவல் நிலையத்தில் ரௌடிகள் பட்டியலில் உள்ள (எச்.எஸ். 232) சண்முகம் பத்தர், எம்.ஜி.ராஜேந்திரன், மணிவாசகம், தட்சிணாமூர்த்தி, எம்.முருகராஜ், மணிவேல் ஆகியோர் திருமாவளவனின் கூட்டாளிகளாக உள்ளனர். இதனைத் தக்க ஆதாரங்களுடன் பட்டியலிட்டு கடந்த 10.10.08 அன்று கல்வித்துறை அதிகாரிகளுக்கு புகார் மனு அனுப்பிய இப்பள்ளி மாணவர்களை மிரட்டி வெற்றுத் தாளில் கையெழுத்தையும் வாங்கியிருக்கிறான் கிரிமினல் திருமாவளவன்.

இந்நிலையில் இப்பகுதியில் செயல்படும் விவசாயிகள் விடுதலை முன்னணி, புரட்சிகர மாணவர்- இளைஞர் முன்னணி ஆகிய புரட்சிகர அமைப்புகளிடம் மாணவர்கள் முறையிடவே, இதனை அம்பலப்படுத்தி உடனடியாக சுவரொட்டிகளை ஒட்டினர் இவ்வமைப்பினர், ஒட்டப்பட்ட



படிப்பகம்

www.padippakam.com

சுவரொட்டிகளைக் கிழித்ததோடு, தோழர்களைக் கொலை செய்துவிடுவதாக மிரட்டவும் செய்தது, மேற்படி ரௌடி கும்பல். இதனைத் தொடர்ந்து 05.12.08 அன்று கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தப் போவதாக அறிவித்து சுவரொட்டி ஒட்டிய தோழர்களை மீண்டும் தாக்கியது இக்கும்பல். இதில் திட்டச்சேரி காவல் நிலையத்தில் ஏட்டுகளாக பணிபுரியும் ஜனார்த்தனன், சேதுபதி, ஜெகநாதனும் அடக்கம்.

ரௌடிகளின் கூட்டாளிகளான போலீசின் கைங்கரியத்தில் 4 தோழர்கள் மீது பொய்வழக்கு பதிவாகிச் சிறையலடைக்கப்பட்டனர். பிணையில் வெளியே வந்த தோழர்கள் "அடைமழையையொட்டி ஆர்ப்பாட்டம் தள்ளி வைக்கப்படுகிறது" என்பதை அறிவிக்கும் சுவரொட்டிகளை ஒட்டினர். மீண்டும் தாக்குதல், மீண்டும் பொய்வழக்கு! வி.வி.மு.வைச் சேர்ந்த ராஜ்குமார், செல்வராஜ் ஆகிய இரு தோழர்களை மீண்டும் சிறையலடைத்தது போலீசு.

இதனையடுத்து மாவட்ட கல்வித்துறை, போலீசு-இரண்டையும் கண்டித்து 09.01.09 அன்று நாகை பேருந்து நிலையம் அருகில், திரளான மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் பொதுமக்கள் பங்கேற்புடன் கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்தினர் இவ்வமைப்பினர். வி.வி.மு. திருமருகல் கிளைச்செயலர் தோழர் தட்சிணா மூர்த்தி தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில், பு.மா.இ.மு. மாநில ஒருங்கிணைப்பாளர் தோழர் ச.பரமானந்தம், ம.க.இ.க மாநில இணைச் செயலர் தோழர் காளியப்பன் மற்றும் முன்னணியாளர்கள் கண்டன உரையாற்றினர்.

**— வி.வி.மு., திருமருகல்.**

# குத்தாட்டமே டைஃபியின் "கலாச்சாரப் புர்ர்ரட்ச்ச்சி!"

"அரியலூர் - பெரம்பலூர் ஒருங்கிணைந்த மாவட்டத்தில் முதல்முறையாக... தமிழர் திருநாளை முன்னிட்டு மாவட்ட அளவிலான மாபெரும் நடனப் போட்டி..." என சன் டி.வி ரேஞ்சுக்கு நம்மைச் சுண்டியிழுத்தது அந்த விளம்பரம்.

அதுமட்டுமா? ஒரு மூலையில் பகத்சிங்கின் படத்தை வேறு போட்டிருந்தார்கள், அந்த பிரசுரத்தில். அட, வேறு யாருமில்லீங்க! நம்ம டைஃபி (DYFI) பங்காளி(லி)ப் பசங்க தான் இதுக்கெல்லாம் ஏற்பாடாம்.

வந்த ஆத்திரத்தை திட்டி தீர்த்துரலாமுன்னு டைஃபி மாவட்ட செயலரு ஆர்.செல்லபாண்டியனுக்கு போன் போட்டு "டைஃபி சார்பா என்ன எழவ வேணாலும் நடத்திக் கோங்க. சம்பந்தமேயில்லாம எதுக்கு பகத்சிங் படத்த போட்டுத் தொலைக்கிறீங்க"ன்னு கேட்டா...

"எல்லாம் நம்ம தலைவர்களை மக்களுக்கு அறிமுகப் படுத்தத்தான் தோழரே" என்றிழுத்து, "முதலாளித்துவப் பத்திரிக்கைகள் நம்ம அமைப்பை விளம்பரப்படுத்த மாட்டேன்கிறான் தோழர். இப்ப பாருங்க மாவட்ட செய்தியில் நம்ம அமைப்பு செய்தியை(!) எவ்வளவு பெரிசா போட்டிருக்கான் பார்த் தீங்களா?" என நிறுத்தி; "கூடவே நிகழ்ச்சிக்கு இடையிடையே நம்ம கருத்தையும் விட்டுப் போகிறோம் தோழரே!" என சீரியசாக(!) பேசியதைக் கேட்ட எம்மால் மேல்வாயால் சிரிக்க முடியாமல் போய்விட்டது.




அது கிடக்கட்டும்; அப்படி என்ன தான் கருத்தை ஆட்டத்துக்கு நடுவே அவுத்துவுடப் போகிறார்கள் என பார்த்து விடலாம் என மனதை ஆறுதல்படுத்திக் கொண்டு கிளம்பினோம் நிகழ்ச்சிக்கு.

"ஆட்டமா... சதிராட்டமா"... தொடங்கி, "என் செல்லப் பேரு ஆப்பிள்; என்ன திச்சா கடிச்சிக்கோ..." வரையிலான பலான பலான பாடல்களுக்கு பள்ளிச் சிறுமிகளின் தொப்புளில் ஜிகினா தடவி ஆடவிட்டு சன் டி.வி.யையே விஞ்சுமளவுக்கு ரிக்கார்டு டான்ஸ் நடத்தி "ரிக்கார்டு" செய்து விட்டனர்.

மைக்கைப் பிடித்து மேடையேறினாலே விசிலடித்து, கூச்சல் போட்டு கீழே இறக்கி விட தயாராயிருந்தது வாலிபக் கூட்டம்! இடையிடையே கருத்தை அவிழ்த்து விடும் முயற்சி புஸ்வாணமாகி விட்டது!

சி.பி.எம். கட்சியின் விவசாயிகள் சங்க மாவட்ட தலைவர் செல்லதுரை பெரம்பலூரிலிருந்து பஸ் புடிச்சி வந்திருப்பதாகவும் இங்கே பேசவிருப்பதாகவும் கேள்விப்பட்டு அவர் பேச்சுக்காக காத்திருந்தோம்.

நோட்டீஸ் படித்தும், போனில் கேட்டும், நேரில் பார்த்தும் நம்மால் விளங்கிக் கொள்ளாததை நேர்மையாய் சொன்னார் அவர்.

"இங்கு நடனமாடிய இளைஞர்-இளைஞிகள் அனைவரும் சிம்பு, தனுஷ், அஜித், விஜய், நயன்தாராவை போலவே நடனமாடினார்கள். இது, மன இறுக்கத்தை நீக்கி மகிழ்ச்சியளிக்கிறது. (இல்லாமலா பின்ன!) நீங்கள் எல்லாம் 'அசத்தப் போவது யாரு' போன்ற நிகழ்ச்சிகளுக்குச் செல்லவேண்டும். சன் டி.வி. போன்ற டி.வி.களும் இளம் இயக்குனர்களும் இவர்களின் திறமையைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்" எனப் பின்னணியில் பலத்த கரவொலியும் விசிலும் காதைப் பிளக்க பேசி அமர்ந்தார் அவர்!

நாட்டை இருள் கவ்விய சூழலில் இன்ப களியாட்டம் போடும் இவர்களிடம் முடிவாய் இனி சொல்ல என்ன இருக்கிறது? முகத்தில் காறி உமிழ்வதைத் தவிர!

**— பு.ஜ. செய்தியாளர், செயங்கொண்டம்.**

www.padippakam.com

### ஸ்பெக்ட்ரம் ஊழல்:

# நெல்லுக்குப் பாய்ந்தது தெரிகிறது புல்லுக்குப் பாய்ந்தது....?

## எதிர்க்கட்சிகள் ஸ்பெக்ட்ரம் ஊழல் பற்றி அடக்கி வாசிப்பதன் மர்மமென்ன?

இந்தியத் தரகு முதலாளிகளுக்கு பொன்முட்டையிடும் வாத்து, தகவல் தொடர்புத் துறையாகும். கடந்த பத்தாண்டுகளில் இந்தத் துறையில் முதலாளிகள் அடித்த கொள்ளை பல ஆயிரம் கோடிகளைத் தாண்டும். அதே அளவு கோடிகளை அரசும், பொதுத்துறையும் இழந்திருக்கிறது. இந்த இழப்பிற்கும், அந்தக் கொள்ளைக்கும் காங்கிரசு, பா.ஜ.க. இரு கட்சிகளும், அதிகார வர்க்கமும் காரணமாயிருக்கின்றன. இந்த அணிவகுப்பில் சமீபத்திய வரவு ஸ்பெக்ட்ரம் ஊழல். இதில் கொள்ளையடிக்கப்பட்டிருக்கும் மக்கள் பணம் ரூ. 60,000 கோடி என மதிப்பிடப்பட்டிருக்கிறது.

1991-ஆம் ஆண்டிலேயே உலக வங்கி தொலைபேசித் துறையில் தனியார் முதலாளிகளை அனுமதிக்க வேண்டுமென இந்தியாவிற்கு உத்தரவிட்டிருந்தது. அப்போதிருந்த நரசிம்ம ராவ் அரசும் இதைச் சிரமேற்கொண்டு அமல்படுத்தியது. எல்லா பகாசுரக் கம்பெனிகளும் களத்தில் குதித்து, அரசிடமிருந்த தொலைபேசித் துறையின் வளத்தை ஊழல் உதவியுடன் முழுங்க ஆரம்பித்தன. அப்பொழுது தகவல் தொடர்பு அமைச்சராக இருந்த சுக்ராம் வீட்டில் சி.பி.ஐ கட்டுக்கட்டாய்ப் பல கோடி பணத்தைக் கைப்பற்றியது வாசகர்களுக்கு நினைவிருக்கலாம்.

பின்னர் வந்த வாஜ்பாய் அரசில் தகவல் தொடர்புத் துறை அசுரவேகத்தில் தனியாருக்குத் தாரை வார்க்கப்பட்டது. ஊழலும் அதே வேகத்தில் கொடிகட்டிப் பறந்தது. அரசுக்குக் கட்ட வேண்டிய லைசென்சு பணத்தை எல்லா நிறுவனங்களும் கட்டாமல் பட்டை நாமம் போட்டன. இதில் சில ஆயிரம் கோடி ரூபாய் மக்கள் பணம் சுருட்டப்பட்டது. பா.ஜ.க. அரசும் தனியார் நிறுவனங்களின் இந்தக் கட்டண ஏய்ப்பை அங்கீகரித்து உத்தரவிட்டது. அரசுத் தொலைபேசித் துறையை ஒழித்துத் தனியாரை வளர்ப்பதற்கென்றே ''ட்ராய்'' என்ற தொலைபேசித் துறை ஒழுங்குமுறை ஆணையம் உருவாக்கப்பட்டது. இந்த அமைப்பு எல்லா புகார் மற்றும் வழக்குகளில் தனியார் நிறுவனங்களுக்கு ஆதரவாக நடந்து கொண்டு வருகிறது.

அப்போது தகவல்-தொடர்புத் துறை அமைச்சராக இருந்த பிரமோத் மகாஜன் இந்த நிறுவனங்களின் தரகராக இருந்து காரியத்தைச் சாதித்துக் கொடுத்தார். இந்தச் சூழலில்தான் ரிலையன்சு நிறுவனம் பல மோசடிகளை அரங்கேற்றியது. வில்போன் எனப்படும் வட்டார தொலைபேசி லைசென்சு எடுத்திருந்த அம்பானி அதற்கு மாறாக செல்பேசி சேவையை வழங்கினார். இதில் சில ஆயிரம் கோடி இழப்பு ஏற்பட்டதும் ரிலையன்சுக்கு அபராதம் விதிக்கப்பட்டது. பிறகு அந்த அபராதத் தொகை பல மடங்கு குறைக்கப்பட்டுத் தள்ளுபடி செய்யப்பட்டது. அதேபோல வெளிநாட்டுத் தொலைபேசி அழைப்புக்களை உள்ளூர் அழைப்புக்களாக மாற்றி ரிலையன்சு செய்த பச்சையான மோசடியிலும் அபராதத் தொகை தள்ளுபடி செய்யப்பட்டது. மாநகரங்களில் உரிமை அளிக்கப்பட்ட நிறுவனங்கள் கிராமங்களுக்கும் சேவை அளிக்க வேண்டும் என்ற நிபந்தனையைத் தனியார் நிறுவனங்கள் புறந்தள்ளின.

இந்தச் சூழலில்தான் மன்மோகன்சிங் அரசின் ஸ்பெக்ட்ரம் ஊழலைப் பார்க்க வேண்டும். முதலில் அலைக்கற்றை எனப்படும் ஸ்பெக்ட்ரம் என்றால் என்ன என்று பார்க்கலாம். 1990-க்கு முன்பு நமது தொலைபேசிகள் எல்லாம் கம்பி வழியாக செயல்பட்டன. நாடு முழுக்க கம்பி வலைப்பின்னல் போடப்பட்டு, இந்த தொலைபேசி சேவை இயங்கியது. பின்னர் செல்பேசி வந்ததும் இந்த கம்பிவழி தேவைப்படவில்லை. இதன்படி மின்காந்த அலைகள் ஒரு அலைக்கற்றை வரிசையில் அனுப்பப்பட்டு, செல்பேசியில் இருக்கும் குறியீட்டு வாங்கியினால் பெறப்பட்டுத் திரும்ப அனுப்பப்படுகிறது. கிட்டத்தட்ட ரேடியோ செயல்படும் விதத்தைப் போலத்தான் இதுவும். அதனால்தான் செல்பேசிகளில் எஃப்.எம். வானொலி சேவை கிடைக்கிறது. இந்த அலைக்கற்றைகள் உலகமெங்கும் ஒரு ஒழுங்குமுறைக்கு உட்படுத்தப்பட்டுப் பல நிறுவனங்களுக்கும் பிரித்துக் கொடுக்கப்படுகிறது. இது, பல வானொலி நிலையங்களுக்குப் பல்வேறு அலைவரிசைகளை ஒதுக்குவதற்கு ஒப்பானது.



தொலைத் தொடர்புத் துறை அமைச்சர் அ. ராசா.
தேன் எடுத்தவன் புறங்கையை நக்காமல் இருப்பானா?

செல்பேசியைப் பொருத்தவரை இந்த அலைக்கற்றைகளின் வசதி வருடத்திற்கு வருடம் மேம்பட்டு வருகிறது. அதாவது, முதலாவது தலைமுறை அலைக்கற்றை 2001-ஆம்


படிப்பகம்

www.padippakam.com

ஆண்டில் நிறுவனங்களுக்குக் கொடுக்கப்பட்டது. இப்போது அதைவிட வேகமாகவும் வசதிகள் கொண்ட அலைக்கற்றைகள் - இரண்டாம் தலைமுறை ஸ்பெக்ட்ரம் கொண்டு வரப்படுகிறது. இனி வருங்காலத்தில் செயல்பாட்டுக்கு வரும் மூன்றாம் தலைமுறை அலைக்கற்றை என்பது இணையம் பயன்படுத்துவது உட்பட பல வசதிகளைக் கொண்டிருக்கும். எனவே, இந்த அலைக்கற்றைகளின் அலைவரிசைகளை ஒதுக்கீடு செய்வது என்பது இயற்கையை விற்பது போல என்று கூடக் கூறலாம். இதை வைத்து அந்த நிறுவனங்கள் பல சேவைகளை வாடிக்கையாளருக்கு அளித்து பல்லாயிரம் கோடி ரூபாயைத் திரட்டுகின்றன என்பது தான் முக்கியம்.

இப்போது சென்ற ஆண்டு இறுதியில் இரண்டாவது தலைமுறை அலைக்கற்றை எனப்படும் 2 ஜி ஸ்பெக்ட்ரம் விற்கப்பட்ட விதத்தைப் பார்ப்போம். 2001-ஆம் ஆண்டில் முதல் தலைமுறை அலைக்கற்றை விற்கப்பட்டது. அப்போது அதை வாங்கிய நிறுவனங்கள் இந்த வசதியைப் பயன்படுத்தி பெறும் வர்த்தக ஆதாயத்தில் அரசுக்குப் பங்கு தர, வருவாய்க்கேற்ற பங்கு என்ற முறையில் விற்கப்பட்டன. அப்போதே விற்பனைத் தொகை மிகவும் குறைவு என்பதோடு, பின் வந்த ஆண்டுகளில் அந்த உரிமையை வாங்கிய நிறுவனங்கள் அந்த தொகையைக் கூடக் கட்டாமல் ஏமாற்றி வந்தன. அரசும், அதிகார வர்க்கமும் இந்த ஏமாற்றுதலை அங்கீகரித்தன.



**கருணாநிதி - மாறன் குடும்பத்துக்கு இடையே நடந்து வந்த சொத்துத் தகராறு முடிந்ததை மட்டுமல்ல, ஸ்பெக்ட்ரம் ஊழலுக்கு எள்ளுத் தண்ணி ஊற்றப்பட்டதையும் அறிவித்த புகைப்படம்.**

ஏழு ஆண்டுகளுக்கு பின்பு இப்போது இரண்டாவது தலைமுறை அலைக்கற்றையை விற்கிறார்கள். இப்போதாவது அரசு இதை நல்ல விலைக்கு விற்றதா என்றால் இல்லை. 2001-ஆம் ஆண்டில் என்ன விலைக்கு விற்றார்களோ அதே அடிமாட்டு விலைக்கு விற்றிருக்கிறார்கள். அதுவும் பகிரங்கமாக ஏலம் விட்டு இதைச் செய்யவில்லை. முதலில் எந்த நிறுவனங்கள் வருகிறதோ அவைகளுக்கு ஒதுக்கீடு என்ற முறை பின்பற்றப்பட்டு வழங்கப்பட்டிருக்கிறது. இதன்படி ரூ.60,000 கோடிக்கு விற்கவேண்டிய சரக்கு வெறும் ரூ.3000 கோடிக்கு விற்கப்பட்டிருக்கிறது. ஸ்வான், யுனிடெக் என்ற இரு நிறுவனங்கள் ஊழல் உதவியுடன் இதைச் சாதித்திருக்கின்றன. காங்கிரசு மற்றும் தி.மு.க. கட்சிகளின் ஆசீர்வாதத்தோடு இந்தத் திருப்பணியை மைய அமைச்சர் ராஜா செய்து முடித்திருக்கிறார்.

ஒரு தொகை என்ற அளவில் இதுவரை நாடு கண்ட ஊழலில் இதுதான் மிகப் பெரியது என்று சொல்லலாம். இத்துடன் ஒப்பிடும்போது போபார்ஸ், ஃபேர்பாக்ஸ் போன்ற ஊழல்களெல்லாம் வெறும் தூசிதான். இவ்வளவு பெரிய ஊழல் நடந்திருக்கிறது என்று பொதுவில் நாடு பெரிய அளவுக்கு அதிர்ச்சியடையவில்லை. எதிர்க்கட்சிகள் கூட ஒரு சடங்குக்குப் பேசிவிட்டு முடித்துக் கொண்டன. பா.ஜ.க.விற்கு இதைக் கண்டிப்பதற்கு தார்மீக தகுதியில்லை என்பதாலோ என்னவோ, ஒரு கடமைக்கு மட்டும் பேசியது. இத்தனைக்கும் மேல் மன்மோகன் சிங் அரசு இந்த ரூ. 60,000 கோடி ஊழல் குறித்து ஒன்றும் அலட்டிக் கொள்ளவில்லை.

ஸ்வான், யூனிடெக் என்ற இரு கம்பெனிகளும் உண்மையில் ''உப்புமா'' கம்பெனிகள்தான். இந்த கம்பெனிகள் எதுவும் தொலைத்தொடர்புத் துறையில் எந்தவிதமான அனுபவமோ, ஆட்பலமோ, ஏன் கட்டிடமோ, கருவிகளோ இல்லாத ''டுபாக்கூர்'' நிறுவனங்களாகும். இந்த இரண்டு நிறுவனங்களிலும் பங்குகள் வைத்திருக்கும் பினாமி நிறுவனங்கள் கருணாநிதி குடும்பத்தினருக்குச் சொந்தமானவை என்று கூறப்படுகிறது. மேலும் இந்த நிறுவனங்கள் இரண்டும் ஸ்பெக்ட்ரம் ஒதுக்கீட்டை வாங்கியபிறகு, தங்களதுப் பாதிப் பங்குகளைப் பல மடங்கு அதிகமான விலையில் கிட்டத்தட்ட 6,000 கோடி ரூபாய்க்கு விற்பனை செய்திருக்கின்றன. இதற்குக் காரணம் இவை ஸ்பெக்ட்ரம் உரிமையை மலிவு விலைக்கு வாங்கியிருப்பதால், இவற்றின் மதிப்பு பின்னாளில் பல மடங்கு ஏறியிருக்கும் என்பதுதான்.

மேலும் பல தொலைபேசித் தனியார் நிறுவன்ங்கள் எதுவும் இந்த ஊழலைக் குறித்து பெரிய அளவுக்கு புகார் எதுவும் கிளப்பவில்லை. இது டெண்டர் எடுப்பதற்கு முதலாளிகள் திருட்டுத்தனமாக சிண்டிகேட் அமைப்பதைப் போன்றது. இதன்படி இரண்டு உப்புமா கம்பெனிகளைத் தவிட்டு ரேட்டுக்கு எடுக்க வைத்து, பின்னர் அதை மாற்றிக் கொள்வது என்ற உடன்படிக்கைபடி இது நடந்திருக்கிறது. இப்படி இந்தியாவின் மிகப் பெரிய ஊழல் கனகச்சிதமாக அரங்கேறியிருக்கிறது. அதனால்தான் அமைச்சர் ராஜா இந்த முறைகேடு சட்டப்படி நடந்திருப்பதாக திரும்பத் திரும்ப ஓதி வருகிறார். சட்டப்படிதான் இந்திய மக்களின் பணம் கொள்ளையடிக்கப்பட்டிருப்பதாகத்தான் நாமும் கூறுகிறோம்.

தொலை தொடர்பு அமைச்சராக தயாநிதி மாறன் பதவியில் இருந்தபொழுதே, ரூ. 10,000 கோடி அளவிற்கு முறைகேடு நடந்திருப்பதாக அவருக்குப் பின்னர் அத்துறையின் அமைச்சரான ராஜா குற்றஞ்சாட்டினார். அப்போது மாறன் சகோதரர்கள், கருணாநிதியுடன் தகராறில் இருந்தனர். இதன் நீட்சியாக ஸ்பெக்ட்ரம் ஊழல் குறித்து மாறன்களது சன் டி.வி.யும் தினகரன் நாளேடும் அதிரடியாக ரூ. 60,000 கோடி ஊழல் குறித்து அம்பலப்படுத்தி வந்தன. இதில் முக்கி

www.padippakam.com

யமாக அமைச்சர் ராஜாவைக் குறி வைத்தே செய்திகளை வெளியிட்டு வந்தார்கள். ராஜாவும் மாறன்களது ஊடகங்கள் தேவையில்லாமல் பிரச்சினைகளைப் பெரிதுபடுத்துவதாகப் பேசி வந்தார். இதற்கிடையில் கருணாநிதி, மாறன் சகோதரர்களது துரோகத்தைக் கவிதையாய், கடிதமாய் முரசொலியில் எழுதி வந்தார். அதற்குப் பதிலடியாய் கலாநிதி மாறனது கடிதம் தாத்தாவோடு நடந்த பாகப்பிரிவினை குறித்து பல விசயங்களை அம்பலப்படுத்தியதோடு, அக்கடிதம் பகிரங்கமாக பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்டது.

இரண்டு கோடீசுவரக் குடும்பங்களும் தங்களது சொத்துக்களை வைத்துத் தகராறு நடத்த தொடங்கிய இந்த நேரத்தில்தான் ஸ்பெக்ட்ரம் ஊழல் வெளியே வந்ததும் அதில் கருணாநிதியின் பின்னணி இருப்பதும் வெளிச்சத்திற்கு வந்தது. அதன் பிறகு என்ன மாயம் நடந்ததோ, இரு குடும்பங்களும் சேர்ந்து எடுத்துக் கொண்டு போட்டோவோடு ஊடகங்களுக்கு குடும்பத் தகராறு முடிந்துபோன செய்தியைக் கொடுத்தன. இதை யோசித்துப் பார்த்தால் ஸ்பெக்ட்ரம் ஊழலில் கருணாநிதியின் குடும்பத்தினர் அடித்த ஆயிரக்கணக்கான கோடி ரூபாய் விசயம் வெளியே வரக்கூடாது என்ற ஒப்பந்தத்தின் பெயரில் மாறன்களுக்குப் பல சலுகைகள் கொடுக்கப்பட்டுப் பூசி மெழுகியிருக்கிறார்கள். அதன் பிறகு மாறன்களது ஊடகங்கள் இந்த ஊழலைப் பற்றி எதுவும் பேசாமல் அமைதி காக்கின்றன. திருமங்கலத்தில் ஸ்பெக்ட்ரம் பணம்தான் தண்ணியாய்ச் செலவழிக்கப்பட்டிருக்கிறது. அனைத்து வாக்காளர்களுக்கும் கறி விருந்தே நடத்தியிருக்கிறார்கள் என்பதிலிருந்தே இதை ஊகிக்க முடியும்.

இந்தக் காலத்தில்தான் கனிமொழிக்கு சுவிஸ் வங்கியில் கணக்கு திறக்கப்பட்டு, இந்த ஊழல் பணம் அதில் சேர்க்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. இவற்றுக்கெல்லாம் நம்மிடம் ஆதாரமில்லை என்றாலும், அடித்த கொள்ளைப் பணம் இவர்களிடம்தான் சேர்ந்திருக்க வேண்டும் என்பதில் சந்தேகமில்லை. மேலும், கருணாநிதி குடும்பத்தினர் அடைந்த ஆதாயம் காங்கிரசு அரசின் ஆசீர்வாதத்தோடுதான் நடந்திருக்க வேண்டுமென்பதிலும், அதில் ஒரு பங்கு காங்கிரசுக்கும் சென்றிருக்கலாம் எனவும் உறுதியாகக் கூற முடியும்.

60,000 கோடி ரூபாயைக் கமுக்கமாக அடித்துவிட்டு இந்த ஊழல் பெருச்சாளிகள் கவுரவமாக உலா வருகின்றன என்பதை நாட்டு மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும். மக்கள் ஒரு ரூபாய்க்கு பேசும் ஒரு உள்ளூர் அழைப்புக்குப் பயன்படும் செல்பேசி சேவையில் இத்தகைய ஊழலும் கொள்ளையும் கலந்திருக்கிறது என்பதை அறிய வேண்டும். செல்பேசி சேவை மலிவாகக் கிடைக்கிறது என்று மூட நம்பிக்கை நிறைந்திருக்கும் நாட்டில்தான், இந்த மலை முழுங்கி மகாதேவன்களது சாம்ராஜ்ஜியம் நடந்து வருகிறது.

• இளநம்பி

# தறிப்பட்டறையா? கொத்தடிமைக் கூடாரமா?

முன்பணமாக ஓரிரு ஆயிரம் ரூபாய்களை வாங்கிவிட்டு, அதற்கு வட்டியோடு சேர்த்து அசலை அடைக்க முடியாமல் பல காலமாக ஆயிரக்கணக்கான தொழிலாளிகள் ஈரோடு - நாமக்கல் மாவட்டங்களின் தறிக்கூடங்களில் கொத்தடிமைகளாக உழன்று வருகின்றனர். இப்படிப் பல கொத்தடிமைக் கூடாரங்கள் போலீசு மற்றும் அதிகார வர்க்கத்தின் துணையோடு, அனைத்து ஓட்டுக்கட்சித் தலைவர்கள் - உள்ளூர் குண்டர்களின் பாதுகாப்போடு நடத்தப்பட்டு வருகின்றன. 117 தறிகள் போட்டு இத்தகைய கொத்தடிமைக் கூடாரங்களில் ஒன்றினை நடத்திவரும் மிகப் பெரிய முதலாளிதான், திருச்செங்கோடு அருகேயுள்ள பரமசிவ கவுண்டம்பாளையத்தைச் சேர்ந்த செல்லப்ப கவுண்டர்.

இவனிடம் ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பு ரூ. 4000 முன்பணமாக வாங்கி, கொத்தடிமையாகக் குடும்பத்தோடு உழன்று வந்தார், ஈரோடு - மாணிக்கம்பாளையத்தைச் சேர்ந்த சாமிநாதன் என்ற தொழிலாளி. அவரது குழந்தைகளைத் தார் சுற்றச் சொல்லி அடித்தும், அவரை 16 மணி நேரத்துக்கும் மேலாக வேலை செய்யச் சொல்லிச் சவுக்கால் அடித்தும் வதைத்ததால், சாமிநாதன் தனது குடும்பதோடு அங்கிருந்து தப்பி வந்துவிட்டார்.

அவர் ஈரோடு மாணிக்கம்பாளையத்தில் இருப்பதை அறிந்த செல்லப்பன், 12 பேர் கொண்ட தனது அடியாட்களுடன் 10.1.09 அன்று ஜீப்பில் வந்து, அவர் வேலை செய்து கொண்டிருந்த தறிக்கூடத்திலிருந்து அவரை இழுத்து வந்து உருட்டுக் கட்டையால் அடித்து, கடத்திச் சென்றான். இப்பகுதியில் இயங்கி வரும் புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி இது பற்றி தகவல் அறிந்ததும், உடனடியாக சாமிநாதனின் மனைவியை ஈரோடு - வடக்கு போலீசு நிலையத்தில் புகார் கொடுக்க வைத்து, மாவட்ட போலீசு கண்காணிப்பாளருக்கும் தொலைபேசி வழியே புகார் கொடுத்து நடவடிக்கை எடுக்கக் கோரியது. சாமிநாதனைப் பத்திரமாக மீட்டு செல்லப்பன் கும்பலைக் கைது செய்யக்கோரி பு.ஜ.தொ.மு. போலீசாரிடம் தொடர்ந்து போராடியதன் விளைவாக, அடுத்த சில மணி நேரத்தில் அத்தொழிலாளி மீட்கப்பட்டார். இருப்பினும், கொத்தடிமைக் கூடாரத்தை நடத்தி வந்த முதலாளி செல்லப்பன் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்காமல் போலீசு தட்டிக் கழித்தது. செல்லப்பனைக் காப்பாற்றத் துடிக்கும் போலீசை அம்பலப்படுத்தி பு.ஜ.தொ.மு. அடுத்த கட்ட நடவடிக்கையில் இறங்க முற்பட்டதும், வேறு வழியின்றி செல்லப்பன் மீது முதல் தகவல் அறிக்கையைப் போலீசு பதிவு செய்தனர்.



போலீசு நிலையத்தில் குழந்தைகளுடன் புகார் கொடுத்த சாமிநாதனின் மனைவி கௌரி.

பணபலமும் சாதிபலமும் அதிகார பலமும் கொண்ட மிகப் பெரிய முதலாளியிடமிருந்து தொழிலாளியைப் பத்திரமாக மீட்டதோடு, அவன் மீது போலீசு நிலையத்தில் புகாரையும் பதிய வைத்த இந் நடவடிக்கையானது, இப்பகுதியெங்கும் தொழிலாளிகளிடம் பெருத்த வரவேற்பைப் பெற்று, பு.ஜ.தொ.மு. மீது மிகுந்த நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது. ஈரோடு மாவட்ட நாளேடுகளில் இச்செய்தி பரபரப்பாக வெளியாகி, செல்லப்பன் கும்பல் அம்பலப்பட்டு தனிமைப்பட்டு போயுள்ளது. இக்கொடுங்கோல் கும்பல் மீது சட்டரீதியாக வழக்கு தொடரவும், இத்தகைய கொத்தடிமைக் கூடாரங்களை ஒழித்துக் கட்டி தொழிலாளர்களின் உரிமையை நிலைநாட்டவும் பு.ஜ.தொ.மு. முயற்சித்து வருகிறது.

- பு.ஜ. செய்தியாளர்.

Owned and Published by R. SHANMUGARAJ, from Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024 and Printed by him at EZHIL PRINTS, Shop No. 110, IInd Floor, 63, N.S.K. Salai, Kodambakkam, Chennai-600 024. Editor: R. SHANMUGARAJ.

படிப்பகம்

www.padippakam.com



மாநாட்டில் ம.க.இ.க.வின் புரட்சிகர கலை நிகழ்ச்சி.

2-ஆம் பக்கத் தொடர்ச்சி

அமைப்பாக வேண்டும், மாநிலம் விட்டு மாநிலம் வந்து வேலை செய்யும் தொழிலாளிகளையும் அணிதிரட்ட வேண்டும். புதிய போராட்ட வடிவங்களையும், முறைகளையும் கையாள வேண்டும் என்று வலியுறுத்தினார்.

மதிய அமர்வில் பு.ஜ.தொ.மு. மாநிலப் பொதுச் செயலர் தோழர் சுப.தங்கராசு சிறப்புரையாற்றினார். தனியார்மயம், தாராளமயம், உலகமயம் தொழிலாளிகளின் சமூக பாதுகாப்பைப் பிடுங்கி எறிந்து வருகிறது; தொழிலாளிகளைக் கொத்தடிமைகளாக்கி வருகிறது என்று விளக்கி, இந்த உலகமயத்தை எதிர்த்து முறியடிக்க அணிதிரள வேண்டும் என்று பேசினார்.

கருத்தரங்கில் இறுதியாக உரையாற்றினார் மாநிலப் பொருளாளர் தோழர் பா.விஜயகுமார். முதலாளித்துவ பொருளாதார நெருக்கடியின் விளைவுகளையும், தொழிலாளிகளின் நிலைமையையும் விளக்கி, வக்கற்ற முதலாளித்துவத்தை வீழ்த்த வேண்டும் என்றும், இதற்கு மாற்று கம்யூனிசமே என்றும் பேசினார்.

சிறப்புரைகளுக்கு இடையே தொழிலாளிகளின் நேருரை நிகழ்த்தப்பட்டது. சத்யபாமா பல்கலைக் கழக வாகன ஓட்டுநர்கள் சங்கம், நெல்காஸ்ட் புதிய ஜனநாயகத் தொழிலாளர் சங்கம் ஆகியவற்றைச் சேர்ந்த உறுப்பினர்கள் தங்களது நிறுவனங்களில் சங்கத்தைத் தொடங்கப் போராடிய பொழுது கிடைத்த அனுபவங்களை எடுத்துக் கூறினார்கள். மேலும், ஒரிசா மாநிலத்தைச் சேர்ந்த சுதான் சுதாஸ் என்ற தொழிலாளி தன்னுடைய அனுபவத்தைக் கூறுகையில், வாழ வழியற்று இங்கு வரும் எங்களைக் கொடுமையாகச் சுரண்டுகிறார்கள்; உள்ளூர்த் தொழிலாளிகளை எங்களுக்கு எதிராகத் தூண்டி விடுகிறார்கள்; இதற்கும் மேலாக அனாதைப் பிணங்களாக எங்களைத் தூக்கி எறியும் நிலைமையும் உள்ளது. இதை மாற்றும் வகையில் பு.ஜ.தொ.மு. எங்களை மற்ற தொழிலாளிகளோடு சேர்த்து சங்கத்தில் இணைத்துள்ளது. இது எங்களுக்கு நம்பிக்கையூட்டும் விதமாக உள்ளது என்று குறிப்பிட்டார்.

மாநாட்டில் தொழிற் சங்க உரிமைகளைப் பாதுகாக்கும் வகையிலும், பொருளாதார சீர்திருத்தம் என்ற பெயரில் திணிக்கப்படும் தொழிலாளி வர்க்க விரோதச் சட்டங்களையும்; தொழிலாளர்களைக் கொத்தடிமைகளாக்கும் பணி நிலைமைகளையும் எதிர்த்துப் போராட்டத்தை முன்னெடுக்கும் வகையிலும் 16 தீர்மானங்கள் பலத்த கரவொலிகளுக்கு இடையில் நிறைவேற்றப்பட்டன.

மாலை 6.30 மணிக்கு அம்பத்தூர் பழைய நகரப் பேருந்து நிலைய மார்கெட் அருகே பொதுக்கூட்டம் நடந்தது. இந்த பொதுக்கூட்டத்திற்கு பு.ஜ.தொ.மு.வின் அமைப்புச் செயலாளர் தோழர் சி.வெற்றிவேல்செழியன் தலைமை தாங்கினார்.

ம.க.இ.க.வின். மாநிலப் பொதுச் செயலர் தோழர் மருதையன், இப்பொதுக் கூட்டத்தில் சிறப்புரையாற்றினார். முதலாளித்துவ ஊடகங்களில் பயங்கரவாதமாகச் சித்தரிக்கப்படுவதையெல்லாம் விட பல கோடி மக்களை வறுமையிலும், பட்டினியிலும் தள்ளும் முதலாளித்துவம்தான் பயங்கரவாதம் என்று தொடங்கி, இந்த முதலாளித்துதவ பயங்கரவாதத்தைப் புரிந்து கொள்ள விடாமல் பல்வேறு வழிகளில் தொழிலாளிகளின் சிந்தனை சிதறடிக்கப் படுவதையும் சுட்டிக் காட்டினார். வர்க்கமாய் ஒன்றிணைந்து முதலாளித்துவத்தை அடித்து வீழ்த்துவதற்கான தொடக்கம்தான் இந்த மாநாடு என்று அறைகூவல் விடுத்தார்.

மாநாட்டின் அறைகூவலை எதிரொலிக்கும் வண்ணம் நடைபெற்ற ம.க.இ.க. மையக் கலைக்குழுவின் புரட்சிகர கலை நிகழ்ச்சி வர்க்க உணர்வைத் தட்டி எழுப்பியது. சுமார் 5,000 தொழிலாளிகள் ஒன்று திரண்டு நடத்திய இம்மாநாடு, முதலாளித்துவ பயங்கரவாதத்திற்கு எதிரான போர்க்குரலாக ஒலித்தது.

**தகவல்:**
**புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி, தமிழ்நாடு.**



தோழர் துரை. சண்முகம்



தோழர் சி. பாலன்




தோழர் சுப. தங்கராசு



தோழர் அ. முகுந்தன்

தோழர் மருதையன்




படிப்பகம்

www.padippakam.com

PUTHIYA JANANAYAGAM (Tamil Monthly) PUBLISHED ON 1st OF EVERY MONTH
REGISTERED WITH THE REGISTRAR OF NEWS PAPERS FOR INDIA UNDER No: 42648/85
Regd. No: TN/CC(S)Dn/190/09-11 Licenced to Post without pre-payment WPP No: TN/PMG/CCR/WPP-562/09-11

# ஈழத் தமிழ் மக்கள் மீதான இனவெறிப் போரில் சிங்கள பாசிச அரசுடன் கைகோர்த்து நிற்கும் இந்திய அரசைக் கண்டித்து

**சென்னை-சைதை பனகல் மாளிகை அருகே**
**26.1.09 அன்று,**
**ம.க.இ.க; வி.வி.மு; பு.மா.இ.மு; பு.ஜ.தொ.மு; பெ.வி.மு;**
**மனித உரிமை பாதுகாப்பு மையம்**
**ஆகிய அமைப்புகள் இணைந்து நடத்திய**

# மாபெரும் ஆர்ப்பாட்டம்

ஈழத் தமிழ் மக்கள் மீதான
சிங்கள இனவெறி அரசின்
இன ஒடுக்குமுறைப் போரை
தடுத்து நிறுத்துவோம்!

ஈழத் தமிழ் மக்களின்
பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய
சுயநிர்ணய உரிமைக்குக்
குரல் கொடுப்போம்!

டாடா-அம்பானி
தரகு முதலாளிகள் நலனுக்காக
சிங்கள இனவெறிப் போருக்குத்
துணை நிற்கும் இந்திய அரசின்
பிராந்திய மேலாதிக்கத்தை முறியடிப்போம்!

இந்திய அரசே!
சிங்கள இராணுவத்துக்கு
ஆயுதம், நிதி, பயிற்சி
அளிப்பதை நிறுத்து!
இலங்கை அரசுடன்
தூதரக உறவுகளை முறி!





இந்த ஆர்ப்பாட்டத்தின் காணொளிக்கு:
http://vinavu.wordpress.com/2009/01/26/eelam12






படிப்பகம்